
விலை ரூபா 20 | பக்கங்கள் 28

# உதயன்

சுடர் 31 | கதிர் 035 | வள்ளுவர் ஆண்டு 2046 | மார்கழி 15, வியாழக்கிழமை 31.12.2015

## ஒதுக்கிய நிதியை நாம் தீட்டிய திட்டங்களுக்கு செலவு செய்யவில்லை

### வடக்கு முதலமைச்சர் ஒப்புதல்



யாழ்ப்பாணம், டிசெம்பர் 31
வடக்குக்கு ஒதுக்கிய நிதியைச் செலவு செய்து முடிக்கவேண்டும் என்பதற்காக, தீட்டிய திட்டங்களை விடுத்து வேறு திட்டங்களுக்குச் செலவிட்டுள்ளோம். அடுத்த ஆண்டு இவ்வாறு இடம்பெறாது. இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண பேரவைச் செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட ஒன்றுகூடல் கிறீன்கிறாஸ் விடுதியில் நேற்று மதியம் இடம்பெற்றது. மாகாண சபைக்குட்பட்ட அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்ட சகலரும் கலந்துகொண்டி பக். 24

## சிற்றம்பலம் மீது ஒழுக்காற்று நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 31
கட்சியின் அனுமதியின்றி தமிழ் மக்கள் பேரவைக் கூட்டங்களுக்குச் சென்ற பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் மீது கட்சியின் செயற்குழு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்டக் கிளை நேற்றுத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இந்தத் தீர்மானம் எடுக்கும் கூட்டத்தில் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் கலந்துகொண் பக். 24

### முச்சந்தி முரளி



இரவல் புடைவையில இது நல்ல கொய்யகம்...

## வடமாகாண சபை கலைப்பு என்ற செய்தி முழுப் பொய்

யாழ்ப்பாணம், டிசெ. 31
வடக்கு மாகாண சபையைக் கலைக்கப் போவதாக ஊடகங்களில் வெளிவந்த செய்தி பொய்யானது. சட்டம் தொடர்பிலான எந்தவொரு விளக்கமும் இல்லாமல் பரபரப்புக்காகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அது நியாயமற்ற செய்தி.

இவ்வாறு வடக்கு மாகாண சபையில் நேற்றுத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையைக் கலைக்க அரசுக்குச் சில தமிழ்த் தலைமைகளால் சிபாரிசு செய்யப்பட்டுள்ளதாக, உதயன் தவிர்ந்த வேறு ஊடகம் ஒன்றில் செய்தி பிரசுரமாகியிருந்தது. இந்தச் செய்தி தொடர்பில், சிறப்புரிமைப் பிரச்சினையை மாகாண சபையில் நேற்றுக் கிளப்பினார் ஆளும் கட்சி உறுப்பினர் கே.சயந்தன்.

'உண்மையில் அந்தச் செய்தி வடக்கு மாகாண சபையினுடைய ஒட்டுமொத்த சிறப்புரிமையை மீறுவதாக அமைந்துள்ளது. ஏனென்றால் ஒரு மாகாண சபையைக்கலைப்பதற்குரிய ஆளுநரின் பக். 23

## விடுவிக்கப்பட்ட பகுதிகளில் பொதுமக்கள் நேற்று வழிபாடு

யாழ்ப்பாணம், டிசெ. 31
இராணுவத்தினரின் உயர்பாதுகாப்புவலயமாகவிருந்து நேற்று முன் தினம் விடுவிக்கப்பட்ட வலி. வடக்கு மற்றும் வலி.கிழக்குப் பகுதிகளில் அமைந்துள்ள ஆலயங்களில் பொதுமக்கள் நேற்று வழிபாடுகளை மேற்கொண்டனர்.

பலாலி பத்திரகாளியம்மன் ஆலயத்தில் 1990 ஆம் ஆண்டு ஆண்டு விட்டுச் சென்ற பொருள்களான கர்ப்பூரத் தட்டு, செப்பு விக்கிரகம் என்பன அப்படியே இருந்துள்ளன. விடுவிக் கப்பட்ட பகுதிகளுக்குச் சென்றிருந்த மக்கள் கர்ப்பூரம், தேங்காய் என்பன கொண்டுசென்று வழிபாடுகளில் ஈடு பட்டனர்.

இதேவேளை, இன்னும் விடுவிக்கப்படாமல் பக். 23



## 45 சதவீத நிதியை 58 நாள்களில் செலவு செய்தது மாகாண சபை

யாழ்ப்பாணம், டிசெ. 31
வடக்கு மாகாண சபையினால் 58 நாள்களில் 45 சதவீதமான நிதி செலவு செய்யப்பட்டு முடிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்டிருந்த நிதியில் 38 சதவீதமான நிதி கடந்த ஒக்ரோபர் 31 ஆம் திகதி வரை செலவு செய்யப்பட்டிருப்பதாக பிரதம செயலாளர் அலுவலகத்தினால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் மாகாணத்துக்கு ஒதுக்கப் பக். 24

## ஆளும் தரப்பின் உறுப்பினர்களை சந்திக்க முதல்வருக்கு நேரமில்லை

யாழ்ப்பாணம், டிசெ. 31
வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்களுடனான சந்திப்புக்கு நேரமில்லை என்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளதாக, ஆளும் கட்சி உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்கள் நவம்பர் மாதம் 19 ஆம் திகதி தனித்து முதலமைச்சருடன் சந்திப்பு நடத்தியிருந்தனர். இதில் அமைச்சர்கள் - அவைத் தலைவர் பங்குபற்றவில்லை. இதன் பின்னர் மீண்டும் டிசெம் பர் 17 ஆம் பக். 24

## உயர்தர பெறுபேறு ஞாயிறன்று

கொழும்பு, டிசெ. 31
கடந்த ஓகஸ்ட்டில் நடைபெற்ற ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பக். 24

## உருவாகவுள்ள புதிய அரசமைப்பில் தமிழ்-முஸ்லிம்களின் அபிலாசைகள்

### ஒருமித்த கருத்தை முன்வைக்க கூட்டமைப்பு-மு.கா. தீர்மானம்



கொழும்பு, டிசெ 31
புதிய அரசமைப்பில் தமிழ் முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவம், இருப்பு, பாதுகாப்பு மற்றும் அரசியல் தீர்வு போன்றவற்றைக் கருத்திற்கொண்டு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிர பக். 24

## வரக்காப்பொல விபத்தில் 6 பேர் சாவு

கொழும்பு, டிசெ. 31
வரக்காப்பொல, தும்மலதெனிய பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற கோர வாகன விபத்தில் இரு குழந்தைகள் உட்பட 6 பேர் உயிரிழந்தனர். அத்து டன் 22 பேர் காயமடைந்த நிலையில் சிகிச்சைபெற்று வரு கின்றனர். இவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக இருக்கின்றது.



சம்மாந்துறையிலிருந்து பக். 23



www.dfcc.lk

சேமிப்பு உங்களிடமிருந்து - ஆயிரம் எங்களிடமிருந்து

2016 ஜனவரி முதலாம் திகதி உங்கள் 18 வயதிற்குட்பட்ட பிள்ளைகளுக்காக DFCC வங்கியில் ஆரம்பிக்கப்படும் புதிய சிறுவர் சேமிப்புக் கணக்கிற்கு ஆயிரம் ரூபாய் வங்கியிடமிருந்து.

அழையுங்கள்: 0112350000

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 கிராம சேவகர் பிரிவுகளுக்கே மக்கள் செல்வதற்கு அனுமதி

## நேற்றுமுன்தினம் விடுவிக்கப்பட்ட 7 கிராம சேவகர் பிரிவுகளில்

யாழ்ப்பாணம், டிசெ.31
வலிகாமம் வடக்கின் உயர் பாதுகாப்பு வலயத்தில் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்ட பகுதியில் 5 கிராம சேவகர் பிரிவுகளுக்கே மக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆயினும் பலாலி மேற்கு (ஜே/252), காங்கேசன்துறை தெற்கு (ஜே/235) ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

பளை வீமன்காமம் வடக்கு (ஜே/236), தையிட்டி தெற்கு (ஜே/250), பலாலி கிழக்கு (ஜே/253), பலாலி வடக்கு(ஜே/254), பலாலி தெற்கு (ஜே/252), காங்கேசன்துறை தெற்கு (ஜே/235) மற்றும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த வளலாய் (ஜே/284) ஆகிய கிராம சேவகர் பிரிவுகளும் விடுவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. விடுவிக்கப்பட்ட பகுதிகள் அனைத்துக்கும் நேற்று மக்கள் செல்வதற்கு இராணுவம் அனுமதி வழங்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இருந்தபோதும் இரு கிராம சேவகர் பிரிவுகளில் இராணுவத்தினர் தமது விடுவிப்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்று தெரிவித்து அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இன்றே அந்தப் பகுதிகளுக்குச் செல்வதற்கு இராணுவம் அனுமதி வழங்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-ரி2)

# இணைந்த சேவை பதவிகளுக்கு வடக்கில் 700 பேருக்கு நியமனம்

*வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், டிசெ. 31
வடக்கு மாகாணத்தில் அடுத்த வருடம் இணைந்த சேவை பதவிகளுக்காக 700 நியமனங்கள் வழங்கப்படவுள்ளன என்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபைக்கு அனுமதிக்கப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகள் மற்றும் நேர்முகத்தேர்வு ஆகியவற்றின் அடிப்படையில் இணைந்த சேவைப் பதவிகளில் உள்ள வெற்றிடங்களே நிரப்பப்படவுள்ளன என்று அவர் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வின் போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் தெரிவித்ததாவது–

நாளை முதல் உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் பிரதேச சபைச் செயலாளர்கள், நிர்வாக உத்தியோகத்தர்களாக 29 உத்தியோகத்தர்களும், திணைக்களங்களின் நிர்வாக உத்தியோகத்தர்களாக 25 உத்தியோகத்தர்களுமாக மொத்தம் 54 முகாமைத்துவ உதவியாளர் அதிசிறப்பு வகுப்பு பதவி உயர்வின் மூலம் நியமிக்கப்படவுள்ளனர்.

அவர்களில் யாழ்.மாவட்டத்துக்கு 39 பேரும், கிளிநொச்சி - முல்லைத்தீவுக்கு 3 பேரும், வவுனியாவுக்கு 4 பேரும், மன்னாருக்கு 5 பேருமாக நியமிக்கப்படவுள்ளனர்.

326 பட்டதாரிப் பயிலுநர்கள், மத்திய அரசால் சமர்ப்பிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல் அடிப்படையில் நேர்முகத்தேர்வுக்கு உட்படுத்தப்பட்டு நியமிக்கப்படவுள்ளனர். அவர்களில், யாழ்.மாவட்டத்திற்கு 58 பேரும், கிளிநொச்சி - முல்லைத்தீவுக்கு தலா 72 பேரும், வவுனியா - மன்னாருக்கு தலா 62 பேருமாக 326 பேர் நியமிக்கப்படவுள்ளனர்.

15 பட்டதாரிகள், மத்திய அரசின் அனுமதியின் அடிப்படையில், நிரந்தர நியமனம் பெறவுள்ளனர்.

முகாமைத்துவ உதவியாளர்களாக மட்டுப்படுத்தப்பட்ட போட்டி பரீட்சையின் அடிப்படையில் 47 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவுள்ளனர். அவர்களில் யாழ்.மாவட்டத்தில் 28 பேரும், கிளிநொச்சியில் 5 பேரும், முல்லைத்தீவில் ஒருவரும், வவுனியாவில் 10 பேரும், மன்னாரில் 3 பேருமாக நியமிக்கப்படவுள்ளனர்.

திறந்த போட்டி பரீட்சையின் அடிப்படையில் 126 பரீட்சார்த்திகள் நியமனம் பெறவுள்ளனர். அவர்களில் யாழ்.மாவட்டத்தில் 58 பேரும், கிளிநொச்சி - மன்னாரில் தலா 16 பேரும், முல்லைத்தீவு - வவுனியாவில் தலா 18 பேரும் நியமிக்கப்படவுள்ளனர்.

இது தவிர்ந்து சாரதிகளுக்கான போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்ட ஏறத்தாழ 97 பரீட்சார்த்திகளும் நியமனம் பெறவுள்ளனர். இவர்களில் யாழ்ப்பாணத்தில் 44 பேரும், கிளிநொச்சியில் 13 பேரும், முல்லைத்தீவில் 19 பேரும், வவுனியாவில் 9 பேரும், மன்னாரில் 12 பேரும் நியமிக்கப்படவுள்ளனர்.

இணைந்த சேவை தவிர்ந்து திணைக்கள சேவைகளுக்கான ஆளணி வெற்றிடங்களில் விளையாட்டு உத்தியோகத்தர் பதவிக்கான 24 பெரும், கலாசார உத்தியோகத்தர்களாக 11 பேரும் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த வகையில் 700 வெற்றிடங்கள் வடக்கு மாகாண சபையின் கீழ் நிரப்பப்படவுள்ளன - என்றார். (ற-5, ரி5)

# கடும் வாக்குவாதங்களின் முடிவில் கல்வி நியதிச் சட்டத்துக்கு அங்கீகாரம்

## வடக்கு மாகாண சபையில்

யாழ்ப்பாணம், டிசெ. 31
வடக்கு மாகாண கல்வி நியதிச் சட்டத்தில் ஆளுநர் மேற்கொண்ட திருத்தங்களை அங்கீகரிப்பது தொடர்பில், சபையில் நேற்று கடும் வாக்கு வாதம் இடம்பெற்றது. இருப்பினும் இறுதியில் ஒரு சில திருத்தங்களுடன் சபையால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

வடக்கு மாகாண சபையின் விசேட அமர்வு நேற்று இடம்பெற்றது. இதன் போதே, கல்வி நியதிச் சட்டத்தின் திருத்தம் சபையில் சமர்பிக்கப்பட்டது.

வடக்கு மாகாண சபையின் ஏப்ரல் மாத அமர்வில், கல்வி அமைச்சின் நியதிச் சட்டம் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. மே மாதம் 19 ஆம் திகதி வடக்கு மாகாண ஆளுநரின் அங்கீகாரத்துக்காக அனுப்பப்பட்டிருந்தது. ஆளுநர் அதனை சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பியிருந்தார். சட்டமா அதிபர் திணைக்களம், மாகாண சபையால் நிறைவேற்றப்பட்டிருந்த நியதிச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு அதனைத் திருப்பி அனுப்பியுள்ளது.

திருத்தங்களுடன் அனுப்பி வைக்கப்பட்ட நியதிச் சட்டத்தின் மீதே நேற்று விவாதம் இடம் பெற்றது. நியதிச் சட்டம் தனித்து ஆங்கில மொழியில் வழங்கப்பட்டமைக்கு உறுப்பினர்கள் எதிர்ப்பு வெளியிட்டனர். நியதிச் சட்டத்தின் மேலாதிக்க மொழியாக தமிழ் இருக்கும் போது, ஆங்கில மொழியில் விவாதிப்பது சரியா என்றும் உறுப்பினர்கள் கேள்வி எழுப்பினர்.

மாகாண சபை நியதிச் சட்டத்தை நிறைவேற்றி அனுப்பினால், அந்த நியதிச் சட்டத்தில் அரசியலமைப்பை மீறும் சரத்துக்கள் ஏதும் குறிப்பிட்டிருந்தால் அதனைச் சுட்டிக்காட்டி ஆளுநர் மாகாண சபைக்கு அனுப்பி வைக்க முடியும். இந்தத் திருத் தங்கள் செய்ய வேண்டும், இவ் வாறு செய்ய வேண்டும் என்று அவர் குறிப்பிட முடியாது என்பதையும் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

மேலும் திருத்தங்களின் போதும் உறுப்பினர்கள் விவாதத்தில் ஈடுபட்டனர். இறுதியில் திருத்தங்களுடன் நியதிச் சட்டம் மாகாண சபையால் அங்கீகரிக்கப்பட்டது. (ற-5, ரி5)

# இறந்த கிராம சேவகருக்கு நீதிமன்று அழைப்பாணை

*சாட்சியமளிக்க வருமாறு*

யாழ்ப்பாணம், டிசெ.31
தம்பாட்டியில் த.தே.கூட்டமைப்பினர் மீது 2001ஆம் ஆண்டு இடம்பெற்ற தாக்குதல் தொடர்பில் சாட்சியமளிக்க வருமாறு இறந்த கிராம சேவகர் ஒருவருக்கு திருகோணமலை நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது.

தம்பாட்டிப் பகுதியில் 2001-11-28 அன்று தேர்தல் பரப்புரைக்காகச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மீது நடத்தப்பட்ட கொலை வெறித் தாக்குதலின்போது படுகாயமடைந்தவர்களில் ஒருவரான திருநெல்வேலிப் பகுதியைச் சேர்ந்த கிராம சேவகரான சிவராசாவும் படுகாயமடைந்திருந்தார்.

அவர் சுகவீனம் காரணமா2011 உயிரிழந்திருந்தார்.

இந்தநிலையில் குறித்த தாக்குதல் தொடர்பான வழக்கு எதிர்வரும் 7ஆம் திகதி திருகோணமலை நீதிமன்றில் நடைபெறவுள்ளது. அதில் சாட்சியமளிக்கவே இறந்த கிராம சேவகருக்கும் அழைப்பாணை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-101)

# இலவச தையல் வகுப்புக்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 31
இலவச தையல் தொழிற்பயிற்சி வகுப்புக்கள் சண்டிலிப்பாய் வலி.தென்மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளன தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளன.

6 மாத காலங்கள் நடைபெறும் பயிற்சி நெறி முடிவில் சான்றிதமுடன் தொழில் வழிகாட்டலும் மேற்கொள்ளப்படும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பயிற்சி பெற விரும்பும் 18-29 வயதுக்கு இடைப்பட்டவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன என்றும், தகுதி வாய்ந்த ஆசிரியர்களிடம் இருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற-10)

# வற்றாப்பளை – கேப்பாப்பிலவு வீதி மக்கள் பாவனைக்கு விடப்பட வேண்டும்

*நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி வலியுறுத்து*

கிளிநொச்சி, டிசெ.31
இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள வற்றாப்பளையில் இருந்து கேப்பாப்பிலவு வரையான வீதி காப்பெற் வீதியாக புனரமைக்கப்பட்டதன் பின்னர் பொதுமக்கள் பாவனைக்காக திறந்துவிடப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்காந்தராசா வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் கேப்பாப்பிலவில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பொதுமக்களின் காணிகள், பாடசாலை பொதுமண்டபம், கோயில்கள், வீதிகள் என்பனவற்றை உள்ளடக்கியதாக காணப்படும் பெருமளவான நிலப்பரப்புக்களும் விடுவிக்கப்பட்டு எம் மக்கள் தமது சொந்த நிலங்களில் இயல்பு வாழ்க்கை வாழ வழியேற்படுத்தப்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினரால் மட்டும் உபயோகிக்கப்படும் வற்றாப்பளை - கேப்பாப்பிலவு வீதி காப்பெற் வீதியாகப் புனரமைக்கப்படுவது தொடர்பில் அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது–

இந்த வீதி மக்கள் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படாத நிலையில் இப்பகுதி மக்கள் தமது போக்குவரத்துக்கு இராணுவத்தினரால் அமைக்கப்பட்டுள்ள தூரம் கூடிய செப்பனிடப்படாத பாதுகாப்பற்ற மாற்று வழியையே பயன்படுத்தி வருகின்றனர். வீதி அபிவிருத் தித் திணைக்களத்தால் காப்பெற் வீதியாக தரமுயர்த்தப்படவுள்ள வற்றாப்பளையில் இருந்து கேப்பாப்பிலவு வரையான வீதி புனரமைக்கப்பட்டதன் பின்பு மக்கள் பாவனைக்காக திறந்துவிடப்பட வேண்டும்.

எமது மக்களின் காணிகளும் நிலங்களும் இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பிற்குள் தொடர்ச்சியாக இருந்து வரும் நிலையானது நல்லாட்சி அரசுக் கோட்பாட்டுக்கு எதிர்மறையான இயல்புகளையே வெளிப்படுத்துகின்றது. இது தமிழ் மக்களின் மனங்களில் இந்த அரசு மீது அதிருப்தியை ஏற்படுத்துகின்றது. - என்றார். (ற-21,ரி7)

# பேராதனை கலைப்பீடம் ஜன.5 ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.31
2014ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பேராதனைப் பல்கலைக்கழக கலைப் பீடத்துக்குத் தெரிவாகியுள்ள பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு பதிவு செய்த புதிய மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் ஜனவரி மாதம் 5ஆம் திகதி மு.ப 8.30 மணிக்கு ஆரம்பமாவுள்ளது என்றும், குறித்த தினத்தில் புதிய மாணவர்களை கலைப்பீடத்தில் சமூகமளிக்குமாறும் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடப் பீடாதிபதி தெரிவித்துள்ளார். (ற-10)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிராந்தியங்களின் கூட்டு என்பதில் விளக்கமில்லை

## சொல்கிறார் வடக்கு முதல்வர்

யாழ்ப்பாணம், டிசெ. 30

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கையில் பிராந்தியங்களின் கூட்டு என்ற அடிப்படையில் தீர்வு காணப்படும் என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால் பிராந்தியங் களின்கூட்டுஎன்பதற்கு அரசியல் ரீதியான விளக்கம் - வியாக்கியா னம் எதுவும் இல்லை என்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.



தமிழ் மக்கள் பேரவை யின் இரண்டாவது கூட் டம் கடந்த ஞாயிற்றுக் கிழமை, யாழ்.பொது நூலகத்தில் இடம்பெற்றது. இதன்போது அரசியல் தீர்வு தொடர்பில் உபகுழு ஒன்று நியமிக்கப்பட்டது. இதன் போதான விவாதத்தில் கருத்துத் தெரிவிக் கையிலேயே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள் ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, நாடாளுமன்றத் தேர்தலின்போது, தமது தேர்தல் அறிக்கையில் பிராந்தியங்களின் கூட்டு என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருந்தது. இந்த வார்த்தைக்கு அரசியல் ரீதியான விளக்கம் - வியாக்கி யானம் இல்லை. இத னால் இதனூடான தீர்வு என்பது எதனைக் குறிக்கின்றது என்பது தெரியாது.

சமஷ்டி அடிப்படை யிலான தீர்வுத் திட்டமே முன்வைக்கப்பட வேண்டும். அதற்குரிய வகையிலேயே எமது செயற்றிட்டங்கள் முன் னெடுக்கப்படவேண்டும். சமஷ்டி தொடர்பில் சிங் கள மக்கள் மத்தியில் குழப்பங்கள் நிலவு கின்றன. அதனைத் தெளிவுபடுத்தும் நடவடிக்கையையும் நாம் முன்னெடுக்க வேண்டும். இவ்வாறு முதல மைச்சர், இந்தப் பேரவைக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்துள்ளார்.

(த-5)

# 2015 இலங்கைக்கு ஜனநாயக வெற்றி

## *ஜோன் கெரி கருத்து*

வோஷிங்டன், டிசெ.30

2015ஆம் ஆண்டு இலங்கையிலும் உலகின் ஏனைய சில நாடுக ளிலும், மிகவும் முக்கியமான ஜனநாயக வெற்றிகள் கிடைத்திருப்ப தாக, அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி தெரிவித்துள்ளார்.

2015ஆம் ஆண்டு நிறைவடையும் நிலையில், பொஸ்டன் குளோப் இதழுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே ஜோன் கெரி இவ்வாறு கூறியுள்ளார்.

கொந்தளிப்பும், துன்பங்களும் இருந்த போதிலும், கடினமான பிரச்சினைகளையும் சமாளிக்க உலக சமூகம் ஒன்றிணையும் என்ற நம்பிக்கையைத் தந்த ஆண்டாக 2015 ஆம் ஆண்டு அமைந்திருக்கிறது.

இலங்கை, நைஜீரியா, பர்மா, வெனிசுவேலா உள்ளிட்ட நாடுகளில் மிகவும் முக்கியமான ஜனநாயக வெற்றிகள் கிடைத்திருக்கின்றன என்றும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

(த-வ)

**ஆண்/பெண் விற்பனையாளர் தேவை**
ஆங்கில அறிவும் கணினி அறிவும் கொண்ட யாழ். மாநகர சபை அண்மையாக இருத்தல் வேண்டும்.
வேலை நேரம்:- 8.00am-5.30pm
213, இராமநாதன் வீதி, திருநெல்வேலி
(யாழ் பல்கலைக்கழகத்துக்கு முன்பாக)
தொடர்பு: 0770444496







# ஆடைகள் இல்லாமல் வீதிகளில் செல்வதையா விரும்புகிறீர்கள்?

## *விமர்சகர்களிடம் ஜனாதிபதி கேள்வி*

கொழும்பு, டிசெ.30

இசை நிகழ்ச்சி ஒன்றில் இடம்பெற்ற சம்பவம் குறித்து தான் வெளியிட்ட கருத்துத் தொடர்பில் சேறு பூசுகின்றனர் எனக் குற்றஞ்சாட்டியுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஆடைகள் இன்றிவீதியில்செல்வதையாவிரும்புகின்றார்கள் என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

கடந்தவாரம் கொழும்பில் இடம்பெற்ற உலகப் புகழ்பெற்ற பாடகரான என்ரிக் இக்லேசியஸ் கலந்துகொண்டிருந்த இசை நிகழ்ச்சியைக் காணவந்திருந்த, சில பெண்கள் மிகவும் கீழ்த்தரமாக நடந்து கொண்டிருந் ததாக வும், இளம் சமூகத் தைத் தவறாக வழி நடத்தக் கூடியதாக இருந்ததென்றும் ஜனாதிபதி மைத்திரி பாலசிறிசேன அண் மையில் அம்பாறை யில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அதி ருப்தி வெளியிட்டிருந் தார்.

இந்த நிகழ்ச்சியை காணச்சென்ற பெண் ணொருவர், பாடகரின் மீது தனது உள்ளா டையைக் கழற்றி வீசுவது போலாற நிகழ் வுகள் இடம்பெற்ற தைக் காணமுடிந்தது என்றும் ஜனாதிபதி மைத்திரி அம்பாறை யில் அண்மையில் இடம்பெற்ற நிகழ் வொன்றில் குறிப்பிட்ட துடன், இதுபோன்ற நிகழ்ச்சிகளுக்கு இனி இடமில்லை என்றும் திட்டவட்டமாகத் தெரி வித்திருந்தார்.

ஜனாதிபதியின் இந்த அறிவிப்பையடுத்தே அதற்கு எதிராகச் சில தரப்பினரால் குரல் எழுப்பப்பட்டு வருகின்றது. இந் நிலையில், இது குறித்து நேற்று மீண்டும் கருத்து வெளி யிடுகையில், அண்மையில் இசை நிகழ்ச்சி ஒன்றில் இடம்பெற்ற சம்பவம் குறித்து தான் வெளியிட்ட கருத்துத் தொடர்பில் இணையத்தில் சேறு பூசும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் இவ்வாறு சேறு பூசுவதால் எனக்கு ஏதும் நேராது என்றும் சுட்டிக்காட்டிய அவர், இந்த நாட்டில் கலாசாரச் சீரழிவே ஏற்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இவ்வாறு சேறுபூசும் நபர்கள் கோரிக்கைவிடுப்பது ஆடைகள் இன்றி வீதியில் செல்லவா என்றும், இந்த விடயத்தால் நாட்டின் கலாசாரம் எவ்வளவு குறைத்து மதிப் பிடப்படும் எனவும் தான் அவர்களிடம் கேள்வி எழுப் புவதாக ஜனாதிபதி மைத்திரி மேலும் குறிப்பிட்டுள்ளார். (த-சி)

**வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்**



கடந்த 02.12.2015 புதன்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர்
**தில்லையம்பலம் சின்னத்துரை** (போதகர் துரையர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (21.12.2015) புதன்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 02.01.2016 சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும். இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுத் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாருக்கு வைத்திய உதவி வழங்கியவர்களுக்கும், வெளிநாடுகளிலிரு- [illegible] அனுதாபச் செய்திகள் அனுப்பி[illegible] புரிந்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு. குடும்பத்தினர்.

**வேலை வாய்ப்பு**




✔ கணனி இயக்குநர்
✔ புத்தகம் கட்டுநர்
✔ பழக விரும்புவோர்
✔ உதவியாளர்கள்
இருபாலரும் விண்ணப்பிக்கலாம் 29.12.2015 - 31.12.2015
யாழில் கொழும்பு பிறிண்டேர்ஸ்
666.கே..கே.எஸ் வீதி யாழ். 0771974875

புத்தி சாதுரியமான மாணவச்செல்வங்களின் மதி நுட்பமான
**ஞானோதய அக்கடமி**
சங்கத்தானை, சாவகச்சேரி
A/L 2018 A/L Day Class
★ கலை ★ வர்த்தகம் ★ கணிதம் ★ உயிரியல்
★ தொழில் நுட்பம் (செயன் முறைப் பயிற்சிகளுடன்)
★ B.A பட்டப்படிப்பு வகுப்புகள் ★ ஆண்டு 09, 10, 11 வகுப்புக்கள்
ஆரம்பம்: 01.01.2016 வெள்ளி காலை 09.00 மணி
அனுபவமும் திறமையும் வாய்ந்த யாழ். மாவட்ட பிரபல ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை.
நிர்வாகம்.

**சேவைநலன் பாராட்டும் பிறந்த தின வாழ்த்தும்**
Best Wishes



தேசிய சேமிப்பு வங்கியின்
சாவகச்சேரி கிளையில்
முகாமையாளராகக் கடமையாற்றி
இன்று (30.12.2015)
சேவையிலிருந்து இளைப்பாறும்
**திரு. நியூட்டன் ஜெனநாதன்**
அவர்களை மனமுவந்து
பாராட்டுவதுடன் அவரது ஓய்வு
காலம் சிறப்பாக அமைய
வேண்டுமென வாழ்த்துகின்றோம்.
முகாமையாளரும், உத்தியோகத்தர்களும்,
தேசிய சேமிப்பு வங்கி, சாவகச்சேரி கிளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை
## VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA CHUNNAKAM

## கடைகளை வாடகைக்கு வழங்குதல் - 2015/2016

மருதனார்மடம் சந்தைத் தொகுதியில் சபையினால் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்ட கடைகளை விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட மாதாந்த வாடகைத் தொகைக்கு அமைவாக வாடகைக்கு வழங்குவதற்கான ஆகக் கூடிய ஓரேமுறையில் செலுத்தக் கூடிய தொகைக்கான கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கமைவாக வலிகாமம் தெற்கு பிரதேசசபையினால் கோரப்படுகின்றது.

| தொ. இல | கடை இல | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT, NBT வரி தவிர்ந்த தொகை) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | மீளளிக்கமுடியாத கேள்விப்படிவக் கட்டணம் (VAT, NBT வரி தவிர்ந்த தொகை) |
|---|---|---|---|---|
| 1 | இல 4 | 1,800,000.00 | 36,000.00 | 1000.00 |
| 2 | இல 7 | 1,800,000.00 | 36,000.00 | 1000.00 |
| 3 | இல 13 | 1,800,000.00 | 36,000.00 | 1000.00 |
| 4 | இல 14 | 1,800,000.00 | 36,000.00 | 1000.00 |
| 5 | இல 22 | 1,800,000.00 | 36,000.00 | 1000.00 |
| 6 | இல 01A | 1,200,000.00 | 24,000.00 | 1000.00 |
| 7 | இல 03A | 1,200,000.00 | 24,000.00 | 1000.00 |
| 8 | இல 04A | 1,200,000.00 | 24,000.00 | 1000.00 |
| 9 | இல 08A | 1,200,000.00 | 24,000.00 | 1000.00 |
| 10 | இல 09A | 1,200,000.00 | 24,000.00 | 1000.00 |
| 11 | இல 10A | 1,200,000.00 | 24,000.00 | 1000.00 |
| 12 | இல 11A | 1,200,000.00 | 24,000.00 | 1000.00 |
| 13 | இல 12A | 1,200,000.00 | 24,000.00 | 1000.00 |
| 14 | இல 18A | 1,200,000.00 | 24,000.00 | 1000.00 |

நிபந்தனைகள்

1. அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம், மீளளிக்கப்படாத கட்டணங்கள், பெறுமதி சேர்வரி ஆகியவற்றைப் பணமாகச் செலுத்தி ஆள்அடையாள அட்டையைச் சமர்ப்பித்து 31.12.2015ஆம் திகதியிலிருந்து ஒரே முறையில் செலுத்தக்கூடிய தொகைக்கான கேள்விப் படிவம் இணைப் பிரதிகளில் பெற்று 14.01.2016ஆம் திகதி ந.ப 12.00 மணிக்கு முன்னர் விண்ணப்பித்தல் வேண்டும். தாமதமானவை நிராகரிக்கப்படும்.
2. அலுவலகத்தில் இணைப் பிரதிகளில் வழங்கப்படும் கேள்விப் படிவங்களிலேயே கேள்விகள் சமர்ப்பித்தல் வேண்டும். அலுவலகத்தால் விநியோகிக்கப்படும் படிவங்களில் விண்ணப்பகாரர் எவ்வித மாற்றங்களும் செய்தல் ஆகாது.
3. படிவத்தை பூரணப்படுத்துவதில் ஏற்படும் திருத்தங்கள் விண்ணப்பகாரரால் ஒப்பமிட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்
4. கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்வோர் மூலப்பிரதி, இணைப்பிரதி ஆகிய இரண்டினையும் பூரணப்படுத்தி தமது கேள்விகளை தனித்தனிகடித உறையிலிட்டு அரக்கு முத்திரையிட்டு தவிசாளர், வலிதெற்கு பிரதேசபை, சுன்னாகம் என முகவரியிட்டு கேள்வியடங்கிய கடித இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக குறிப்பிடப்பட்டு, மூலப்பிரதி, இணைப்பிரதி எனவும் குறிப்பிடப்பட்டு பதிவஞ்சல் மூலம் அனுப்பப்படலாம் அல்லது அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடலாம்.
5. 14.01.2016ஆந் திகதி ந.ப 12.00 மணிக்கு முன் சமர்ப்பிக்கப்படும் கேள்விப்பத்திரங்கள் மட்டும் அன்று பி.ப 2.00 மணியளவில் கேள்விச்சபையின் முன்னிலையில் திறக்கப்படும். விண்ணப்பகாரர் அல்லது அவரின் எழுத்துமூல அதிகாரம் பெற்ற பிரதிநிதி அவ்வேளையில் சமுகமளிக்கலாம்.
6. 14.01.2016ஆந் திகதி ந.ப 12.00 மணிக்குப் பின்னர் இவ்வலுவலகத்திற்கு கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
7. ஒரு விண்ணப்பப் படிவத்தில் ஒரு கடைக்கு மட்டும் விண்ணப்பிக்க வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட கடைகளுக்கும் விண்ணப்பங்களை உரிய முறையில் சபையில் பெற்று விண்ணப்பிக்கலாம்.
8. அரச நிறுவனங்களும், கூட்டுத்தாபனங்களும், கூட்டுறவுச்சங்கங்களும் இக்கேள்வி நடைமுறைக்கமைவாக விண்ணப்பிக்கலாம்
9. எக்கேள்வியையும் ஏற்றுக்கொள்ளவோ, அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரமுள்ளது.
10. கேள்விதாரர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
11. கடந்த காலங்களில் தவறுநர் பட்டியலில் (Defaulters list) அட்டவணைப்படுத்தப்பட்டோர் அல்லது இச்சபைக்கு குத்தகையாக, வாடகையாக, வரியாக நிலுவையிலுள்ளோர் கேள்விகள் கோர அருகதையற்றவர் ஆவார். அத்தகையோர் மறைமுகமாக இன்னொருவர் ஊடாக கேள்வி சமர்ப்பிப்பது கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் கேள்வி நிராகரிக்கப்பட்டு செலுத்திய வைப்புப்பணம் அரச உடமையாக்கப்படும். பிரதேச சபையுடனான சகல எழுத்து மூல, வாய் மூல தொடர்பாடலகள் யாவும் குத்தகைக்காரராலேயே மேற்கொள்ளப்பட வேண்டும். அவரது பிரதிநிதி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டார்.
12. கேள்விக்காரரால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித் தொகைகள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிர்ணயத் தொகையைக்காட்டிலும் அதிகரித்ததாயிருத்தல் வேண்டும். ஆகக் கூடிய கேள்வித் தொகை ஏற்றுக்கொள்ளப்படும்.
13. ஏற்றுக்கொள்ளப்படும் சித்திகரக் கேள்விக்காரர் தமது கேள்வித் தொகையின் 11 சதவீத பெறுமதி சேர்வரியாகவும் (VAT) 02 சதவீதம் தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரியாகவும் (NBT) வலிதெற்கு பிரதேசசபை மூலம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்துதல் வேண்டும்.
14. வாடகை ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் விலைமதிப்பீட்டு திணைக்களம் மதிப்பிட்ட தொகையில் கடைக்கான மாதாந்த வாடகையும் பெறுமதிசேர்வரி, தேசத்தைகட்டியெழுப்புதல் வரி ஆகியவற்றைப் பணமாக மாதாந்தம் செலுத்த வேண்டும்.
15. மாதாந்த வாடகைப் பணத்தை அந்த மாதம் 30ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறின் கட்டுப்பணத்தின் 10 சதவீதம் தண்டப் பணமாகச் செலுத்துதல் வேண்டும். தொடர்ந்து இரு மாதங்களிற்கு வாடகைப்பணங்களைச் செலுத்தத் தவறுவோரது ஒப்பந்தம் மறு அறிவித்தலின்றி இரத்துச்செய்யப்படும்.
16. முற்குறிப்பிடப்பட்ட 14ஆவது 15ஆவது நிபந்தனைப் பிரகாரம் நடக்கத் தவறுமிடத்து வாடகை ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டுச் செலுத்தப்பட்ட பணத் தொகைகள் மீளளிப்புச் செய்யப்பட மாட்டாது என்பதுடன் அவர்களது பெயர் தவறுநர் பட்டியலில் அட்டவணைப்படுத்தப்படும்.
17. தங்களால் நடாத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை, சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.
18. குத்தகையாளர் தான் நடாத்தும் தொழிலின் அல்லது வியாபாரத்தின் வருடாந்த உத்தரவுக் கட்டணத்தை வலிதெற்கு பிரதேசசபையினால் தொகைகுறித்து அறிவிக்கப்பட்டதும் குறித்த காலத்தில் செலுத்தப்படல் வேண்டும்.
19. வாடகைக்கு கொடுப்பவர் குறைந்தது 05 வருடங்களுக்கு ஒரு முறையும் தேவையேற்படின் காலத்திற்கு காலம் வாடகையை மீள் பரிசீலனை செய்வதற்கு அதிகாரம் உண்டு. அதற்கு வாடகைக்காரர் மறுப்பு தெரிவிக்க முடியாது.
20. குத்தகைக்குப் பெற்ற கடையின் மின்சார இணைப்புக்கட்டணங்கள், மாதாந்தக் கட்டணங்கள் யாவும் குத்தகையாளரின் பொறுப்பில் அமையும்.
21. கடையை வேறு ஒருவருக்கும் சாட்டுதல் செய்யவோ அன்றி உப வாடகைக்குக் கொடுக்கவோ முடியாது.
22. கேள்வித் திகதிக்கு முந்திய ஐந்து வருட காலத்திற்குள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச் செயல்களுக்காக நீதி மன்றத்தினால் தண்டிக்கப்பட்ட ஒருவர் எந்தக் கடைக்கும் கேள்விகள் சமர்ப்பிப்பதற்கு அருகதையற்றவராவார்.
    - மிகை இலாபம் ஈட்டிய குற்றம்
    - நிறுத்தல் முகத்தலளவைக் கட்டளைச் மீறிய குற்றம்
    - சந்தை உப விதிகளை மீறிய குற்றம்

மேலதிக விவரங்களை அலுவலக நாள்களில் கடமை நேரத்தில் பெ... கொள்ளலாம்.

**தியாகராஜா தியாகச்சந்திரன்**
**செயலாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை,**
**சுன்னாகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பாவின் கட்சியில் நானும் இணைவேன்

*சொல்கிறார் நாமல் எம்.பி.*

கொழும்பு, டிசெ.31

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் புதிய கட்சி ஒன்று உருவாக்கப்படும் பட்சத்தில், அந்தக் கட்சியில் தானும் இணைந்து கொள்ளப்போவதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பெரும் ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவினால் விசாரணைகளுக்காக நாமல் ராஜபக்ச நேற்றுப் புதன்கிழமை அழைக்கப்பட்டிருந்தார்.

இதன்போது ஊடகவியலாளர்களினால் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்துத் தெரிவித்துள்ள அவர், புதிய கட்சி ஒன்றை உருவாக்கும் எண்ணம் எனது தந்தையான மகிந்தவுக்குக் கிடையாது. இருப்பினும், அவரினால் புதிய கட்சி ஒன்று உருவாக்கப்படும் பட்சத்தில் அந்தக் கட்சியில் முதல் நபராக நான் இணைந்து கொள்வேன்.

நல்லாட்சிக்கான அரசு எனத் தற்போது மார்தட்டிக்கொள்ளும் இந்த அரசானது, தேர்தல் காலத்தில் அதிகளவான வாக்குறுதிகளை வழங்கி ஆட்சிக்கு வந்தது.

எனினும், அரசு வழங்கிய வாக்குறுதிகளை இதுவரை நிறைவேற்றவில்லை. மாறாகப் பழிவாங்கும் வகையிலான செயற்பாடுகளை இன்று வரை முன்னெடுத்து வருகின்றது.

எது எவ்வாறு இருந்தாலும், வலுவானதொரு எதிர்க்கட்சி என்ற வகையில் அரசுக்கெதிராகத் தொடர்ந்தும் போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம் என்றார். (த)

# சாட்சிகள் இருந்தால் கைதாவார் ஹிருணிகா

கொழும்பு, டிசெ.31

நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள கடத்தல் குற்றச்சாட்டுத் தொடர்பில் சாட்சிகள் இருப்பின், அவர் கைது செய்யப்படுவார் என அமைச்சர் கபீர் கசிம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு தெமட்டகொடப் பகுதியில் வைத்து நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்குச் சொந்தமான டிபெண்டர் வாகனத்தில் நபர் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டுத் தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

குறித்த சம்பவம் தொடர்பில் இதுவரை ஆறு பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், குறித்த கடத்தல் சம்பவம் தொடர்பில் கொழும்பில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, அமைச்சர் கபீர் கசிமிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த அவர், ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்குச் சொந்தமான வாகனத்தில் நபரொருவர் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் ஜனாதிபதி அல்லது பிரதமரால் பொலிஸாருக்கு எந்தவொரு அழுத்தமும் கொடுக்கப்படவில்லை.

நாடாளுமன்ற உறுப்பினராயினும் அமைச்சராயினும் சட்டம் யாவருக்கும் பொதுவானது. இந்தச் சம்பவம் தொடர்பில் அவரைக் கைது செய்ய பொலிஸார் வசம் சாட்சிகள் இருப்பின், அதனைச் செய்ய முடியும். அந்த நடவடிக்கைகளுக்கு எதிராக ஜனாதிபதியோ பிரதமரோ தலையிடப் போவதில்லை.

இந்த நாட்டில் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அரச நிறுவனங்களுக்கு அதனை உரிய முறையில் மேற்கொள்வதற்கான சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆட்சிக் காலத்தைப் போன்று, ஹெலி மூலம் குற்றவாளிகளையும், சந்தேக நபர்களையும் சிங்கப்பூருக்கு அனுப்ப எம்மாலும் முடியும். ஆனால் அதனைச் செய்ய நாம் விரும்பவில்லை என்றார். (த)

## சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

நலமே

### பொதுக்கூட்டம் – 17.01.2016

யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் நடப்பு நிர்வாக சபையின் முதலாம் ஆண்டுப் பொதுக்கூட்டம் எதிர்வரும் (17.01.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் சமர்ப்பிப்பதற்குப் பிரேரணைகள் ஏதுமிருப்பின் 10.01.2016இற்கு முன் கல்லூரி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கலாம்.

புதிய அங்கத்தவர்களாக சேரவிரும்புபவர்கள் கல்லூரி அலுவலகத்தில் உரிய விண்ணப்பப் படிவத்தைப் பெற்று விண்ணப்பிக்கலாம்.

ந.சர்வேஸ்வரன் (தலைவர்) | யோ.ஜெயக்குமார் (செயலாளர்)

# முஸ்லிம் வர்த்தகர்களுக்கு தற்காலிக கடைத் தொகுதி

### யாழ். மாநகர சபை ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிசெ.31
யாழ். நகரப் பகுதியில் நடைபாதை வியாபாரத்தில் நீண்ட காலம் ஈடுபடும் முஸ்லிம் வர்த்தகர்களுக்கு தற்காலிக கடைத் தொகுதிகளை யாழ். மாநகர சபை ஏற்பாடு செய்து கொடுத்துள்ளது.

கடந்த காலங்களில் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்ட வர்த்தகர்கள் யாழ். மாநகர சபையால் அகற்ற முற்பட்ட போது அவர்களுக்கான மாற்று இடவசதி தொடர்பாக இழுபறி நிலை தொடர்ந்து வந்தது.

இந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் நகரப் பகுதியில் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்ட சுமார் 25 வர்த்தகர்களுக்கு தற்காலிக கடைகள் அமைப்பதற்காக வைத்தியசாலைக்கு அருகில் உள்ள வாகன தரிப்பிடத்தில் மாற்று இட வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக பாதசாரிகளின் போக்குவரத்துப் பிரச்சினை தீர்க்கப்பட்டதுடன் சம்பந்தப்பட்ட நடைபாதை வியாபாரிகளும் நன்மை அடைந்துள்ளனர்.

இந்தத் தற்காலிக கடை தொகுதியில் 10 முதல் 12 முஸ்லீம் நடைபாதை வியாபாரிகள் உள்வாங்கப் பட்டுள்ளனர். (ற-10)

# கலாபூசணம் விருது

## பெற்றோருக்கு கௌரவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.31
வடமராட்சி வடக்குப் பிரதேச செயலகம் நடத்தும் கலாபூசணம் விருது பெற்ற கலைஞர்களையும், தேசிய ரீதியில் இடம் பெற்ற சிறுகதைப் போட்டியில் பரிசில் பெற்றவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை பருத்தித்துறை பிரதேச செயலாளரும், கலாசாரப் பேரவையின் தலைவருமான இ.த ஜெயசீலன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இன்றைய நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் ச.நந்தகுமார் கலந்து கொள்ளவுள்ளார். (ற-23)

**வேலையாள்கள் தேவை**
தொடர்பு: 021 492 3724
யாழ்ப்பாணத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் பிரபல வர்த்தக நிலையத்துக்கு விற்பனை உதவியாளர்கள் தேவை.
**குறிப்பு:- ஆண்கள் மட்டும்.**
(67213)(11.15.17)

**தவறிவிட்டது**
தொடர்பு: 077 401 2255
அளவெட்டி அலுக்கை கிழக்கு, அளவெட்டியைச் சேர்ந்த தியாகராசா ஜீவரன் என்பவரின் தேசிய அடையாள அட்டை (860673207V) மற்றும் மோட்டார் வாகனத்தின் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் அளவெட்டிக்கும் நிலாவரைக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேலே உள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் . சன்மானம் வழங்கப்படும்.
(67215)(11.15.17)

**தவறிவிட்டது**
தொடர்பு: 077 711 0874
சண்முகநாதசர்மா மாதுளன் (830820574V) ஆகிய எனது A0108 19711 இலக்கம் கொண்ட சாரதி அனுமதிப்பத்திரம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
(67209)(11.15.17)

# திரையரங்கு முகாமையாளரை தாக்கிக் கொள்ளை

சினிமா திரையரங்கு வசூல் பணத்துடன் வீடு சென்ற முகாமையாளரை இடைவழியில் வழிமறித்த திருடர்கள் அவரைத் தாக்கி விட்டு கையில் வைத்திருந்த பணத்தைப் பறித்துக் கொண்டு தப்பியோடியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு சாவகச்சேரி மண்டுவில் பகுதியில் இடம்பெற்றது.



சாவகச்சேரியிலுள்ள சினிமா திரையரங்கு ஒன்றின் முகாமையாளர் அன்றைய வசூலுடன் இரவு வீடு சென்ற போது அவரைப் பின் தொடர்ந்து சென்றவர்கள் சனநடமாட்டமில்லாத இடத்தில் வைத்து வழிமறித்துத் தாக்கி விட்டு பணத்தைப் பறித்துக் கொண்டு தப்பியோடியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-9)

**விஸ்டம்**
தொழில் நுட்பக் கல்லூரி
இல63 சிவன் வடக்கு வீதி வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்.
**தொழில் நுட்ப பிரிவு**
**A/L 2018**
நாளை காலை
8.30 ஆரம்பம்
077 2487774
அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
A/L தொழில்நுட்பப் பிரிவிற்கு தனித்துவமான ஒரே ஒரு தனியார் கல்வி நிறுவனம்

பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் நன்மதிப்பை வென்ற யாழ்ப்பாணம் ஈ-சிற்றி ஆங்கிலக் கல்லூரியின் 2016 ஆண்டில் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன..
ஆங்கில மொழியைச் சில மாதங்களில் கற்று சரளமாக பேச யாழ்நகரின் முன்னணிக் கல்லூரியில் இணைந்து உங்கள் ஆங்கிலக் கனவுக்கு முற்றுப்புள்ளி வையுங்கள்
**DIPLOMA IN ENGLISH**
(சனி/ஞாயிறு 10.00 - 12.30 PM)
(16 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான 06 மாத கால பாடநெறி)
ஆரம்பம் : 02.01.2016 காலை 10.00 மணி
இந்த வருடம் O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான முழுநேர இரண்டு மாத கால ஆங்கில/கணனிப் பாடநெறி
ஆரம்பம் : 04.01.2016 காலை 10.00 மணி
(இந்தப் பாடநெறியானது திங்கள் - வியாழன் வரை இடம்பெறும்)
- சர்வதேச சான்றிதழ்கள்
- அரச மற்றும் சர்வதேச நிறுவனங்களின் பதிவு பெற்ற நிறுவனம்
- எங்கும் ஆங்கிலம் கற்க முடியும் ஆனால் இங்கு மட்டுமே சரளமாகப் பேசமுடியும்
- கணனிப் பாடநெறிகள்



E-CITY
COLLEGE OF ENGLISH & IT SKILLS DEVELOPMENT
இல.372D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 0212217106 / 0773400418

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



யாழ்.உடுத்துறைக் கல்லூரியின் ஆசிரியரான
**திருமதி நளாயினி கிருஸ்ணமூர்த்தி**
அவர்களுக்கு நல் ஆசிரியர் சேவைக்கான **பிரதீபா பிரபா 2015** சான்றிதழ் கல்வி அமைச்சால் வழங்கப்பட்டதை முன்னிட்டு எமது பாராட்டையும் வாழ்த்தையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.
**வாழ்த்துவோர்:**
சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசமும், புனர்வாழ்வுக் கல்வி அபிவிருத்தி நிதியமும்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் விஞ்ஞானபீடம்

| | |
|---|---|
| விஞ்ஞானத்தில் பொதுப் பட்டத் தேர்வு | - 2014 நிலை 1G, 2G, 3G |
| கணினி விஞ்ஞான பட்டத்தேர்வு | - 2014 நிலை 1S, 2S, 3S, 4S |
| விஞ்ஞானத்தில் சிறப்புப் பட்டத் தேர்வு | - 2014 நிலை 3M,4M |

### இரண்டாம் அரையாண்டு கற்கைநெறி இறுதித் தேர்வு

இரண்டாம் அரையாண்டில் கற்பிக்கப்பட்ட கற்கைநெறி அலகுகளுக்கான கற்கைநெறி இறுதித் தேர்வுகள் (End of Course Examinations) மாசி 2016 இல் ஆரம்பமாகும்.

இந்த அலகுகளுக்கான கற்கைநெறி இறுதித் தேர்வில் மீள் பரீட்சார்த்தியாகத் தோற்ற விரும்பும் மாணவர்கள் பூரணப்படுத்திய தேர்வு அனுமதிப் படிவங்களைத் தேர்வுக்கான கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டுடன் 2016 தை 12 ஆம் திகதிக்கு முன்னர் விஞ்ஞான பீடாதிபதி அலு வலகத்தில் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

(சி/28210)
(11,15,18)

பதிவாளர்.

**வீடு வாடகைக்கு தேவை**
2 பேர் கொண்ட குடும்பத்திற்கு வீடு வாடகைக்கு தேவை.
தொடர்பு: 077 072 4810 / 021 222 5761

**காணி விற்பனைக்கு உண்டு**
தொடர்பு: 021 221 1140
சாவகச்சேரி வாரிவநாதர் சிவன் கோயில் தெற்கு வீதியில் 5½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. இது சிவன் கோயில் தெற்கு வீதிக்குத் தென்புறமாக சாவகச்சேரி புகையிரத நிலையத்துக்கு அருகில் அமைந்துள்ளது.
(67198)(11.15)

**வேலையாள்கள் தேவை**
தொடர்பு: 077 386 6250
யாழ்ப்பாணம்- கொழும்பு பேருந்து ஆசன பதிவகத்துக்கு கொழும்பில் தங்கி நின்று ஆசனப் பதிவுகள் மேற்கொள்ள ஆள்கள் தேவை.
**குறிப்பு: ஆண்கள் மட்டும்**
(67212)(11.15.17)



Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## 31ஆம் நாள் நினைவுகள்

மலர்வு
19
.
06
.
1958



உதிர்வு
01
.
12
.
2015

### அமரர் பிரான்சிஸ்பிள்ளை அன்ரன் சில்வெஸ்ரர்

அப்பா
நிமிர்ந்த உங்கள் தேகமெங்கே
அன்பான பார்வையெங்கே
வீறு கொண்ட நடையெங்கே
கண்டிப்பான கனிவான அதிகாரக் குரலெங்கே!
அனைத்தும் கொடிய நோய்வடிவில்
எம் கண்முன்னே அழிந்த போதும்
அப்பா என்றோடி வந்து எம் தலை சாய்க்க
எம் தலை தடவிவிடுவாயே
இன்று நீ வேண்டும் அப்பா.

நோய் உன்னை இறுகத்தழுவ
தாயாகி உன்னை சேய்போல அணைத்த உன்
அன்பு மனைவி கதறித்துடிக்க,
பாசத்தை நீ பொழிந்து பூவாய் நீ தாங்கி
வளர்த்த செல்வ மகளும்,
உன்னையே நாம் காணும் அன்பு மகனும்
இடி போன்ற செய்தி கேட்டு துடிதுடிக்க,
உன்னைப் பெற்றவளும் உடன்பிறப்புக்களும்
கூண்டைக் காத்த கிளி எங்கே
என்ன செய்வோம் என்று பிதற்ற,
நீ பாசத்தை கொட்டி வளர்த்த பிள்ளைகள்
மாமா, சித்தா, பெரியப்பா என்று
மலைத்து நிற்க,
நீ சகோதரராய் பழகிய உன்
மைத்துனரும் மைத்துனிமாரும்
சோர்ந்தே போயினரே,
எங்கள் முகம் வாடினால் உங்களுக்குப் பிடிக்காதே அப்பா
இன்றோ இதயம் குமுறுவதும் வாடிய மலராய் துவண்டு
போவதும் உங்களுக்குத் தெரியாதா?
எம்மை விட்டு எங்கே சென்றாய்.........

நாட்கள் தான் ஓடி மறைந்தாலும்
உங்கள் ஒளி முகத்தைக் காணாது
நெஞ்சம் விம்பி நீரகன்ற கண்களுடன்
நினைவிழந்து நடைப்பிணம் போல்
வாழ்கின்றோம்.........

பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்**

# அரசியலிலிருந்து ஒதுங்கமாட்டேன்

*ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு*

கொழும்பு,டிசெ.31
எதிர்காலத்தில் ஜனாதிபதிப் பதவியொன்றுக்காகப் போட்டியிடாதிருந்தாலும் கூட



அரசியலில்இருந்து ஒதுங்கப் போவதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.
மீண்டுமொரு தடவை ஜனாதிபதிப் பதவிக்குப் போட்டியிடப் போவதில்லையென மிகத் தெளிவாகவேதெரிந்துள்ளது. எனினும் தனது அரசியல் செயற் பாட்டுக்கு இது தடையாக அமையாதுஎனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
அடுத்துவரும் உள்ளூராட்சித் தேர்தலானது எதிர்வரும் தமிழ் சிங்களப் புத்தாண்டின் பின்னர் நடத்தப்படும். அது புதிய தேர்தல் முறைமையின் கீழ் நடத்தப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.
(த-ஐ-22)

## கண்ணீர் அஞ்சலி



திருமதி
**சின்னப்பிள்ளை சிற்றம்பலம்**

வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சியில் ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றும் சிற்றம்பலம் கணேசலிங்கம் அவர்களின் அன்புத் தாயார் திருமதி சின்னப்பிள்ளை சிற்றம்பலம் அவர்கள் 28.12.2015 காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிசங்கம்,
வலயக்கல்வி அலுவலகம்,
கிளிநொச்சி.

(63606)(11,15,18)


## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர்**
**சீனிவாசகம்**
**பரமேஸ்வரன்**
திதி: சஷ்டி


தோற்றம்
09.01.1924

மறைவு:
21.12.2005

என்றும் உங்கள் நினைவுகளுடன்
**குடும்பத்தினர்.**
இளவேனில்
நவக்கிரி, புத்தூர்.



# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



## அமரர் வேலுப்பிள்ளை சின்னத்தம்பி

**தோற்றம்**
**07.03.1931**

**மறைவு**
**03.12.2015**

கடந்து 03.12.2015 வியாழக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்ப விளக்கின் மரணச் செய்திகேட்டு அனைத்து வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு நாளை (01.01.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் வீட்டுக் கிருத்தியமும் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**



**குடும்பத்தினர்**
**சிவாறேடிங்கோ,**
**ஸ்ரீ முத்துமாரி அம்மன் றேடர்ஸ்,**
**அரிசி ஆலை,**
**டச்சுவீதி, சாவகச்சேரி.**

(67186)(15.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 ஆயிரம் பனம் விதை நடுகை நெடுந்தீவில்

யாழ்ப்பாணம், டிசெ.31
10 ஆயிரம் பனம் விதைகளை நடுகை செய்யும் திட்டம் நெடுந்தீவில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.
கனடாவில் உள்ள கற்பக கானகம் மற்றும் நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந்தப் பனம் விதை நடுகை செய்யும் பணி இடம்பெற்று வருகின்றது.
இந்தப் பனம் விதை நடுகை செய்யும் திட்டத்தில் பாடசாலை மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு நடுகை செய்யும் மாணவர்களுக்கு அதற்கான கொடுப்பனவு மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.
நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இந்தக் கற்பக கான நிகழ்வில் 79 மாணவர்களுக்கு நடுகைக்கான பணம் வங்கியில் வைப்பிலிடப்பட்டு அதற்கான வங்கிப் புத்தகம் மற்றும் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

> “பாடசாலை மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு நடுகை செய்யும் மாணவர்களுக்கு அதற்கான கொடுப்பனவு மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.”

பாடசாலை அதிபர் ஏ.சச்சிதானந்தம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் ம.கணபதிப்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.
பனைஅபிவிருத்திச்சபையின் விரிவாக்க முகாமையாளர் கே.கோபாலகிருஷ்ணன், நெடுந்தீவு கோட்டக்கல்விப் பணிப்பாளர் திருமதி சாரதா தேவி கிருஸ்ணதாஸ், கனடாவில் உள்ள நெடுந்தீவு மக்கள் ஒன்றிய கற்பககானகப் பொறுப்பாளர் ஜே.தேவராஜன் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.
இந்தக் கற்பக கானகத்தால் ஏற்கனவே பனம் விதை நடுகை செய்த 45 மாணவர்களுக்கு நடுகைக்கான கொடுப்பனவு வங்கியில் சேமிப்பில் வைக்கப்பட்டு அதற்கான புத்தகம் மற்றும் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டிருந்தன. (ற-17)

## விமானப் படையினரால் ஆலயம் புனரமைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.31
குரும்பசிட்டிக் கிராமத்தில் நூறு வருடங்கள் பழைமை வாய்ந்த சித்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெற்று வரும் புனர்நிர்மாணப் பணிகளில் பலாலி விமானப் படையகத்தைச் சேர்ந்த விமானப்படையினர் தங்களின் பங்களிப்பை வழங்கி வருகின்றனர்.



கடந்த 25 வருடங்களாக உயர் பாதுகாப்பு வலயமாக இருந்துசிலவருடங்களின் முன் மக்களின் பாவனைக்குத் திறந்து விடப்பட்ட வலிகாமம் வடக்கில் இந்த ஆலயம் புனரமைக்கப்பட்டு வருகின்றது.
விமானப் படைத் தளபதியின் அறிவுறுத்தலுக்கமைய பலாலி விமானப் படைக் கட்டளை அதிகாரியின் நேரடிக் கண்காணிப்பில் ஆலயத்தின் சுற்று மதில் அமைத்தல், வர்ணம் தீட்டுதல் நில வேலைகள் மற்றும் சிரமதானம் செய்தல் போன்ற பணிகளில் விமானப்படையினர் பங்கு பற்றி வருகின்றனர். (ற-ஐ)

## யாழ். உற்பத்திகளை கொள்வனவு செய்வதில் ஆர்வம்

சாவகச்சேரி, டிச.31
நாவற்குழிஉணவுக்களஞ்சியத்தில் யாழ்.மாவட்ட வாழ்வின்எழுச்சி திணைக்களத்தினரால் அமைக்கப்பட்டுள்ள உள்ளூர் உற்பத்தி சுற்றுலா தகவல் மையத்தில் தென்பகுதியிலிருந்து வருவோர் பொருள்களை கொள்வனவுசெய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.
கடந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த பெருமளவு சுற்றுலாப் பயணிகள் நாவற்குழி உணவுக் களஞ்சியத்துக்கு முன்பாக தமது வாகனங்களை நிறுத்தி விட்டு இந்த நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த பெருமளவு பொருள்களை கொள்வனவு செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது .இதனால் ஏ-9 வீதியில்நீண்டதூரத்துக்கு வாகனங்கள் தரித்து நின்றன.
யாழ்.மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் இங்கு விற்பனை செய்யப்படுவதால் அவற்றைக் கொள்வனவு செய்ய தென்னிலங்கை மக்கள் ஆர்வங் காட்டி வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.(ற-9)

# முஸ்லிம் குடும்பங்களுக்கு கூரைத் தகரங்கள் வழங்கல்

யாழ்ப்பாணம்,டிசெ.31
யாழ் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு கூரைத் தகரங்கள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டுள்ளன.
தற்போது பெய்து வரும் மழையின் காரணமாக முஸ்லிம்கள் வாழும் குடியிருப்புப் பகுதிகள் வெள்ளப் பாதிப்புக்களை எதிர் நோக்கியுள்ளன. இந்த நிலையில் யாழ். பிரதேச செயலரின் ஒருங்கிணைப்பின் ஊடாக ஜே-87 கிராம சேவகர் பிரிவில் வசிக்கும் 40 குடும்பங்களுக்கு சுமார் 480 தகரங்கள் வழங்கப்பட்டுள்ளன.
யாழ் இணையும் கரங்கள் சனசமூக நிலையத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முஹம்மதியா ஜும்மா பள்ளிவாசல் பிரதம இமாம் மஹ்மூத் பலாஹி, சமூக சேவகர்களான கே.எம் நிலாம், எம் நஷீர், எம் அனஸ், எம்.எம் பாபு ஆகியோர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தகரங்களை வழங்கி வைத்தனர் (ற-ஐ-10)



## விறாந்தைக் கூரை சரிந்து 10 வயது சிறுவன் காயம்

யாழ்ப்பாணம், டிச.31
பெருமழையின்காரணமாக வீட்டின் விறாந்தைக் கூரை சரிந்து விழுந்ததில் அங்கு படுத்திருந்த 10 வயதுச் சிறுவன் காயமடைந்தான். இந்தச் சம்பவம் கடந்த திங்கட் கிழமை இரவு 9 மணியளவில் வலிகாமம் மேற்கு தொல்புரம் மத்தியில் நடந் துள்ளது.
வன்னியிலிருந்து சொந்த இடத்துக்கு திரும்பிய குடும்பம் தமது காணியில் வீடு அமைக்கும் பணியில் ஈடுபட்ட நிலையில் அங்குள்ள பழைய குடியிருப்பு ஒன்றில் தற்காலிகமாகத் தங்கியுள்ளனர். இரவு அறைக்குள்ளும் விறாந்தையிலும் படுத்திருந்த வேளையில் பெரு மழையின் காரணமாக திடீரென விறாந்தைக்கப்பு மரங்கள் சரிந்து ஓடுகளும் கூரை மரங்களும் வீழந்துள்ளன. அங்கு படுத்திருந்த பத்து வயதுச் சிறுவன் மீது அவை வீழ்ந்துள்ளன. வீட்டிலிருந்தோர் சத்தமிடவே அங்குள்ள சனசமூக நிலையத்தில் நின்றவர்கள் ஓடிவந்து முறிந்து வீழ்ந்து காணப்பட்டவற்றை அப்புறப்படுத்தி அதனுள் அகப்பட்டிருந்த சிறுவனை மீட்டனர்.
சிறுவன் சங்கானை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். (ற-9)

# தொழில் செய்யும் வேளையில் தவறி வீழ்ந்த பனம் தொழிலாளர் குடும்பங்களுக்கு நிதி

## வடமாகாண கூட்டுறவு அமைச்சு வழங்கியது

யாழ்ப்பாணம், டிசெ. 31
தொழில் செய்யும்போது மரத்திலிருந்து வீழ்ந்த பனம் தொழிலாளிகளின் குடும்பங்களுக்கு ஒரு இலட்சம் பெறுமதியான காசோலை வழங்கும் நிகழ்வு நேற்று கைதடியில் அமைந்துள்ள வடமாகாண பேரவைச் செயலகத்தில் நடைபெற்றது.
வடமாகாண கூட்டுறவு அமைச்சால், வழங்கப்பட்ட இந்த உதவித்திட்டத்தில், வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கலந்து கொண்டு பாதிக்கப்பட்வர்களுக்கான காசோலைகளை வழங்கினார்.
வடக்கு மாகாணத்தில் தொழில் செய்கையின்போது மரத்தில் இருந்து தவறுதலாக வீழ்ந்து இறந்தவர்களின் குடும்பங்களின் வாழ்வை மேம்படுத்துவதற்கான திட்டம் கடந்த மாகாண வரவு - செலவுத் திட்ட வாசிப்பின்போது வடமாகாண கூட்டுறவு அமைச்சர் பொ. ஐங்கர நேசனால் முன்வைக்கப்பட்டது.
அதையடுத்து 2013ஆம் ஆண்டு முதல் இற்றைவரையான காலப் பகுதியில் வடக்கு மாகாணத்தில் உள்ள பனை, தென்னை வளக் கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக விண்ணப்பங்கள் கோரப்பட்டு, ஆறு குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு வாழ்வாதார நிதியாக தலா ஒரு இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.
நிதியுதவி பெற்றுக் கொண்டவர்கள் இந்தத் திட்டத்தால் தாம் பெரிதும் பயனடைவதாகத் தெரிவித்தனர்.
எம்முடைய துணையினுடைய இழப்பினைத் தொடர்ந்து பல்வேறு துண்பங்களை சந்தித்து வந்தோம். வறுமையால் தடைப்பட்ட என்னுடைய பிள்ளையின் திருமணத்தை நடத்துவதற்கு இந்த நிதி உதவியாக அமைந்துள்ளது என்றும், அபிவிருத்தித் திணைக்களத்தால் வழங்கப்பட்ட காசோலை உதவி மிகப்பெரிதாக உள்ளது. வழங்குவதற்கு ஏற்பாடுசெய்த அமைச்சருக்கும் நன்றிகள். எனினும் நாம் தொடர்சியாக எம்முடைய வாழ்வை மேம்படுத்துவதற்கான நிரந்தர வாழ்வாதார உதவிகள் ஏற்படுத்தப்பட்டால் பேருதவியாக அமையும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.
இந்த நிகழ்வில் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், அவையின் பிரதம செயலாளர் அ.பத்திநாதன், வடக்கு மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன், மாகாண சபை உறுப்பினர்கள், அமைச்சின் செயலாளர்கள், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், பனை தென்னை வளக் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் பயனாளிகளின் குடும்பத்தவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ற-ரி5)



## கலை இலக்கியப் பெரு விழா

யாழ்ப்பாணம், டிசெ.31
வல்வெட்டித்துறை கலை கலாசார இலக்கிய மன்றத்தின் ஆறாவது கலை இலக்கியப் பெருவிழா நாளை மறுதினம் நடைபெறவுள்ளது. ரேவடி உல்லாசக் கடற்கரையில் மாலை 4:30 மணிக்கு, கலைகலாச்சார இலக்கிய மன்றத்தின் தலைவர் ம.கலக்சன் தலைமையில் இடம்பெறவுள்ளநிகழ்வில் பிரதம விருந்தினராக முதலமைச்சரின் செயலாளர் எஸ்.வரதீஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (ற-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவுப் பெருங் கடலில் இந்திய ரோலர்கள் அத்துமீறல்

## தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு மீனவர்கள் கோரிக்கை

கிளிநொச்சி, டிசெ.31
முல்லைத்தீவுக் கடற்பரப்பில் 60க்கும் மேற்பட்ட ரோலர் படகுகளில் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுகின்றனர் என்று முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் அ.மரியராசா குற்றஞ் சாட்டியுள்ளார்.
இதனைத்தடுத்து நிறுத்துவதற்கு அரச அதிபரும் அரசியல்வாதிகளும் முன்வரவேண்டுமென்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
முல்லைத்தீவு மாவட்ட கரையோரங்களில் கடந்த ஒரு வார காலமாகத் தொடர்ந்து கொண்டிருக்கும் கடற் கொந்தளிப்புக் காரணமாக மீனவர்களது கடற்றொழில் நடவடிக்கைகள் முற்றாகப் பாதிப்படைந்துள்ளன. இதனால் படகுகளும் கடற்றொழில் உபகரணங்களும் கரையிலிருந்து உயரத்தில் பாதுகாப்பாக



வைக்கப்பட்டுள்ளன.
தற்போது இறால் பிடிக்கும் பருவகாலம். அண்மைய நாள்களாக பெரும் கடலில் தொழிலுக்குச் செல்லும் படகு ஒன்றுக்கு ஆகக் கூடுதலாக 100 கிலோ தொடக்கம் 150கிலோ வரையான பெரிய இறால்கள் பட்ட நிலையில் தற்போது ஏற்பட்டுள்ள கடல் சீரின்மை காரணமாக மீனவர்கள் எவரும் தொழிலுக்குச் செல்வதில்லை.
இதனால் முல்லைத்தீவு மாவட்ட கரையோரத்தைச் சேர்ந்த சுமார் 2 ஆயிரத்து 500 மீனவ குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. நாம் தொழில் இன்றித் தவிக்கும் நிலையில் நேற்றுமுன்தினம் 60க்கும் மேற்பட்ட இந்திய ரோலர் படகுகள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டன. அதனைத் தடுத்து நிறுத்த அரச அதிபரும், அரசியல்வாதிகளும் முன்வர வேண்டும் என்றார். (ற-21,102)

# நத்தார் தினத்தை முன்னிட்டு கற்றல் உபகரணங்கள் கையளிப்பு



வவுனியா, டிசெ.31
நத்தார் தினத்தை முன்னிட்டு வறிய குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் இடம்பெற்றன.
கித்சிறி அத்துலத் முதலி பவுண்டேசன் நிறுவனத்தின் அனுசரணையில் வவுனியா மாவட்டத்தில் செட்டிக்குளத்திலும், மன்னார் மாவட்டத்தில் முருங்கன் மற்றும் மன்னார் நகரிலும் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன.
கலாநிதி அருட்திரு எஸ்.சந்திரகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கித்சிறி அத்துலத் முதலி பவுன்டேசன் நிறுவனத்தின் தலைவர் கித்சிறி அத்துலத்முதலி மற்றும் அவரது மனைவி ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்துகொண்டதோடு, வடமாகாண சபை உறுப்பினர் றீப்கான் பதியுதீன் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டார்.
மன்னார் நகர சபை மண்டபம், முருங்கன் மெதடிஸ் ஆலய மண்டபம், செட்டிக்குளம் எபிரோன் பப்டிஸ் திருச்சபை கட்டடம் ஆகிய இடங்களில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சுமார் ஆயிரம் மாணவர்களுக்கு மிகப்பெறுமதிவாய்ந்த கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ஜ-56)

# சமூக விரோதச் செயற்பாடுகளை கட்டுப்படுத்தியவர் வஹாப்தீன்

## பிரியாவிடை நிகழ்வில் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் தெரிவிப்பு



கிளிநொச்சி, டிசெ.31
போரின் பின்னர் கிளிநொச்சியின் அபிவிருத்தியைச் சீர்குலைக்கும் வகையில் இடம்பெற்று வந்த சமூகவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதில் முன்மாதிரியாகச் செயற்பட்டவர் நீதிவான் எம்.ஐ.வகாப்தீன் – இவ்வாறு யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தெரிவித்தார்.
கிளிநொச்சி நீதிமன்றத்தில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் செல்லும் நீதிவான் எம்.ஐ.வகாப்தீனின் பியாவிடை நிகழ்வு நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது–
முன்னர் கட்டுக்கோப்பாக வாழ்ந்த இந்தச் சமூகத்தில் போரின் பிற்பட்ட காலப் பகுதியில் சட்டவிரோத நடவடிக்கைகள் அதிகரிக்கத் தொடங்கிவிட்டன. இவற்றைக்கட்டுப்படுத்துவதற்கு முன்மாதிரியாகச் செயற்பட்டவர் நீதிவான் எம்.ஐ.வகாப்தீன். இவரால் வழங்கப்பட்ட பலதீர்ப்புகளுக்கு மேன்முறையீடுகள் செய்யப்படவில்லை. அதனாலேயே தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் சமூகவிரோத செயற்பாடுகள் குறைவடைந்துள்ளன என்றார். போரின் பின்னர் 2010ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1ஆம் திகதி கிளிநொச்சி நீதிமன்றச் செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்பட்ட போது, அன்றிலிருந்து 2012ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதிவரை கிளிநொச்சி நீதிமன்ற நீதிவானாக பெ.சிவகுமார் கடமையாற்றினார். பின்னர் 2012ஆம் ஆண்டு செப்ரெம்பர் 3ஆம் திகதி முதல் கிளிநொச்சி நீதிமன்ற நீதிவானாக கடமையாற்றிய நீதிவான் எம்.ஐ.வகாப்தீன், இன்று முதல் இடமாற்றம் பெற்றுச் செல்கிறார். பிரியாவிடை நிகழ்வில் மாவட்டத்தை சேர்ந்த சிரேஷ்ட சட்டத்தரணிகள், சட்டத்தரணிகள், நீதிமன்ற உத்தியோகத்தர்கள் என பலர் கலந்துகொண்டனர்.
(ற-21, ரி3)



மன்னார் மாவட்டத்தின் பனங்கட்டுக்கொட்டு கிராமத்தை சேர்ந்த நலிவுற்ற மற்றும் பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகள் வடக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா. டெனீஸ்வரனால் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. அமைச்சரின் மன்னார் உப அலுவலகத்தில் வைத்து பயனாளிகளுக்கு இவை வழங்கப்பட்டன. தையல் இயந்திரம் மற்றும் துவிச்சக்கர வண்டிகள் என்பன விண்ணப்பித்த பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. நிகழ்வில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் ஆகியோர் இணைந்து பொருள்களை வழங்கினர்.(ற-21,56)

# 5 ஆண்டுகளாக பூட்டப்பட்டுள்ள புதிதாக நிர்மாணித்த மலசலகூடம்

## கரைச்சிப் பிரதேச சபையைச் சாடுகின்றனர் பொதுமக்கள்

கிளிநொச்சி, டிசெ.31
கரைச்சி பிரதேச சபையினால் பல லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட மலசல கூடம் கடந்த 5 ஆண்டுகளாக பூட்டி வைக்கப்பட்டுள்ளது என்று மக்கள் குற்றம் சாட்டியுள்ளார்.
போருக்கு முன்னர் கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச சபையின் ஆளுகையின் கீழ் இயங்கிய நூலகம் யுத்தம் காரணமாக அழிவடைந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது. அந்த நூலகத்தின் அலுவலகப் பயன்பாட்டுக்கான கட்டடத்தை கிளிநொச்சி கரடிப் போக்கு சந்திக்கு அண்மையில் அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கரைச்சிப் பிரதேச சபையினர் தெரிவித்திருந்தனர்.
அதற்காக முதலில் மலசல கூடம் கட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டு பல லட்சம் ரூபா செலவில் மலசலகூடம் கட்டி முடிக்கப்பட்டது.
அதன்பின்னர் ஏனைய கட்டட நிர்மாணப் பணிகள் எவையும் நடைபெறவில்லை. கட்டப்பட்ட மலசலகூடமும் கடந்த 5 ஆண்டுகளாகப் பூட்டப்பட்ட நிலையில் உள்ளது என்றும் பொதுமக்கள் தெரிவித்தனர்.
பாவனையற்று இருப்பதால் குறித்த பகுதி பற்றைகள் வளர்ந்து காணப்படுகின்றது என்றும் புதிதாகக் கட்டப்பட்ட மலசலகூடமும் அழிவடையும் நிலை காணப்படுகின்றது என்றும் [illegible] போதிய [illegible] இன்றி செலவழிக்கப்பட்ட நிதியில் நூலகக் கட்டடத்தை அமைத்து பிரதேச மக்களின் மேம்பாட்டை ஊக்குவித்திருக்க முடியும் என்றும் மக்கள் தெரிவித்தனர்.
இதுகுறித்து உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.
இது தொடர்பில் கரைச்சிப் பிரதேச செயலரைத் தொடர்பு கொண்டு கேட்கமுற்பட்டபோது அவர் தொலைபேசி அழைப்பைத் துண்டித்தார்.
இதுகுறித்து கரைச்சிப் பிரதேச சபையைச் சேர்ந்தவர்களிடம் கேட்டபோது அவ்வாறு ஒரு மலசலகூடம் அமைக்கப்பட்டுள்ளதா என்று கேள்வி எழுப்பினர். தமக்கு எதுவுமே தெரியாது என்றும் தெரிவித்தனர்.
கரைச்சிப் பிரதேச சபைக்கான இடம் ஒன்று கரடிப்போக்குச் சந்தியில் இருப்பதும், அங்கு பல லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள மலசல கூடம் 5 ஆண்டுகளாகப் பூட்டப்பட்ட நிலையில் இருப்பதும் அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. (ற-101,ரி3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு, உயர் குருதி அழுத்தத்துக்கு 30,000 பேர் இந்த வருடத்தில் சிகிச்சை

## சாவகச்சேரி வைத்தியசாலையில்

சாவகச்சேரி, டிசெ.31
சாவகச்சேரி வைத்தியசாலையில் 2015 ஆம் ஆண்டில் நீரழிவு மற்றும் உயர்குருதிஅழுத்தம்ஆகியவற்றுக்கு சுமார் 30 ஆயிரம் பேர் சிகிச்சை பெற்றுள்ளனர் என வைத்தியசாலை புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இந்த வருடத்தில் ஆயிரத்து 81 பேர் புதிய நோயாளர்களாக இனங்காணப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டில் வைத்தியசாலையில் நடத்தப்பட்ட நீரிழிவு சிகிச்சைப் பிரிவில் 12 ஆயிரத்து 411 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். அத்துடன் புதிய நோயாளிகளாக 375 பேர் இனங் காணப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றனர்.

இதே போன்று உயர் குருதி அழுத்தத்தால் பாதிக்கப்பட்ட 17 ஆயிரத்து 140 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

> “2015 ஆம் ஆண்டில் 17 ஆயிரத்து 140 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர் எனவும் புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டள்ளது.”

புதிய நோயாளர்களாக 706 பேர் இனங்காணப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளனர்.

2013 - 2014 ஆகிய வருடங்களில் சிகிச்சை பெற்றவர்களுடன் ஒப்பிடுகையில் நீரிழிவு, உயர் குருதி அழுத்தம் ஆகியவற்றால் புதிதாக இனங்காணப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை குறைந்து காணப்படுகிறது.

நீரழிவு நோயால் பாதிக்கப்பட்டு 2013 ஆம் ஆண்டு 526 நோயாளர்களும், 2014 ஆம் ஆண்டு 525 நோயாளர்களும் புதிதாக இனங்காணப்பட்டனர். 2015 ஆம் ஆண்டு இந்த எண்ணிக்கை 375 ஆக குறைவடைந்துள்ளது.

அதே போன்று உயர் குருதி அழுத்தத்தால் 2013 ஆம் ஆண்டு ஆயி ரத்து 136 பேரும், 2014 ஆம் ஆண்டு ஆயிரத்து 45 பேரும், 2015 ஆம் ஆண்டு 706 பேரும் புதிதாக இனங் காணப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர்.

அதேவேளை 2013 ஆம் ஆண்டு நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவில் 11 ஆயிரித்து 833 பேரும், 2014 ஆம் ஆண்டு 14 ஆயிரத்து 480 பேரும், 2015 ஆம் ஆண்டு 12 ஆயிரத்து 411 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

உயர் குருதி அழுத்த சிகிச்சைப் பிரிவில் கடந்த 2013 ஆம் ஆண்டு 16 ஆயிரத்து 334 பேரும், 2014 ஆம் ஆண்டு 17 ஆயிரத்து 961 பேரும், 2015 ஆம் ஆண்டில் 17 ஆயிரத்து 140 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர் எனவும் புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-9)

### யாழ்ப்பாண வர்த்தகர்கள் சுற்றுலா

யாழ்ப்பாணம், டிசெ.31
யாழ்ப்பாண வணிகர் சங்கத்தினால் வர்த்தகர்களுக்கானகைத்தொழில் துறைச் சுற்றுலா ஒன்று ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

வர்த்தகத் துறைசார்ந்த நடவடிக்கைகள், சிறிய கைத்தொழில் துறைகள், விவசாயம், கால்நடைப் பண்ணைகள் என்பவற்றை பார்வையிட்டு, பொருளாதாரத்தை விருத்தி செய்ய இந்தச் சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டுபெப்ரவரி மாதம் முதல் வாரத்தில் மேற்கொள்ளவுள்ள இந்தச் சுற்றப்பயணத்தில் பங்குபற்ற விரும்பும் வர்த்தகர்கள், யாழ் வணிகர் கழகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ் வணிகர் கழகச் செயலாளர் இ.ஜனக்குமார் தெரிவித்துள்ளார். (ற-ஜ-ரி4)

### ஊர்காவற்றுறை பிரதேச சபையால் 2016ஆம் ஆண்டு அபிவிருத்தி திட்டங்கள்

யாழ்ப்பாணம், டிசெ.31
ஊர்காவற்றுறை பிரதேச சபையின் 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக பல அபிவிருத்தி வேலைகளை நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மெலிஞ்சி முனை புதுக் குடியிருப்பு வீதியை, ஊரியிட்டு கிரவல் இட்டு புனரமைத்தல், அம்பலவாணர் வீதியை ஊரி இட்டுமதகுடன்புனரமைத்தல், சுருவில் பொதுக் கிணறு புனரமைப்பு, புளியங்கூடல் பொது நூலக உள்ளக வீதி புனரமைப்புக்கட்டம், கோட்டைவாசல் இந்துமயானக் கிணறு புனரமைத்தல், உப்புக்குளம் 3ஆம் ஒழுங்கை ஊரி, கிரவல் இட்டுப் புனரமைத்தல் ஆகிய வேலைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்த வேலைத்திட்டங்கள் சபை நிதி மூலமும், தம்பாட்டி பெரியபுலம் பிரதான வீதி நெல்சிப் திட்டம் மற்றும் சபைப் பங் களிப்புடனும் புனரமைப்புச் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.(ற-ஜ)

### மரம் அறுக்கும் வாள் வெட்டி காயம்

சாவகச்சேரி, டிசெ.31
மரம் அறுக்கும் இயந்திர வாள் இயங்கிக் கொண்டிருந்த வேளையில் தவறி, காலில் வீழ்ந்ததில் கால் பாதத்தில் பலத்த வெட்டுக் காயம் ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று மந்துவில் பகுதியில் இடம் பெற்றது.

மிருசுவில் தெற்கைச் சேர்ந்த காயமடைந்த நபர், சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ற-ஜ-9)

# இன்றைய முதியோர் எமது பொக்கிசங்கள்

## சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.31
இன்றைய முதியவர்கள் எமக்கான பொக்கிசங்கள். அவர்கள் கூறும் அறிவுரைகள், ஆலோசனைகள் எமது வாழ்க்கைக்கு சிறந்த வழிகாட்டுதலாக அமையும். எனவே முதியவர்களை இன்றைய சமுகத்தினர் நல்மரியாதையுடன் பேண வேண்டும்-இவ்வாறுநாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

நவாலி தெற்கு முதியோர் சங்கக் கௌரவிப்பு விழா நவாலி மகா வித்தியாலய தம்பையா பண்டிதர் மண்டபத்தில் தலைவர் பொன்னர் சின்னராசா தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தெரிவித்ததாவது-

ஒவ்வொரு தந்தையும் தன்னுடைய பிள்ளைகள் மிக சிறந்தவர்களாக, கல்விமான்களாக, நாடறிந்தவர்களாக வர வேண்டும் என்பதனையே ஒவ்வொருகணமும் சிந்திப்பார்கள்.

> “முதியவர்களைப் போற்றி அவர்களது வழிகாட்டலுடன் செயற்படுவோம்”

ஆனால் தந்தையின் சிந்தனைகள், எண்ணங்களை இன்றைய பிள்ளைகள் உணர்வதில்லை.

இன்றைய முதியோர்கள் எமது பொக்கிசங்கள். எமது தமிழ்மக்களது இருப்புக்கு, விடுதலைக்கு, சுபீட்சத்துக்கு தலைமை தாங்குபவர்களும் முதியோர்களே.

இவ்வாறாக முதியோர் சங்கம் இன்று முதியோர்களுக்கு பெருவிழா எடுப்பது வரவேற்கத்தக்க விடயம். எனவே முதியவர்களைப் போற்றி அவர்களது வழிகாட்டலுடன் செயற்படுவோம்.- என்றார். (ற-ஜ-50)

# பஸ்ஸில் பணம் திருடியவர் பயணிகளிடம் சிக்கினார்

## நன்றாகக் கவனித்த பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.31
சேவையில் ஈடுபட்ட பஸ்ஸில் பயணிகளின் பணத்தைத் திருடிய நபரைக் கையும் மெய்யுமாகப் பிடித்த பயணிகள் அந்த நபரை நன்றாகக் கவனித்த பின்னர்கொடிகாமம்பொலிஸாரிடம்ஒப்படைத்தனர். இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொடிகாமம்சென்றுகொண்டிருந்த பஸ்ஸில் பயணித்த நபர் ஒருவர், பயணிகளின் பணப் பேர்ஸ், மற்றும் கைப்பைகளில் இருந்து பணத்தைத் திருடியுள்ளார். இதனை அவதானித்த சகபயணிகள்அவரை மீசாலைப்பகுதியில்வைத்து நன்றாகக் கவனித்தனர்.

பின்னர் பஸ் கொடிகாமம் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு குறித்த நபர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

குறித்த நபர் நல்லூர்ப் பகுதியைச் சேர்ந்தவர் எனவும், அவரிடம் இருந்து 2 ஆயிரம் ரூபா பணம் மீட்கப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-ஜ-107)

# குடாக் கடலில் அதிகளவு பிடிபடும் ஒட்டி மீன்கள்

யாழ்ப்பாணம், டிசெ.31
யாழ். குடாக் கடற்பரப்பில் பெருமளவு ஒட்டி மீன்கள் மீனவர்களின் வலைகளில் சிக்குகின்றன.

கடற்பகுதியில் நீரோட்டம் மற்றும் காலநிலை மாற்றத்தாலேயே ஒட்டி மீன்களின் பிடிபாடு அதிகரித்துக் காணப்படுகின்றது என்று மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒட்டி மீன்கள் அதிகளவில் சந்தைக்கு வந்து சேர்ந்ததால்அவற்றின் விலைமிகவும் சரிந்தே காணப்பட்டது.

பாசையூர், குருநகர், கொட்டடிமீன்சந்தைகளில் இந்த ஒட்டி மீன் கிலோ நூறு ரூபாவாக விற்கப்பட்டது.

இந்தஒட்டிமீன்களின்விலை வீழ்ச்சியைப் பயன்படுத்தி வியாபாரிகள் கூலர் வாகனம்மூலம்அவற்றைத்தென் பகுதிக்கும் கூடுதலாக எடுத்துச் சென்றனர். (ற-ஜ-17)

### காயம் ஏற்படுத்திய குற்றச்சாட்டில் விளக்கமறியல்

சாவகச்சேரி, டிசெ.31
தாக்குதல் நடத்திக் காயம் விளைவித்தசந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று உத்தரவிடப்பட்டது.

அந்தப் பகுதியைச் சேர்ந்த ஒருவரைத் தாக்கிய சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நபரை நேற்று நீதிவான் முன்னிலையில் முற்ப டுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிவான் குறித்த நபரை எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தர விட்டார். (ற-ஜ-9)

### வடக்குக்கு 12 பொது சுகாதார பரிசோதகர்கள் நியமனம்

சாவகச்சேரி, டிசெ.31
வடமாகாணத்துக்கு புதிதாக 12 பொது சுகாதார பரிசோதகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் கொழும்பு பண்டார நாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ண இவர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கினார்.

யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதாரப் பயிற்சிப் பாடசாலையில் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த எட்டுப் பேருக்கும், மட்டக்களப்பு பிராந்திய பயிற்சி நிலையத்தில் பயிற்சி நெறியைப் பூர்த்திசெய்த நான்கு பேருக்கும் வடமாகாணத்துக்கு நியமனங்கள்வழங்கப்பட்டுள்ளன.

நிகழ்வில் 255 பொது சுகாதார பரிசோதகர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

வடமாகாணத்துக்கு நியமிக்கப்பட்ட 12 பொது சுகாதார பரிசோதகர்களுக்கான நிலையங்கள் மாகாண சுகாதார அமைச்சால் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-9)

# மட்டுவிலில் இன்று டெங்குக் கட்டுப்பாடு

## சுகாதாரப் பகுதியினரால் முன்னெடுக்கப்படவுள்ளது

சாவகச்சேரி, டிசெ.31
மட்டுவில் பிரதேசத்தில் மழை வெள்ளம் காரணமாக இடைநிறுத்தப்பட்ட டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகள் இன்று வியாழக்கிழமை நடைபெறும் என்று சாவகச்சேரி சுகாதார திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர்.

இன்று பிரதேச சபையின் கழிவகற்றல் வாகனங்கள் மூலம் உக்காத பொருள்கள் அப்புறப்படுத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் பிரிவு மக்கள் பின்வரும் இடங்களில் உக்காத பொருள்களான பிளாஸ்ரிக் பொருள்கள், தகரங்கள் போன்றவற்றை தனித்தனியாக உரப்பைகளில் கட்டி வீதியோரங்களில் வைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

நுணாவில் சந்தி தொடக்கம் கனகன்புளியடி சந்தி ஊடாக சரசாலை வடக்கு வரை; கைதடி, நுணாவில் வைரவர் கோவில் சந்தி தொடக்கம் மட்டுவில் தெற்கு முசுறி ஊடாக மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சி அம்மன் ஆலயம் வரை; கனகன்புளியடிச் சந்தி தொடக்கம் மட்டுவில் கண்ணகை சனசமூக நிலையம் வரையெனக் குறிப்பிட்ட இடங்களில் உக்காதபொருள்களைவைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை இன்று மட்டுவில் பிரதேசத்தின் அனைத்து இடங்களிலும் பொலிஸாரும் சுகாதாரப் பகுதியினரும் இணைந்து பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளனர். அதனால் அந்தப் பகுதி மக்கள் தமது குடியிருப்புகள் மற்றும் காணிகளை துப்புரவாக வைத்திருக்குமாறும் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய நிலையில் காணப்படும் குடியிருப்புகள் மற்றும் காணி உரிமையாளர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசமைப்பை மாற்றினால் அதனைத் தீ மூட்டி எரிப்போம்

## ரணிலை எச்சரிக்கின்றது பொதுபல சேனா

கொழும்பு, டிசெ.31
பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தேவைக்கு ஏற்ப அரசமைப்பை மாற்ற முனைந்தால், அதற்கு நாம் இடமளிக்கமாட்டோம். அதனைத் தீ மூட்டி எரிப்போம் என பொதுபல சேனாவின் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.
ரணில் விக்கிரமசிங்கவுக்கு இறுதியில் இடுப்பில் ஆடையும் இன்றியே அரசிலிருந்து செல்ல வேண்டி வரும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-



தமிழர்களின் தேவைக்கு ஏற்பச் செயற்படுவதற்குப் பிரதமர் முனைகின்றார். அரசமைப்பை மாற்ற நியமிக்கப்பட்டுள்ள செயற்குழுவில் உள்ள அனைவரையும் பார்க்கும்போது வாந்தி வருகின்றது. அனைவரும் அரசசார்பற்ற நிறுவனங்களின் முக்கிய முகவர்கள்.
நாம் அரசிடம் தெளிவாகக் கூறுகின்றோம். தமிழ் மக்களின் உள்ளத்தை சந்தோசப்படுத்த இராணுவ முகாமை அகற்றி, அரசமைப்பை மாற்ற முன்வருவதாயின், தயவுசெய்துவிகாரைகளுக்குரிய நிலங்களையும் விடுவியுங்கள்-என்றார். (த-வ)

# கடவுச் சீட்டைப் பெற மக்கள் முண்டியடிப்பு

## ஜனவரியில் கட்டணம் அதிகரிக்கப்படுவதால்

கொழும்பு, டிசெ 31
ஜனவரி முதலாம் திகதி முதல் கடவுச்சீட்டுகளுக்கான கட்டணத்தை 2 ஆயிரத்து 500 ரூபாவால் அரசு அதிகரிக்கவுள்ளதால் ஒரு நாள் சேவையில் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதற்காக நேற்று குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தில் நாடு முழுவதிலுமிருந்து பெருந்தொகையானோர் திரண்டிருந்தனர். இதனால் குடி வரவு குடியகல்வுத் திணைக்களம்முதல்பொரளைச் சந்திவரை இளைஞர், யுவதிகள் முதல் பெரியோர் வரை நீண்ட வரிசையில் பல மணி நேரம்காத்துநின்றுகொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.
2016ஆம் ஆண்டுக்கான அரசின் வரவுசெலவுத் திட்டத்தில் ஜனவரி முதலாம் திகதி முதல் ஒருநாள் சேவைக் கட்டணம் 7 ஆயிரத்து 500 ரூபாவிலிருந்து 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டண அதிகரிப்பு நாளை முதல் நடைமுறைக்கு வரவுள்ளதால் கடவுசீட்டைப் பெற்றுக் கொள்வதில் பெருமளவானோர் குடிவரவு குடியகல்வுத்திணைக்களத்துக்கு வருகை தந்திருந்தனர்.
ஒரு நாள் சேவையில் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு நாடளாவிய ரீதியிலிருந்து பெருமளவானோர் வருகை தந்திருந்தனர். இருப்பினும், நாளொன்றுக்குக் குறிப்பிடத்தக்களவான கடவுச்சீட்டுகளே குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தால் விநியோகிக்கப்படுவதால், கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்ள முடியாமல் பெரும்பாலானோர் ஏமாற்றத்துடன் வீடு திரும்பியுள்ளனர்.
கடவுசீட்டைப் பெற்றுக்கொள்வதற்காக இன்று (நேற்று) காலை 6 மணிமுதல் வரிசையில் காத்திருந்ததாகவும், இருப்பினும், தமக்குக் கடவுச்சீட்டு கிடைக்கவில்லை என்றும் சிலர் கூறினர். (த-சி)

# பிரசாந்தனின் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, டிசெ.31
தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின்செயலாளரும் கிழக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினருமான பூ.பிரசாந்தன் மற்றும் அவரது சகோதரரான ஹரனுக்கும் எதிர்வரும் ஜனவரி மாதம் 12ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.
மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இவர்கள் இருவரையும் முற்படுத்திய போது, மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதிபதி எம்.றியால் இந்த உத்தரவைப் பிறப் பித்தார்.
2008 ஆம் ஆண்டு ஆரையம்பதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் இரட்டைக்கொலைச் சம்பவமொன்று தொடர்பில் கடந்த ஒக்ரோபர் மாதம் 23ஆம் திகதி பூ.பிரசாந்தன் காத்தான்குடிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தார். (தி)

# உள்ளூராட்சிப் பதவிக் காலம் நீடிப்புக்கு ஜே.வி.பி. எதிர்ப்பு

கொழும்பு, டிசெ.31
உள்ளூராட்சிச் சபைகளின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளமைக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ள ஜே.வி.பி., அடுத்த வருடம் ஏப்ரலுக்குள் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.
புதிய தேர்தல் முறைமையை அறிமுகப்படுத்துவதற்குக் கால தாமதம் ஏற்படுமானால், பழைய முறைமையிலேயே தேர்தலை நடத்துமாறும் அக்கட்சி சுட்டிக் காட்டியுள்ளது.
ஜே.வி.பியின்செய்தியாளர்மாநாடு நேற்று முன்தினம் முற்பகல் பெலவத்தையிலுள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. இதன்போது, உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் தொடர்பில்கருத்துவெளியிடுகையிலேயே அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-
21 உள்ளூராட்சிச் சபைகளின் பதவிக்காலம் மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. இதனால், உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை திட்டமிட்ட திகதியில் நடத்தாது ஒத்திவைப்பதற்குரிய அறிகுறி தென்படுகின்றது.
அத்துடன், கடந்த மார்ச் மாதத்துடன்பதவிக்காலம்முடிவடைந்த உள்ளூராட்சிச் சபைகளுக்கும் இன்னும் தேர்தல் நடத்தப்படவில்லை. அவை கலைக்கப்பட்டு ஆணை யாளரின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. எனவே, தற்போது மேலும் ஆறு மாத காலம் நீடிக்கப்பட்டுள்ளதால், இவற்றுக்கான தேர்தலும் தாமதமடையும்.
இதுஜனநாயகத்துக்கும்மக்களின் வாக்குரிமைக்கும் எதிரான செயலாகும்.ஆகவே,உள்ளூராட்சிச்சபைகளின் பதவிக் காலம் நீடிக்கப்பட்டதற்கு ஜே.வி. பி. கடும் எதிர்ப்பை வெளியிடுகின்றது. தேர்தலை ஏப்ரலுக்குள் நடத்துமாறு அரசை நாம் வலியுறுத்துகின்றோம்.
மகிந்த ஆட்சியின்போது முன்னெடுக்கப்பட்ட எல்லைநிர்ணயப் பணிகளில் குளறுபடிகள் இருக்கின்றனவெனச்சுட்டிக்காட்டிஅவற்றை நிவர்த்தி செய்வதற்குரிய பணியில் அரசு ஈடுபட்டுள்ளது. இதைச் செய்துமுடிப்பதற்குக் காலம் தேவைப்படும். இது அவசர அவசரமாக செய்யக் கூடிய விடயமும் அல்ல. அவசரமாகச் செய்தால் அந்தக் காரியம் எதிர்காலத்தில் சிக்கலை தோற்றுவிக்கக்கூடும். ஆகவே, பழைய முறைப்படி உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை அரசு நடத்தலாம். இதற்கு முன்னரும் அப்படித்தேர்தல்நடைபெற்றுள்ளது. தேர்தல் முறை மையில் மாற்றம் அவசியம் என்ற நிலைப்பாட்டில்தான் ஜே.வி.பி. இருக்கிறது. ஆனால், அது உரிய வகையில் முன்னெடுக்கப்படவேண்டும். கட்சிக்காக அன்றிநாட்டுக்குப்பொருத்தமான முறையாக இருக்க வேண்டும்-என்றார். (த-சி)

# வரவு-செலவுத் திட்ட திருத்தங்களை நடைமுறைப்படுத்தக் கோரிக்கை

கொழும்பு,டிசெ.31
வரவு-செலவுத் திட்டம் தொடர்பாகக் கொண்டு வரப்படும் திருத்தங்களை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவருமாறு அமைச்சரவைக் கூட்டத்தில் வைத்து அமைச்சர்கள் கோரிக்கையொன்றை விடுத்துள்ளனர்.
கடந்த 23 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் வைத்தே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
உர நிவாரண உதவிகள் வழங்கப்படும் வரையறையை இரண்டு ஹெக்ரேயர்கள் வரையில் அதிகரித்தல், நெல் விலைக்கு மேலதிகமாக தேயிலை, தேங்காய், இறப்பர் மற்றும் தெரிவு செய்யப்பட்ட மரக்கறிகள் மற்றும் பழவகைகளுக்கு உர நிவாரண உதவியைப் பெற்றுக்கொடுத்தல், மின்சாரத்தால் இயங்கும் மோட்டார் வாகனங்கள் தொடர்பான வரியை மீளவும் 5 வீதமான வரையறைக்குக் குறைத்து விடுதல், வரவு - செலவுத்திட்டத்துக்கு முன்னர் கடன் முறிக் கடிதங்கள் முன்வைக்கப்பட்டிருந்த வாகனங்கள் தொடர்பாக வரிகளின் அதிகரிப்பை நடைமுறைப்படுத்திக் கொள்ளா திருத்தல் உள்ளிட்ட பல வரவு - செலவுத்திட்ட திருத்தங்கள் நாடாளுமன்றத்தில் முன் வைக்கப்பட்டிருந்தன.
இது தொடர்பாக தீர்வொன்றை மேற்கொள்வதற்காக கடந்த 23 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் மலிக் சமர விக்கிரம, லக்ஸ்மன் கிரி யெல்ல, கலாநிதி சரத் அமுனுகம, கலாநிதி ஹர்ச டி சில்வா ஆகிய அமைச்சர்களைக் கொண்ட குழுவொன்றும் நியமிக்கப்பட்டிருந்தது.
அமைச்சரவைக் கூட்டத்துக்குப் பின்னர் கூடியிருந்த அந்தக் குழுவும் வரவு-செலவுத் திட்டத் திருத்தங்கள் உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டியுள்ளதாக முன்மொழிந்திருந்தது.
அதற்கமைய வரவு-செலவுத் திட்டத் திருத்தங்களை உடனடியாக நடைமுறைப்படுத்துவதைஅமைச்சரவைத் தீர்மானம் ஒன்றாக நடைமுறைப்படுத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. (த-ஐ-22)

# கைதிகள் வெட்டிய மாமரம் விழுந்து மூதாட்டி சாவு

கொழும்பு, டிசெ.31
வெலிக்கடை சிறைச்சாலைக்கு அண்மையில், சிறைக் கைதிகள் சிலரினால் நேற்று முன் தினம் வெட்டப்பட்ட மாமரமொன்று விழுந்ததில் 72 வயதான மூதாட்டியொருவர் சாவடைந்துள்ளார்.
பேஸ்லைன் வீதியில், மோட்டார் சைக்கிளில் பயணித்த வேளையே இவ்வாறு சாவடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இவர், தெமட்டகொட,நெலுவன வீதியை வசிப்பிடமாகக் கொண்டவர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (தி)

# ஜனாதிபதி பங்கேற்ற நிகழ்வில் கோத்தாவும்

கொழும்பு,டிசெ.31
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துகொண்ட முக்கிய நிகழ்வொன்றுக்குப் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச அழைக்கப்பட்டுள்ளார்.
கோத்தபாய ராஜபக்ச குறித்த நிகழ்வில் கலந்துகொண்டமை அரசியல் ஆய்வாளர்களின் விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது.
நீர்கொழும்பில் அமைக்கப்பட்ட 16ஆவது பெனடிக்ற் கல்வி நிலையத் திறப்பு விழாவுக்குப் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்த பாய ராஜபக்ச அழைக்கப்பட்டிருந்தார். அந்த நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சபாநாயகர் கரு ஜயசூரிய, அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல, கர்தினால் மல்கம் ரஞ்சித் உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டுள்ளனர்.



நடைபெற்ற பல குற்றச்சாட்டுகளில் தற்போதைய அரசினால் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வரும் கோத்தபாய விசாரணைகள் முடிவடையாத நிலையில், அரசின் முக்கிய நிகழ்வுக்கு அழைக்கப்பட்டுள்ளமை, மூலம் குற்றம்சாட்டப்பட்டவர்கள் அரசின் நிழலில் பாதுகாக்கப்படுகின்றனர் என்பது தெளிவாவதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (த-ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் உரிமைக்காக செயற்படுகிறது கூட்டமைப்பு

*கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு,டிசெ.31
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு–கிழக்கு மக்களின் ஆணையைப் பெற்றுக் கொண்ட ஒரு அமைப்பாக அனைவரையும் இணைத்துக் கொண்டு அந்த மக்களின் உரிமைக்காகச் செயற்படுகின்றது. சர்வதேசம் அவர்களை ஏற்றுக் கொண்டுள்ளது. எனவே அவர்களுடன் இணைந்து அனைவரும் செயற்பட்டு அந்த மக்களின் உரிமைகளையும் தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்ளவேண் டும்.
இவ்வாறு கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.



கல்வி அமைச்சில் நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,
ஆசிரியர்களுக்கு இன்று வழங்கப்படுகின்ற நியமனமானது அவர்கள் இந்தத் துறைக்குப் பிரவேசிக்கும் ஒரு வழி மாத்திரமே. அவர்கள் தங்களுடைய தகைமைகளை வளர்த்துக் கொண்டு இன்னும் உயர் பதவிகளுக்குச் செல்ல வேண்டும்.
எதிர்காலத்தில் கல்வித்துறையில் நிலவும் குறைபாடுகள் அனைத்தையும் படிப்படியாக நிவர்த்தி செய்துகொள்ள நாம் தற்பொழுது நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.
வெறுமனே ஆசிரியர்கள் கடமையைப் பொறுப்பேற்றவுடன் விடுமுறையில் செல்வதும், வங்கிக் கடன் பெறுவதும், திருமணம் முடிப்பதும் மட்டுமல்லாமல் தமது கடமைகளையும் சரியாகச் செய்யவேண்டும்.
இந்த நாட்டு மக்களின் வரிப் பணத்தின் மூலமும், அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளும் நிதியின் மூலமுமே ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. எனவே அதற்கான உரிய பலனை நீங்கள் மீளச் செலுத்தவேண்டும்.
இன்று வடக்கு–கிழக்குப் பகுதியில் குழுக்களாகப் பிரிந்து செயற்படுகின்ற ஒரு நிலை ஏற்பட்டுள்ளது. இது ஆரோக்கியமான ஒரு செயற்பாடாக நான் கருதவில்லை. அதற்குக் காரணம் பிரிந்து நின்று கடந்த காலங்களில் மலையக தலைவர்கள் செயற்பட்டதன் காரணமாக அபிவிருத்திகளையும் உரிமைகளையும் பெற்றுக் கொள்ள முடியாத ஒரு நிலை ஏற்பட்டுள்ளது–என்றார்.
இந்த நிகழ்வில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான பட்டதாரி ஆசிரியர்கள் 211 பேருக்கும்,தேசிய கல்வியியல் கல்லூரிகளில் இரண்டாவது தடைவை தோற்றி சித்தி பெற்ற டிப்ளோமாதாரிகள் 161 பேருக்கும், மேற்கத்தேய சங்கீத ஆசிரியர்கள் 70 பேருக்கும் என 442 பேருக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன. (த–ஐ–10)

## மகிந்தவின் பதிலுக்கு காத்திருக்கின்றது சுதந்திரக் கட்சி

கொழும்பு, டிசெ.31
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் போசகர் பதவி தொடர்பில் உத்தியோக பூர்வமான அறிவித்தல் ஒன்றை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வழங்க வேண்டும் எனக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
போசகராக இருந்து கொண்டு தொடர்ந்தும் கட்சியின் வெற்றிக் காக உழைப்பதா? அல்லது கட்சியிலிருந்து விலகிப் புதிய கட்சியொன்றை ஆரம்பிக்க உதவி வழங்குவதா? என்பது தொடர்பில் அவர் முடிவு எடுக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
மேலும் புதிய கட்சியொன்றை ஆரம்பிக்கும் அளவுக்கு கட்சி அவருக்கு எந்தவித அநீதியும் இழைக்கவில்லை. அத்துடன் அவர் விலகிச் சென்று புதிய கட்சியை ஆரம்பிக்கப் போவதாக எந்த வித உத்தியோகபூர்வ அறி வித்தல்களையும் இது வரை வழங்கவில்லை யெனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ஐ)

## மது உற்பத்திக் கட்டணத்தை நீக்குவதற்கு அரசு தீர்மானம்

கொழும்பு,டிசெ.31
இந்த முறை வரவு–செலவுத் திட்டத்தின் மூலம் அதிகரிக்கப்பட்டிருந்த மதுபான உற்பத்தி அனுமதிப்பத்திரங்களுக்கான கட்டணத்தை நீக்கப் போவதாக அரச தகவல்கள் தெரிவித்துள்ளன.
மதுபான உற்பத்திக்கான அனுமதிப் பத்திரங்களின் கட்டணம் இந்த முறை வரவு– செலவுத் திட்டத்தில் 150 மில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்பட்டிருந்தது.
இதுபோன்ற மிக உயர்வான உற்பத்தி அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் அறவிடப்படுவதால் மதுபான உற்பத்தி நிறுவனங்கள் பெரும் சிரமத்துக்கு உள்ளாவதாகக் கிடைக்கப் பெற்றிருந்த முறைப்பாடு களைக் கவனத்திற்கொண்டு, கட்டணத்தை நீக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.
நாட்டில் 24 வரையிலான மது பான உற்பத்தி நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன. உற்பத்தி அனுமதிப் பத்திரங்களுக்கான கட்டணம் 150 மில்லியன் ரூபாவரை அதிகரிக்கப் பட்டிருப்பதன் காரணமாக, பெருமளவிலான மதுபான உற்பத்தி நிறுவனங்கள் இழுத்து மூடப்பட்டு மூன்று நான்கு நிறுவனங்கள் மாத்திரமே எஞ்சியிருக்கக்கூடுமெனப்பொருளாதார நிபுணர்கள் அரசுக்குச் சுட்டிக் காட்டியுள்ளனர்.
இதனிடையே மதுபான உற்பத்தி அனுமதிப் பத்திரக் கட்டணம் 150 மில்லியனாக அதிகரிக்கப்பட்டிருப்பதற்கு எதிராக மதுபான உற்பத்தி நிறுவனங்கள் பலவும் ஏற்கனவே நீதிமன்றத்தில் சில வழக்குகளைத் தொடுத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த–ஐ–22)



பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு வழங்கலில் தேசிய கொள்கையொன்றை வகுக்குமாறு கோரி பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் முன்பாக நேற்று வேலையற்ற பட்டதாரிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (த)

## தாஜுதீன் படுகொலையின் முக்கிய புள்ளிகள் சிக்குவர்

*அமைச்சர் ராஜித சொல்கிறார்*

கொழும்பு, டிசெ. 31
பிரபல ரக்பி வீரர் வசிம் தாஜுதீ னின் படுகொலையுடன் தொடர் புடைய குற்றச்சாட்டில் முக்கியஸ்தர்கள் சிலர், மிக விரைவிலேயே சட்டத்தின் பிடிக்குள் சிக்கவுள்ளனர் என்று அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.
தாஜுதீனின் கடத்தப்பட்ட டிபென் டர் ரக வாகனம் எவருடையது, பிரதான சந்தேகநபரான சாரதி, எவருடைய சாரதியாகக் கடமையாற்றிவர் எனச் சொல்லித் தெரியவேண்டியதில்லை என் றும் அவர் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், பிரபல ரக்பி வீரர் வசிம் தாஜுதினின் படுகொலை தொடர்பான விசாரணை, மிக விரைவிலேயே முடிவடையவுள்ளது. விசாரணைகள் நிறைவடைந்ததும் முக்கிய புள்ளிகள் சிலர் கைது செய்யப்படுவர் என்றார்.
நல்லாட்சி அரசு ஆட்சிபீடமேறி ஜனவரி 8 ஆம் திகதியுடன் ஒருவருடம் நிறைவடைகின்றது. இந்தக் குறுகிய காலத்துக்குள் நாட்டில் பல செயற்றிட்டங்களை நாம் முன்னெடுத்துள்ளோம். குறுகிய காலத்துக்குள் 19 ஆவது திருத்தச்சட்டத்தை அறிமுகப்படுத்தி, ஜனாதிபதியின் பிரதான அதிகாரங்கள் குறைக்கப்பட்டுள்ளன. 10 சுயாதீன ஆணைக் குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. மிக விரைவில், நாடாளுமன்றம் அரசமைப்புச் சபையாக மாறவுள்ளது. அதுமட்டுமன்றி அரசின் நல்லாட்சிப் பயணத்தை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது–என்றார். (த–4)

## சொலிசிட்டர் ஜெனரல் கம்லத் சட்டமா அதிபராகப் பரிந்துரை

*வழங்கியுள்ளார் நீதி அமைச்சர்*

கொழும்பு, டிசெ.31
சொலிசிட்டர் ஜெனரல் சுகத கம்லத் தைப் புதிய சட்டமா அதிபராக நிய மிக்குமாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச பரிந்துரைத்துள்ளார்.
தற்போது, சட்டமா அதிபராகவுள்ள யுவான் ஜன வனசுந்தர எதிர்வரும் 9ஆம் திகதி ஓய்வு பெறவுள்ள நிலையிலேயே நீதி அமைச்சர் இவ்வாறு ஜனாதிபதிக்குப் பரிந்துரை செய்துள்ளார்.இது தொடர்பில் கொழும்பு ஆங்கில ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் நியமிக்கப்பட்ட சட்டமா அதிபருக்குச் சேவைநீடிப்பு வழங்கப்படவில்லை
பொதுவாக நீதி அமைச்சரின் பரிந்துரைக்கு அமைய ஜனாதிபதியினால் சட்டமா அதிபர் நிய மிக்கப்படுவது வழமையானதாகும்.
இதன்படி, சொலிசிட்டர் ஜெனரல் சுகத கம்லத்தை, புதிய சட்டமா அதிபராக நியமிக்குமாறு நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச, ஜனாதிபதிக்குப் பரிந்துரைத்துள்ளார்.
இந்தப் பதவிக்குச் சட்ட வல்லுநர் [illegible] ஜயசூரியவும் முயற்சிப்பதாக தெரிவிக்கப்படுகிறது என அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த–வ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வடக்கில் காணி விடுவிப்பு அறிவிப்பு ஜெனவாவில் அரசைக் காப்பாற்றவா?

அடே அப்பா! வலிகாமம் வடக்கில் தாம் கைப்பற்றிய, மக்களின் காணிகளில் சொற்பத்தை, மூன்றாவது தடவையாக அரசு -- இராணுவம் -- நேற்றுமுன்தினம் விடுவித்தது! உயர் பாதுகாப்பு வலயம் என்ற மகுடத்தைச் சூட்டி, தமிழ் மக்களின் பூர்வீகச் சொத்தான, அவர்களின் சொந்த மண்ணில் ஆறாயிரத்து முன்னூற்று எண்பத்து நான்கு (6,384) ஏக்கர்களை கொழும்பு அரசு ஏப்பம் விட்ட கதை 25 ஆண்டுகளுக்கு முந்தையது!

நல்லாட்சி அரசு பதவிக்கு வந்து ஓர் ஆண்டு கழியும் நிலையிலேயே, அரச படைகள் கைப்பற்றிய தமிழர்களின் நிலங்களை அவர்களிடம் கையளிக்க, பெரும் நச்சரிப்பின் விளைவாக இராணுவம் முன்வந்தது; இணங்கியது.

முந்தைய அரசின் அக்கிரமத்தினால், இடம்பெயரச் செய்யப்பட்ட வலி. வடக்கு மக்களின் நிலங்களை, மகிந்த அரசு தனதாக்கியது. படையினரின் பூர்வீக மண் என்று கூறும் விதத்தில் அப்போதைய சர்வாதிகார அரசு தமிழ் மக்களின் மண் மீது பிசினாக ஒட்டிக்கொண்டது!

இந்த ஆண்டு பிற்பகுதியில் -- ஒக்ரோபரில் -- யாழ்ப்பாண மாவட்ட செயலகம் திரட்டிய தகவல்களில் இருந்து, அரசின் முப்படையினரால் தமிழ் மக்களின் பூர்வீக நிலம் -- 7,214 ஏக்கர் நிலப்பரப்பு -- கபளீகரம் செய்யப்பட்டதான தகவல் வெளிக்கிளம்பியது. அவை பத்தாயிரத்து நானூற்றுத் தொண்ணூற்றைந்து (10,495) மக்களுக்குச் சொந்தமானவை என்பதும் பகிரங்கமாயிற்று.

போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, ஆறு ஆண்டுகள் கழிந்த நிலையிலும், அற்ப சொற்ப மீள் குடியமர்வு நடவடிக்கைகள், தலைகாட்டிய போதிலும், தமிழ் மக்களின் சொந்த மண், ஏழாயிரத்து இருநூற்று பதினான்கு (7,214) ஏக்கர் நிலப்பரப்பு இப்போதும், முப்படையினர் வசமே சிக்குண்டு உள்ளது என்ற உண்மை -- தகவல் -- அம்பலமாகியிருந்தது.

ஒட்டுமொத்தமாக, வடக்கு வாழ் தமிழ் மக்களின் சொந்த நிலம் -- பரம்பரைக் காணிகள் -- முப்படைகளின் வசம் முடக்கி வைக்கப்பட்டு, கையகப்படுத்தப்பட்டுள்ள நிலைமை, எப்போது சீர் செய்யப்படும் என்பதற்கான ஆக்க பூர்வமான கைங்கரியம் எதுவும், சிறிய வெளிச்சம் அளவில் தானும் தென்படவில்லை.

இந்த இலட்சணத்தில், வலி.வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தில், அந்தப் பிரதேச மக்களின் எழுநூறு ஏக்கர் காணி, ஆரவாரம் எதுவும் இன்றி விடுவிக்கப்பட்டிருப்பது 'உலக அதிசயம்' என்று கொள்ளக்கூடியதே.

தடல்புடல் எதுவும் இன்றி காணிகள் விடுவிக்கப்பட்டிருப்பினும், அது நாளை மலரும் 2016 ஆம் ஆண்டில் ஜெனிவாவை -- மனித உரிமைகள் பேரவையை -- ஆசுவாசப்படுத்துவதற்கான குள்ளநரித் திட்டமாகவும் இருக்கலாம்.

உள்ளார்ந்து ஊடுருவிப் பார்த்தால், நாளை பிறக்கும் புதிய ஆண்டில் -- 2016 ஆம் ஆண்டில் --

ஐ.நா. மனித உரிமைகள் சபையை, ஜெனிவாவில் எதிர்நோக்க வேண்டிய கட்டாய நிலையை, கடும் போக்கில் இருந்து மென்மைப்படுத்தும் நல்லாட்சி அரசாளரின் செயற்றிறன் நுட்பமே இது (றீமிஷழிமிளஆதீ) என்றும் இந்த விடுவிப்பைக் கொள்ளலாம்.

இவை யாவும் பாதிப்புற்ற மக்களின் நலன் நாடியதா, அன்றி நல்லாட்சி அரசை ஜெனிவாவில் காப்பாற்றும் உத்தியா என்பது இன்னும் சில வாரங்களில் தெரிந்துவிடும்!!

# முதலமைச்சர் ஆற்றிய உரை உடைவை உறுதியாக்கி விட்டது

கம்பவாரிதி

நேற்று முன்தினம் சம்பந்தன், விக்னேஸ்வரன் ஆகியோரின் சந்திப்பு, உண்டாக்கியிருந்த சிறு நம்பிக்கையை, நேற்றைய, தமிழ்மக்கள் பேரவையின் இரண்டாவது கூட்டமும், அதில் முதலமைச்சர் ஆற்றிய உரையும் முற்றாய்க் கலைத்துவிட்டன. இனி என்ன? உடைவு நிச்சயம் என்பது, உறுதியாகிவிட்டதென்றே கொள்ளலாம். தமிழ்மக்கள் பேரவையின் இரண்டாவது கூட்டத்தில், முதலமைச்சர் ஆற்றிய உரையில், சில ஐயங்கள் உதிக்கின்றன. அவற்றை மட்டும் உங்கள் முன் வைத்துவிட்டு ஓய்கிறேன்.

### தோற்றவர்களைக் காப்பாற்றும் முயற்சி

1 முதலமைச்சர்:- தேர்தலில் தோல்வி அடைந்தவர்கள் தீண்டத்தகாதவர்கள் என்ற கருத்து மறைய வேண்டும். சிறுவன்தானே, சிற்றூழியன்தானே, தேர்தலில் தோற்றவன்தானே என்றெல்லாம் மக்களின் மாண்பை மறந்து அநாகரிகமாகப் பேச விளைவது இனியேனும் நிற்பாட்டப்படவேண்டும். ஒருவர் தேர்தலில் தோற்றுவிட்டால் மக்கள் அவரை என்றென்றும் புறக்கணித்துவிடுவார்கள் என்று அர்த்தம் இல்லை.

இதன்மூலம் முதலமைச்சர், தேர்தலில்தோற்றஅணியினரை, வெளிப்படையாய்க் காப்பாற்ற முனைந்திருக்கிறார். கடந்த தேர்தலில் இத னையே தான் மறைமுகமாகச் செய்தார்.

அதைச்சுட்டிக்காட்டிய சுமந்திரனைக் குற்றம் சொன்னார். தான் அப்படி எவரையும் ஆதரிக்கவில்லை என்று அடித்துப் பேசினார். இன்று அத்தனையும் பொய் என்பது அவரது மேற்கண்ட கருத்தால் நிச்சயமாகிவிட்டது. தேர்தலில் தோற்றவர்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும்-முன்பு அப்படி நடந்திருக்கிறது என்றும்- சிங்களத்தலைவர்களை ஆதாரம் காட்டி, நீண்டநேரம் எடுத்து விளங்கப்படுத்தியிருக்கிறார் முதலமைச்சர். இதற்காகத்தான் தமிழ் மக்கள் பேரவை கூட்டப்பட்டதா? தேர்தலில் தோற்றவர்களைக் காப்பாற்றுவதுதான், தமிழ்மக்கள் பேரவையில் முதலமைச்சரின் வேலையா? தோற்றவர்களை ஒதுக்க வேண்டாம் என்று, வக்காலத்து வாங்கும் முதலமைச்சர், மக்கள் ஆதரவு பெற்று, வென்றவர்களை ஒதுக்குவதன் காரணம் என்ன? அங்ஙனமாயின் தேர்தலில் தோற்றவர்கள் மக்களால் ஒதுக்கப்பட்டவர்கள் இல்லையா? அடிமட்ட மக்களின் ஆதரவே போராட்டத்தின் பலம் என்று சொல்லும் முதலமைச்சர், அடிமட்ட மக்களின் வாக்குகளால் அளிக்கப்பட்ட தீர்ப்பை நிராகரிப்பது ஏன்? தேர்தலில் தோற்றவர்கள் பற்றி முதலமைச்சர் சொல்லும் கருத்துக்கள், ஜனாதிபதித் தேர்தலில் தோற்ற மகிந்தவுக்கும் பொருந்துமா? கற்றவர்கள் ஆராய்வார்களாக.

2 முதலமைச்சர்:- இப்பொழுது தமிழர்கள் எவரும் சேரப் பார்க்கிறார்கள் என்ற ஒரு பீதி தென்னிலங்கையில் உருவாகி வருவதைக் காணக்கூடியதாயிருக்கிறது. அதற்கு இடமளிக்கக் கூடாது என்ற கருத்தும் அங்கு விரவி வருகிறது.

அவர்கள் கருத்தை வழிமொழிந்துதான், ஒன்றாயிருந்த கூட்டமைப்பு உடைக்கப்படுகிறதா? என்னவோ ஏதோ, சரி பிழைகளுக்கு அப்பால், கூட்டமைப்பு தமிழ்மக்களின் ஏகோபித்த ஆதரவைப்பெற்று, தமிழர்களை ஒற்றுமைப்படுத்தி வலிமைபெற்ற ஒரு தலைமையாய் நின்றது. உலகும், இலங்கைஅரசும், கூட்டமைப்பையே தமிழ் மக்க ளின் தலைமை எனக்கொண்டு, சமாதானம் நோக்கிய முயற்சிகளில் இயங்கி வருகின்றன. இந்நிலையில் அந்தக் கட்சியின் உடைவு நிச்சயம் தமிழர்களைப் பலவீனப்படுத்தும். அதற்கு, தானே வழி செய்துவிட்டு, தமிழர்கள் ஒன்றுபடக்கூடாதென சிங்களவர்கள் நினைப்பதாய்க் கூறுவது, முன்னுக்குப்பின் முரணான செயலன்றோ ?

> மக்களின் மாண்பை மறந்து அநாகரிகமாகப் பேச விளைவது இனியேனும் நிற்பாட்டப்பட வேண்டும். ஒருவர் தேர்தலில் தோற்றுவிட்டால் மக்கள் அவரை என்றென்றும் புறக் கணித்து விடுவார்கள் என்று அர்த்தம் இல்லை.

3 முதலமைச்சர்:- விடுதலைக்காய்ப் போராடும் எந்த ஒரு இனமும் அந்த இனத்தின் அடிமட்ட மக்களை அத்திபாரமாக வைத்தே தமது நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

தொடங் கப்பட்டிருக்கும் தமிழ்மக்கள் பேரவையில், அடிமட்ட மக்கள் எத்தனை பேர்? பேராசிரியர்களும், டாக்டர்களும், மதபோதகர்களும், தோற்றுப்போன தலைவர்களும்தான், இவர்கள் சொல்லும் அடிமட்ட மக்களா? இவர்கள் சொல்வது உண்மையாயின், அடிமட்டமக்களுக்கு எந்தவித அறிவித்தலும் செய்யாமல், பூட்டிய அறைக்குள் கூட்டம் நடத்தியதன் காரணம் என்ன?

அடிமட்ட மக்கள், தமது வாக்குகளின் மூலம் அளித்த தீர்ப்பை நிராக ரித்துவிட்டு, அடிமட்ட மக்களே தம் அத்திபாரம் என்றுரைப்பது பொய்மையில்லையா?

4 முதலமைச்சர்:- எமது தமிழ்த் தலைவர்கள் எவ்வளவுதான் அறிவில், ஆற்றலில் சிறந்தவர்களாக இருந்தாலும், புகழ்ச்சிக்கும், மாய்மாலங்களுக்கும் இலேசில் அடிமைப்படுபவர்களாகக் காணப்பட்டு வந்துள்ளார்கள். நீங்கள் தான் மிக மிகக் கெட்டிக்காரர் என்று அப்போதைய நரிகள் கோரியதும் எமது தமிழ்க் காக்கை வடையைத் தவறவிட்டுவிட்டது. இது தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது.

இரண்டேவருட அரசியல் அனுபவமும், அதில்கூட எதனையும் சாதிக்கத்தெரியாத ஆற்றலும்(?) கொண்ட முதலமைச்சர், இராமநாதன் தொடங்கி செல்வநாயகம், ஜி.ஜி.பொன்னம்பலம், அமிர்தலிங்கம் வரையிலான, அனுபவம்மிக்க மூத்த தலைவர்களை, புகழ்ச்சிக்காய் வடையைத் தவறவிட்ட காக்கைகள் என்று, எள்ளி நகையாடுகிறார். ஆயிரம் எதிர்ப்புக்களைத் தாண்டி அவர்கள் நகர்த்திய காய்கள்தான், இன்று வெற்றியை எமது கைக்கு அண்மையாகக் கொண்டு வந்திருக்கின்றன. மற்றவர்கள் தியாகத்தோடு ஏற்றிவிட, எந்தச்சிரமமுமின்றி வெற்றிக்கனியைப் பறிக்கும் நிலையில் இருந்துகொண்டு, ஏற்றிவிட்டவர்களை இழிவுசெய்யும், முதலைச்சரின் இவ்வறிக்கை நாகரிகமற்றது. பாடுபட்டு ஒருவன் வீடுகட்டி முடிக்க, முகட்டோடு வைத்தவன் முழு உரிமை கோரினாற்போல் இருக்கிறது, முதலமைச்சரின் செயல். பிரபாகரன் எந்தப் புகழ்ச்சிக்கும் மாய்மாலத்துக்கும் மயங்காதவர் என்று பெயரெடுத்தவர். அதனால் உலகத்தலைவர்களின் பல சமரசமுயற்சிகளைப் புறந்தள்ளி, ஈழம் என்ற கொள்கையை விட்டு இறங்க மறுத்து பிடிவாதம் செய்தார். புகழ்ச்சிக்காய் ஏமாந்த காக்கைகள் வரிசையில், அத்தகு பிரபாகரனையும் முதலமைச்சர் சேர்க்கிறாரா? சமரசங்களை ஏற்காது பிடிவாதமாய் நின்ற, பிரபாகரனின் முடிவால் விளைந்தது என்ன? உலக சக்திகள் அனைத்தும் ஒன்றுபட்டு சூழ்ச்சிகள் செய்ய, தமிழினம் கண்டது அழிவையும், மரணங்களையும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தானே? தனது பலத்தாலும் தியாகத்தாலும் உலகையே அதிரச்செய்து ஆட்டிவைத்த, அந்தத் தலைவனுக்கே இந்தக் கதியென்றால், இவையேதும் இல்லாத இவர்களால் அப்பாதையில் ஏது செய்ய முடியும்? எல் லாத் தலைவர்களையும் இழிவு செய்யும் இவர்தம் போக்கு, உண்மைத் தமிழர்களை உளம் கலங்க வைக்கிறது.

**நிபுணத்துவச் செறிவு வேண்டும்**

5 முதலமைச்சர்:- கட்சிகளின் நிர்வாகம், ஒழுங்கமைப்பு, ஒழுக்கம், நோக்குகள் யாவையும், வெளிப்படைத்தன்மையுடனும் நிபுணத்துவச் செறிவுடனும் செயற்படுத்தப்படவேண்டும்.

இதனைச் சொல்லும் முதலமைச்சர், தன்னை அரசியலுக்குக் கொணர்ந்த கூட்டமைப்புக் கட்சியில், மேற்குறிப்பிட்ட விடயங்களை ஒழுங்குசெய்ய, ஏதேனும் முயற்சி எடுத்தாரா? புகழ்ச்சிக்கும் மாய்மாலத்திற்கும் மயங்காதவராய், தன்னைக் காட்டிக்கொள்ளும் முதலமைச்சர், அப்போதைய ஆளுநரிடமும், செயலாளரிடமும் பகை என்று சொல்லி, மக்களுக்கான வசதிகளைப் பெற மறுத்து நின்றார். ஆனால் தனக்கு அரசு அளித்த வாகன வசதிகளை, அக்காலத்திலேயே பெற்றுக் கொண்டார்.

தனது மாகாணசபை உறுப்பினர் அனைவரும் எதிர்க்க, முன்னாள்ஜனாதிபதி மகிந்தவின் முன் சென்று பதவிப்பிரமாணம் எடுத்தார். ஜனாதிபதியிடம் சென்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பு வந்து, தமது தொகுதிகளுக்காகப் பணம் பெற்றுக்கொள்வதாய் முறையிட்டார். எவருக்கும் தெரியாமல் ஐ.நாவிடம் உதவி பெறச் சம்மதித்து, ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுப் பின் மறுத்தார். கட்சியில் பிரச்சினை என்றவுடன் என்றுமில்லாத வகையில், தனது மாகாணசபை அமைச்சர்களுடன் ஜனாதிபதியைச் சந்தித்தார். நரியின் மாய்மாலத்துக்கு மயங்கிய காக்கை யின் செயல்களில், இச்செயல்களும் அடங்குமா? தலைவர்களிடம் வெளிப்படைத்தன்மை வேண்டும் என்று, இப்போது வேண்டிநிற்கும் முதலமைச்சர், இவற்றையெல்லாம் செய்யும்போது, வெளிப்படைத் தன்மையுடன்தான் செய்தாரா? இவ்வளவும் ஏன்? தமிழ்மக்கள் பேரவை அமைக்கப்பட்ட போதேனும், இவர்களால் வெளிப்படைத் தன்மை பேணப்பட்டதா?

6 முதலமைச் சர்:- கட்சிகளுக்கு அப்பால் செல்லவேண்டிய காலம் தற்போது உதித்துள்ளது.

அப்படியாயின் குறித்த ஒரு கட்சியில் நின்று அதன் ஆதரவுடன், முதலமைச்சர் வெற்றி பெற்றது ஏன்? இன்றுதான் இந்த முடிவு வந்ததென்றால், கட்சியினூடு பெற்ற வெற்றியையும், பதவி யையும் உதறிவிட்டு, தனிமனிதராய் தமிழ்மக்கள் பேரவையில் அங்கம் வகிக்கச் செல்லாதது ஏன்? கடந்த தேர்தலி லும், தற்போதைய தமிழ் மக்கள் பேரவை உருவாக்கத்திலும், மறைமுகமாய் குறித்த ஒரு கட்சியை முதலமைச்சர் ஆதரித்தது ஏன்? இந்த உரையிலும் கூட, தோற்றுப்போன கட்சிக்காக வக்காலத்து வாங்குவது ஏன்?

**தனி மனிதர்களின் செல்வாக்கு இல்லை**

7 முதலமைச்சர்:- தமிழ்மக்கள் பேரவையின் தலைமைத்துவம் தனிமனிதர்களின் செல்வாக்கில் கட்டியெழுப்பப்பட்டதன்று. மக்கள் மன மறிந்தமக்களுடன்மக்களாக வாழ்ந்து வருவோரின் தலைமைத்துவத்தைக்கொண்டது.

மூன்றாண்டுகளுக்கு முன்பு வெறும் சமய, இலக்கிய, நீதித்துறை சார்ந்த, ஓர் அறிஞராய்க் கருதப்பட்டிருந்தவர், பின்னர் கூட்டமைப்பால் அரசியலுக்கு இழுத்து வரப்பட்டு, அவர்களது செல்வாக்கால்

> “மகிந்தவின் முன் சென்று பதவிப்பிரமாணம் எடுத்தார். ஜனாதிபதியிடம் சென்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பு வந்து, தமது தொகுதிகளுக்காகப் பணம் பெற்றுக் கொள்வதாய் முறையிட்டார்.”

பெரிய வாக்கு வித்தியாசத்தால் முதலமைச்சராகி, இன்று தனிமனித செல்வாக்கோடு பெருமை பெற்று நிற்கும், முதலமைச்சரின் சார் பினைப் பெற்றதால் மட்டுமே புகழ்பெற்று நிற்கிறது இப்பேரவை. முதலமைச்சரின் மேற்குறித்த கருத்து உண்மையாயின், தான் விலகி நின்று, இப்போது போடு தடிகளாய்ச் சேர்க்கப்பட்டிருக்கும் இணைத் தலைவர்களை மட்டும் வைத்து, இந்தப் பேரவையை உருவாக்கியிருக்கலாமே! மக் கள் மன மறிந்து மக்களுடன் மக்க ளாக வாழ்ந்து வருவோரே, இவ் அமைப்பின் தலைவர்கள் எனின், தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்ட தலைவர்கள், இவ் அமைப்புக்குள் நுழைந்தது எங்ஙனம்? கேள்விகள் கடலாய்ப் பெருகுகின்றன. உண்மையை ஓயாது எழுதி நானும் சோர்ந்து விட்டேன்.

தமிழ்மக்களும் இன்னும் பார்வையாளர்கள் மனநிலையிலிருந்து, பங்காளர் மனநிலைக்கு வந்ததாய்த் தெரியவில்லை. வரப்போவதாயும் தெரிய வில்லை.

தமிழினத்தைக் கடவுள்தான் காக்க வேண்டும் என்று, தந்தை செல்வா என்ன மனநிலையில் எதற்காகச் சொன்னாரோ? துரதிஷ்டவசமாய் அக்கருத்து இன்றும் தொடர்கிறது. திரும்பத் திரும்பச் சொன்னதையே சொல்லி என்ன பயன்? நிறைவாக ஒன்றைச் சொல்ல நினைக்கிறேன்.

என்றுமில்லாத வகையில், பேரினத் தலைமைகள் ஒன்றிணைந்து, தமிழர் பிரச்சினையை ஒத்துக்கொண்டு, அதனைத் தீர்க்க முனைவதாய் உலகுக்கு வாக்களித்து நிற்கும் அரிய சந்தர்ப்பம் இது.

உலக, பிராந்திய வல்லரசுகள், இலங்கை அரசின் உண்மைத்தன்மையை மேற்பார்வை செய்யும் பொறுப்பேற்று இயங்கத்தக்க அற்புதவாய்ப்பு,

இலங்கை அரசு நாடாளுமன்றத்தை சட்ட ஆக்க அவையாக மாற்ற முடிவு செய்து தனது சமாதானம் நோக்கிய நகர்வை நிரூபிக்க முனையும் ஆரோக்கியமான முன்னேற்றம்,

தனது அதிகாரங்களை நீக்கி நாடாளுமன்றத்துக்கு அந்தஅதிகாரங்களைப் பாரப்படுத்தும் ஜனாதிபதியின் வரவேற் கத்தக்க நகர்வு என்பனவாய், என்றும் இல்லாத வகையில் அமைந்து வரும் அற்புதச் சூழலில், பகை நீக்கி, விலகி நின்றோரையும் ஒன்றுபடுத்துவதற்குப் பதிலாக, ஒன்றுபட்டு நின்று, தேர்தலில் மக்கள் ஆதரவை முழுமையாய்ப் பெற்ற ஒரே அமைப்பையும், அழகாய்த் திட்டமிட்டு உடைக்கிறார்கள். இங்கு பிழையைக் கண்டிப்பார் எவரும் இலர். அறிவுபூர்வமாக நான் எழுப்பும் கேள்விகளுக்குப் பதில் உரைக்காமல், அன்றேல், அதனை ஒப்புக்கொள்ளவும் செய்யாமல், தனிப்பட்ட ரீதியில் என்னைச் சாடுவதிலேயே சிலர் திருப்தியுறுகின்றனர். ஒருசிலரைத் தவிர மற்றவர்கள், கட்டுரையைப் படிப்பதோடு தம் கடமையை முடித்துக் கொள்கின்றனர்.

நல்லது! இப்படியே போனால் இழிவு நிச்சயம்! கைக்கருகில் வரும் பெருவாய்ப்பை இழந்துவிட்டு, மீண்டும் ஒரு பேரழிவைச் சந்திக்கப்போகிறோம்.

## இன்னும் எத்தனை காலம் தான் ஏமாற்றுவீர்கள்

வட வரணி ஜே/339 பிரிவில் வசிக்கும் பாதிக்கப்பட்ட பெண் நான். இதற்கு உரிய அதிகாரிகளை மன்றாடிக் கேட்டுக் கொள்கின்றேன். இனியும் எங்களை ஏமாற்றாதீர்கள். பொருளாதார வசதியற்ற வறுமைக்கோட்டின் கீழ், இருப்பதற்கு ஒரு வீடு இல்லாத நிலையில் குடிசையில் இருந்து கஷ்டப்படும் எங்களின் நிலைமையை உரிய அதிகாரிகள் ஒரே ஒரு தடவை நேரில் பார்வையிட்டு எங்களுக்கும் வீட்டுத்திட்டம் பெற்றுத்தாருங்கள். கிராமசேவையாளர் தொடங்கி அரசியல்வாதிகள் வரை பக்கச் சார்பாக நடந்து வசதியாக வாழ்பவர்களுக்கே உதவி செய்கின்றார்கள். இந்தத் தவறை யாரிடம் போய் நாம் முறையிடுவது?

2010 ஆம் ஆண்டு தொடங்கி 2015 ஆம் ஆண்டு வரை நானும் கிராமசேவையாளர் தொடங்கி அரசியல்வாதிகள் வரை எனது குடும்ப நிலைமையை எடுத்துக் கூறி ஒரு வீடு கேட்டும் இன்று வரைக்கும் கிடைக்கவில்லை. ஒவ்வொரு வருடமும் ஜனவரியில் வீடு தருவோம் என்று உறுதிமொழி கூறப்படுகின்றது. ஆறு வருடமாக ஜனவரி மாதம் வரவில்லையா? சம்பந்தப்பட்ட அதிகாரிகளே, பக்கச் சார்பாக நடக்காதீர்கள். நேரில் பார்வையிட்டு உரிய நடவ டிக்கை எடுங்கள். வாழ்வதற்கு ஒரு வீடு அவசியம் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். இந்த நல்லாட்சியில் இருக்கும் அனைத்து அதிகாரிகளுக்கும் இது சமர்ப்பணம்.

பாதிக்கப்பட்ட பெண், வடவரணி

## உர விநியோகமின்றி உழவர்கள் விசனம்

மன்னார் மாவட்டத்தில் விவசாயத்தை மேற்கொள்ளும் விவசாயிகள், பருவத்தே பயிர் செய்தும் அதற்குரிய பசளைகள் உரிய வேளையில் கிடைக்காமல், கமநலச் சேவை நிலையங்களில் காவல் இருந்து வருகின்றனர். சுமார் 56 ஆயிரம் ஏக்கர் நெற்காணிகளை உள்ளடக்கிய இந்த மாவட்டத்தில், விவசாயிகளுக்கான உர விநியோகம் கமநலசேவை நிலையங்களினூடாக வழங்கப்பட்டு வருவது வழக்கம். ஆனால், இந்தமுறை உரிய நேரத்தில் வழங்கப்படாத காரணத்தால், எதிர்பார்க்கப்படும் விளைச்சலை எட்டமுடியாதோ என விவசாயிகள் மத்தியில் ஏக்கம் ஏற்பட்டுள்ளது. எனவே, உரிய திணைக்களங்கள் உடனடியாக உரங்களை கமநல சேவை நிலையங்களுக்கு வழங்கி, விவசாயிகளின் எதிர்பார்ப்பை நிறைவேற்றி வைப்பார்களா?

விவசாயிகள் சார்பில்
ஏ.டி.தேவதாசன் அல்மேடா, முருங்கன்

## இவர்கள் திருந்தமாட்டார்களா?

தங்கள் வீடுகள் – வளவுகள் சுத்தமாக இருக்கும் வேண்டும் என்ற எண்ணத்துடன் மானிப்பாய், சங்கரப்பிள்ளை வீதியிலும், மானிப்பாய் மகளிர் கல்லூரிக்குத் திரும்பும் பிரதான வீதியிலும் வீட்டில் சமையல் செய்வதற்கு பயன்படுத்தும் கடல் உணவுகளின் கழிவுகள், தேங்காய்ப் மட்டைகள், பிழிந்த தேங்காய்த் துருவல் மற்றும் சகல கழிவுகளையும் சொப்பிங் பைக்கற்றுக்களில் போடுவதால் தெரு நாய்கள் அவற்றைக் கிழித்துச் சேதப்படுத்தி வீதிகள் அலங்கோலமாகக் காட்சி அளிக்கின்றன. பல தடவைகள் பிரதேச சபையுடன் தொடர்பு கொண்டதன் பேரில் தொழிலாளர்கள் அவற்றை உழவு இயந்திரத்தில் ஏற்றிச் சென்றார்கள். மறுநாள், அடுத்த நாள், திரும்பவும் அதே அலங்கோலம் ஏற்படுகின்றது. எனவே தவறுகள் செய்பவர்கள் திருந்த வேண்டும். அல்லது அவர்களைத் திருத்தவேண்டும். இனிமேலாவது இவர்கள் திருந்துவார்களா?

பொன். கனகரத்தினம் ஜே.பி., ஆனைக்கோட்டை

## சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குச் சமர்ப்பணம்

மானிப்பாய் ஆலடிச் சந்தியில் இருந்து ஆனைக்கோட்டை மூத்த நயினார் மேற்கு வீதியால் நவாலிக்குச் செல்லும் சங்கரப்பிள்ளை வீதி மிகவும் மோசமாக குண்டும் குழியுமாக உள்ளது.

மேற்படி வீதியில் பிரபலமான மானிப்பாய் இந்துக் கல்லூரி உள்ளது. அத்துடன் மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு இந்த வீதியால் பல மாணவிகள் துவிச்சக்கரவண்டியில் செல்வதுண்டு. மேலும் இந்த வீதியால் செல்வோர் மற்றும் வாகனங்களில் செல்வோர் அதிகமாக உள்ளதால் கூடிய விரைவில் மேற்குறிப்பிட்ட சங்கரப்பிள்ளை வீதியை சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் பார்வையிட்டுத் திருத்தம் செய்வதற்கு ஆவன செய்வார்களா?

பொ.கனகரத்தினம்
ஆனைக்கோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook
Twitter : l



# தாய்லாந்து மன்னரின் செல்ல நாய் உயிரிழப்பு

பாங்கொக், டிசெ.31
தாய்லாந்து மன்னரின் செல்ல நாய் கடந்த 26ஆம் திகதி அரண்மனையில் தூங்கிக் கொண்டிருக்கையில் இறந்துவிட்டதாக அறிவிப்பு வெளியாகியுள்ளது.
தாய்லாந்தைப் பூமிபால் அதுல்யாதெச் என்பவர் ஆட்சி செய்து வருகிறார். அங்கு மன்னர் குறித்தும், அவரது குடும்பத்தினர் குறித்தும் அவமதிப்புச் செய்தால் கடுமையான தண்டனை வழங்கப்படும். தானாகொர்ன் சிரிபைபூன் என்ற தொழிலாளி மன்னரின் நாயைக் கிண்டல் செய்து இணையத்தில் கருத்துப் பதிவிட்டதற்காக கைது செய்யப்பட்டார். அவருக்குச்சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டது. இந்த நிலையில் இவர் கைதான சில தினங்களில் கடந்த 26ஆம்திகதிஅரண்மனையில் தூங்கிக் கொண்டிருக்கையில் மன்னரின் நாய் இறந்து விட்டதாக அறிவிப்பு வெளியாகியுள்ளது.



றொங்டோங் எனப்படும் இந்த நாய் அதன் செயற்பாடுகளுக்காக அரச குடும்பத்தினரால் அதிகம் பாராட்டப்பட்டிருந்தது.
தாய்லாந்து சினிமாக்களில் இந்த நாயின் செயற்பாடுகளைச் சித்திரிக்கும் அனிமேன் சினிமா வெளியிடப்பட்டுள்ளது. தனது 17 ஆவது வயதில் அந்த நாய் உயிரிழந்துள்ளது.
அந்த நாயின் கீழ்ப்படிதல் மற்றும் விசுவாசம் போன்றவற்றைப் போற்றி கடந்த 2002 ஆம் ஆண்டு மன்னர் புத்தகம் எழுதியிருந்தார். இந்தப் புத்தகம் ஹரிப்பொட்டர் புத்த கத் துக்கு இணையாக தாய்லாந்தில் விற்பனையாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-ரி4)

# சீன அரசுப் பணத்தில் 6 லட்சம் கோடி ஊழல்

## 321 அதிகாரிகள் மீது குற்றச்சாட்டு

பீஜிங், டிசெ. 31
சீனாவில் ஊழல் செய்யும் அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அவர்களுக்குச்சாவுத்தண்டனை மற்றும் அதிகபட்சசிறைத் தண்டனையும் வழங்கப் படுகிறது.
தற்போது 30 உயர்நிலை அதிகாரிகள் ஊழல் குற்றச்சாட்டுகளில் விசாரிக்கப்பட்டு வருகின்றனர். இந்த நிலையில் சீனத் தணிக்கைக் குழுத் துறை நாடு முழுவதும் அரச நிறுவனங்களில் தணிக்கை செய்துள்ளது. அதில் ரூபா 6 லட்சம் கோடி அரச பணத்துக்கு முறைகேடு நடந்திருப்பது கண்டு பிடிகக்பட்டுள்ளது.
மொத்தம் 20 ஆயிரம் அதிகாரிகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டனர்.
அதில் 321 அதிகாரிகள் தவறு செய்து இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதில் நீதித் துறை, ஒழுங்குத் துறைகளில் உள்ள அதிகாரிகளும் இருக்கின்றனர். அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. சீனாவில் சி ஜின்பிங் அதிபராக பதவி ஏற்ற பிறகு ஊழல் செய்யும் அதிகாரிகளுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.
(த-ரி4)

# அமெரி
# கடும்

கூடவே மழையும், பனிப் பொ



டெக்சாஸ், டிசெ.31
அமெரிக்காவின் தென் மேற்குப் பகுதியைத் தாக்கிய பல
புயலில் குறைந்தது 43 பேர் இறந்திருக்கலாம் எனத் தக
வெளியாகியுள்ளது. கடந்த 5 நாள்களாகத் தாக்கிய சூ
வளியினால் நூற்றுக் கணக்கான வீடுகள் சேதமடைந்துள்ள
இதனுடன் திடீர் வெள்ளம், சுழல் காற்று, பனிப் பொழிவு ஆகிய
ஏற்பட்டுள்ளன. இதனால் பொது மக்களின் இயல்பு வாழ்க்
பாதிக்கப்பட்டுள்ளது. டெக்சாஸ், அர்கன்சாஸ், லூசியான
ஒக்லகாமா, மிசிசிப்பி ஆகிய பகுதிகளில் தேசிய காலநி
சேவைகள் மையத்தினரால் சுழல் காற்று எச்சரிக்
விடுக்கப்பட்டுள்ளது.
மிசோரி, ஒக்லகாமா, புதிய மெக்சிகோ மாகாணங்களின் ஆ
நர்கள் குறித்த மாநிலங்களில் அவசர காலநிலையை பிரகட
படுத்தியுள்ளனர்.
இல்லினோய்ஸ் மாகாணத்தில் 200 கிலோ மீற்றருக்
மணித்தியாலத்துக்கு 300 கிலோ மீற்றர் வேகத்தில் வீசிய
குறைந்தது 11 பேர் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் வெள்
3பேர், 2 சிறுவர்களுடன் அடித்துச் செல்லப்பட்டது
தெரிவிக்கப்பட்டது.

# ஊடக சுதந்திரம் அற்ற நாடுகளின் பட்டியலில் சிரியா முதலிடத்தில்

டமஸ்கஸ், டிசெ.31
உலகளவில் பத்திரிகையாளர்களுக்கு மிகவும் அச்சுறுத்தலான நாடுகளின் பட்டியலில் சிரியா முதலிடம் பிடித்துள்ளது. உலகம் முழுவதும் ஊடகம் மற்றும் பத்திரிகைகளில் பணியாற்றி வருபவர்களுக்கான தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. இந்தநிலையில் கடந்த 2015 ஆம் ஆண்டில் தமது பணியின் காரணமாக 69 செய்தியாளர்கள் உயிரிழந்துள்ளதாக ஊடகவியலாளர்கள் பாதுகாப்புக் குழு ஒன்று தெரிவித்துள்ளது.மேலும் இந்தக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் பத்திரிகையாளர்களுக்கு ஆபத்தான நாடுகள் பட்டியலில் சிரியா முதலிடத்தைப் பிடித்துள்ளது.
இந்தஆண்டில்13ஊடகவியலாளர்கள் அங்கு கொல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
ஐ.எஸ். அமைப்பினரும், அல் குவைதாவினரும் 28 ஊடகவியலாளரின் இறப்புக்குப் பொறுப்பு கூறியுள்ளனர். எனினும் கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது இந்த எண்ணிக்கை குறைவாகும். சிரியாவில் நடைபெற்று வரும் போர் காரணமாகவும், ஐ.எஸ். தீவிரவாதிகளின் கொடூர தாக்குதல்கள் காரணமாகவும் செய்தியாளர்கள் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர். அரசியல்வாதிகளாலும் ஊடகத் துறையினருக்கு அச்சுறுத்தல் உண்டு. அவ்வாறான இறப்புகள் 47 ஆகும். அவற்றில் 28 பேருக்கு இறப்புக்கு முன்னர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
மேலும் கடந்த 4 ஆண்டுகளாக இந்தப் பட்டியலில் சிரியா முதலிடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.இதேபோன்று பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் உள்ள சார்லி ஹெப்டோ பத்திரிகையின் தலைமையகத்தில் ஊடகவியலாளர்கள்9பேர்கொலைசெய்யப்பட்டதை அடுத்து ஊடகவியலாளர்களுக்கு மிகவும் மோசமான நாடுகளின் பட்டியலில் பிரான்ஸ் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.இந்த ஆண்டில் மட்டும்தமதுபணியைச்செய்ததற்காகப் பிரான்ஸில் மொத்தம் 13 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் ஈராக், பிரேசில், பங்களாதேஷ், தென் சூடான் மற்றும் ஏமன் ஆகிய நாடுகளில் இந்த ஆண்டு குறைந்தது 5 செய்தியாளர்களாவது கொல்லப் பட்டுள்ளனர். உலகளவில் 2015 ஆம் ஆண்டில் மூன்றில் இரண்டுக்கு மேற்பட்ட அளவில் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ரி4)

# அமெ. கப்பல் செ

தெஹ்ரான்,டிசெ.31
அமெரிக்க விமானம் தாங்கிக் கப்பல் சென்று கொண்டிருந்த பாதையில், அதற்கு அருகாமையில் ஈரானின் ஏவுகணைகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன. சர்வதேச நீர்ப்பாதையில் பயணிக்கும்போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது என அமெரிக்க இராணுவத் தலைமையகம் தெரிவித்தது. ஈரானின் ஏவுகணைகள் விமானம் தாங்கிக் கப்பலுக்கு
4ஆயிரத்
வீழ்ந்ததாக
ஈரானின் இ
ஆத்திர மூ
அமெரிக்
சர்வதேச நீ
யில் வழன
உண்டு. அ
இடம்பெற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ரிக்காவில் ...் சூறாவளி

...ரிப் பொழிவும்; மக்களின் இயல்பு வாழ்வு பாதிப்பு



...தாக்கிய பலத்த
...ம் எனத் தகவல்
...் தாக்கிய சூறா
...மடைந்துள்ளன.
...பொழிவு ஆகியன
...யல்பு வாழ்க்கை
...ஸ், லூசியானா,
...சிய காலநிலை
...று எச்சரிக்கை

...ங்களின் ஆளு
...லையை பிரகடனப்

...லா மீற்றருக்கு,
...கத்தில் வீசிய சுழல் காற்றினால்
...ன்றும் வெள்ளத்தில் கார் ஒன்று
...ல்லப்பட்டது என்றும் தகவல்

> **இதற்கிடையில் குறித்த மாகாணத்தில் ரோஸ்வெல் நகரில் ஒரே நாளில் 12.3 இஞ்சிக்கு ஏற்பட்ட பனிப் பொழிவு சாதனைப் பதிவை ஏற்படுத்தியுள்ளது. ஒக்லகாமா பகுதியில் பனிப்புயல் ஏற்பட்டது.**

டெக்சாஸ் மாகாணம் பலத்த பாதிப்புக்குள்ளாகியுள்ளது. தேவாலயங்கள் அழிவுக்குள்ளானதுடன் 64 கிலோமீற்றர் தூரத்துக்கு மரங்கள் வீழ்ந்துள்ளன. மக்கள் செய்வதறியாது பரிதவித்து இருக்கின்றனர் என உள்ளூர்ப் பொலிசார் தெரிவித்துள்ளார்.

ஆறுகளின் நீர் மட்டம் தொடர்பாக அதிக கவனத்துடன் இருக்கும்படியும், ஆற்றோரக் குடியிருப்புகளில் வசிப்போரையும் வெளியேற்றுமாறும் மாநில ஆளுநர்கள் பணித்துள்ளனர்.

புதிய மெக்சிகோ மாகாணத்தில் 2 அடி உயரத்துக்கு பனிப்பொழிவு நிகழ்ந்துள்ளது. இதற்கிடையில் குறித்த மாகாணத்தில் ரோஸ்வெல் நகரில் ஒரே நாளில் 12.3 அங்குலம் வரை ஏற்பட்ட பனிப் பொழிவு சாதனைப் பதிவை ஏற்படுத்தியுள்ளது. ஒக்லகாமா பகுதியில் பனிப்புயல் ஏற்பட்டது. மோசமான வானிலை காரணமாக ஆயிரத்து 500 விமானப் பயணங்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என விமான சேவை நிறுவனம் ஒன்று தனது இணையத்தில் குறிப்பிட்டுள்ளது. மிசிசிப்பி நதியின் நீர் மட்டம் வெகுவாக உயர்ந்து வருகிறது. இதையடுத்து நேற்று முன்தினம் நதிக் கரையோர மக்களை வீடுகளில் இருந்து அதிகாரிகள் வெளியேற்றியுள்ளனர். (த-ரி4)

# அரிய பல வன விலங்குகளை கொன்ற விலங்குக் காப்பாளர்

பீஜிங்,டிசெ.31

சீனாவில்பாண்டாகரடிக்காப்பாளரொருவர் ஆபத்தானவையான வனவிலங்குகளை சட்டவிரோத முறையில் வளர்ப்பதுடன் அவற்றைக் கொன்று உண்பது தொடர்பாகவிசாரணை அவர்மீது இடம் பெற்றது என உள்ளூர்ப் பத்திரிகை ஒன்றுசெய்திவெளியிட்டுள்ளது.

சிசுவான் மாகாணத்தில் உள்ள பாண்டா காப்பகத்தில் பாண்டாவை பராமரிக்கும் வேலையில் குறித்த நபர் ஈடுபட்டுள்ளார். தனது பெயரில்லாமல் தந்தையின் பெயரில் உள்ள சமூக வலைத்தளத்தில் வெளிப்படையாகவே தனது செயற்பாட்டுப் படங்களை அவர் பதிவேற்றியுள்ளார். தனது சமூக வலைத் தளமொன்றில் பறவைகள் வளர்ப்பது, அரிய பறவைகளைச் சமைத்துச் சாப்பிடுவது எனச் சில படங்களை வெளியிட்டுள்ளார்.

இதை அவதானித்த அவரது நண்பர் லியூ இந்தச் செயற்பாடுகளை பொது மக்களின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார். காப்பாளரின் செயற்பாடு சீன வனவிலங்குச் சட்டங்களுக்கு முரணானது என லியூ பத்திரிகையில் தெரிவித்தார்.

மேலும் அவர் சமூக வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டிருந்த படங்களையும், அதற்குக் காப்பாளர்



"மிகவும் சுவையானது" என குறிப்பிட்டதையும் ஆவணப்படுத்தி வெளியிட்டுள்ளார். சீனாவின் அனைத்துக் கழுகு வகைகளும், போல்கன்ஸ் எனப்படும் பறவை இனமும் தேசியப் பட்டியலில் பாதுகாக்கப்படும் முக்கிய இனங்களாக அடையாளப்படுத்தப் பட்டுள்ளன. இதனால் பறவைகளைக் கொல்வதும் வேட்டையாடுவதும், விற்பனை செய்வதும் சட்டத்துக்கு புறம்பானது ஆகும். (த-ரி4)

# சீனக் கல்லறையில் தங்கக் குவியல்கள்

பீஜிங், டிசெ.31

சீனாவின் ஹேஹுன் மாகாணத்தில் அமைந்துள்ள கல்லறைத் தோட்டத்தில் இருந்து குவியல் குவியலாகத் தங்கம் மற்றும் வெள்ளி நகைகள் மீட்கப்பட்டுள்ளன. சீனாவின் ஹேஹுன் மாகாணத்தில் அரச குடும்பத்தினரை அடக்கம் செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட கல்லறைத் தோட்டம் ஒன்று அமைந்துள்ளது.

இந்தத் தோட்டமானது ஹான் வம்சத்தினருக்காகப் பிரத்தியேகமாக பயன்படுத்தப்பட்ட வந்ததாகக் கூறப்படுகிறது. இந்தக் கல்லறைத் தோட்டத்தில் அமைக்கப்பட் டிருந்த 8 கல்லறைகளைத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கடந்த 5 ஆண்டுகளாகத் தீவிரமாக ஆராய்ச்சி செய்து வந்ததாகக் கூறப்படுகிறது. தொல்பொருள் ஆய்வாளர்களின் ஆராய்ச்சியின் முடிவில், அப்பகுதியைத் தோண்டும் பணி பல்வேறு குழுக்களால் நடத்தப்பட்டு வந்துள்ளது.





இந்தநிலையில், அந்தக் கல்லறைகளில் இருந்து குவியல் குவியலாக தங்கம் மற்றும் வெள்ளி, இரும்பு நாணயங்களை ஆய்வாளர்கள் கண்டெடுத்துள்ளனர். சீனாவில் இதுவரை கண்டெடுக்கப்பட்டுள்ள அரச கல்லறைகளில் ஹான் வம்சத்தினரின் கல்லறையே மிகவும் பத்திரமாக பாதுகாக்கப்பட்டிருப்பதாக ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். ஆய்வாளர்களால் இதுவரை தோண்டப்பட்டு ஆய்வு நடத்தப்பட்ட கல்லறையானது வூ பேரரசின் பேரனான லியூகி என்பவரது கல்லறை என கருதப்படுகிறது. லியூகி என்பவர் அரசாள்வதில் திறமை மற்றும் ஒழுக்கமற்றவரானதால் பதவியேற்ற 27 ஆம் நாளிலேயே குடும்பத்தினரால் அவரது அரச பதவி பறிக்கப்பட்டது எனக் கூறப்படுகிறது. (த-ரி4)

# ...் சென்ற பாதையில் ஈரான் ஏவுகணைப் பரிசோதனை

4ஆயிரத்து 500 அடிகள் வித்தியாசத்தில் வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

ஈரானின் இந்தச் செயற்பாடு தேவையற்றதும், ஆத்திர மூட்டுவதும் பாதுகாப்பற்றதுமாகும் என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர். சர்வதேச நீர்ப் பாதையில் ஹொர்முஸ் ஜலசந்தியில் வழமையாகவே போக்குவரத்து நெரிசல் உண்டு. அந்த நேரத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இதனை அடுத்து ஈரானியக்



கடற்படைக் கப்பல்களும், இதர வணிகக் கப்பல்களும் உடனடியாக அமெரிக்க அதிகாரியை அணுகின. அத்துடன் ஹொர்முஸ் ஜலசந்தியிலிருந்து அரேபிய வளைகுடாவை அணுகின என அமெரிக்க அதிகாரத் தரப்பினர் தெரிவித்தனர்.

முதல் தாக்குதலையடுத்து 40 நிமிடங்களின் பின்னர் மீண்டும் பரிசோதனைத் தாக்குதல் நடத்தப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.


ஆனால் எத்தனை ஏவுகணைகள் என்ற எண்ணிக்கை குறிப்பிடப்படவில்லை. பரிசோதனைத் தாக்குதல் நடத்திய பின்பு கப்பல்கள் புறப்பட்டன. குறித்த நீர்ப்பாதையை அமெரிக்கா பல வருடங்களாகப் பயன்படுத்தி வருகிறது. இந்த விமானம் தாங்கிக் கப்பல் ஐ.எஸ்க்கு எதிராகப் போராடக் கொண்டு வரப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (த-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லக்ஸ்மன்

# மறைந்து போயின மாட்டு வண்டிகள்

நெடுந்தீவுக்கான உள்ளூர்ச் சேவையில் இ.போ.ச. பஸ் வண்டி இணைக்கப்பட்டு நாற்பது வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும், இதுவரை குறிப்பிட்ட சேவை திருப்திகரமாக அமைந்ததாக இல்லை. அடிக்கடி பழுதடையும் பஸ் வண்டிகளை நம்பி மக்கள் தமது பயணத்தைத் தொடர முடியாத நிலை இன்னமும் இருந்து கொண்டே தான் உள்ளது. இங்குள்ள பழுதடைந்த வீதிகளே இதற்குக் காரணம் என்பது இ.போ.சபையினரின் குற்றச்சாட்டு, அதில் ஓரளவு நியாயம் இருந்தாலும் அதுவே முழுக் காரணம் என்றாகிவிடாது. அனேக சந்தர்ப்பங் களில் திருத்தம் செய்யும் பஸ் வண்டி அதன் பின்னர் தொடர்ந்து இரு தினங்களாவது சேவையில் ஈடுபடுவது அபூர்வம். பஸ்வண்டிகளைஉரியமுறையில் பராமரிப்பது உறுதிப் படுத்தப்படவில்லை. டீசல் பெற்றுக் கொள் வதிலும் சிரமங்கள் உண்டு. வருமானம் குறைவு எனக் கூறி தேவையான டீசலை பிரயாண கட்ட ணங்களால் கிடைக்கும் பணத்தில் வாங்கிக் கொள்ளுமாறு ஊழியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதால், போதிய பணம் இல்லாத சமயங்களில் பஸ் சேவை துண்டிக்கப்படுவதும் உண்டு. நாட்டின் எந்தப் பகுதிக்குமில்லாத நடைமுறைப் போக்கு இது. தற்போது இடம்பெறும் படகுச் சேவைகளுக்கு இணைந்த வகையில் இ.போ.ச.பஸ் சேவைகள் இடம்பெறுவதில்லை எனவும், படகில் வரும் நாம் எமது இடங்களுக்குச் செல்ல ஓட்டோக்களையோ, வேறு வாகனங்களையோ நாட வேண்டியுள்ளது, அல்லது பொருள்களையும் சுமந்தபடி மிகவும் தூர இடங்களுக்கு நடந்தே செல்ல வேண்டியுள்ளது, இரண்டு பஸ் வண்டிகள் இருந்தும் இந்த நிலை என்கிறார்கள் மக்கள். வீதி சரியில்லை போக முடியாது என்று கூறினாலும், வெளியிடங்களில் இருந்து வரும் உல்லாசிகளுக்கு மட்டும் சில சமயங்களில் மிகமோசமான வீதிகளூடாகவும் பஸ் வண்டி போய்வருவதும் மக்களிடையே கடுப்பேற்றி வருகின்றது. கோட்டைக்காடுப் பகுதியில் படகுத் துறைக்குச் செல்வதற்காக நீண்ட நேரம் காத்திருக்கும் மக்கள் முன்னறிவிப்பு ஏதுமற்ற நிலையில் ஏமாற்றத்துடன்



தமது பயணத்தை ரத்துச் செய்யும் சம்பவங்களும் அடிக்கடி ஏற்படுகின்றன. மக்கள் எதிர்பார்த்த அளவுக்கு இ.போ.ச சேவை இந்த மக்களுக்கு இன்னமும் கிட்டவில்லை. நெடுந்தீவில் இ.போ.ச தனது சேவையைத் தொடங்கமுன்னரே போக்குவரத்தில் மக்களுக்குக் கைகொடுத்தவை மாட்டு வண்டிகளே என்பது மறக்க முடியாதது. மேற்குக் கிழக்குப் பகுதிகளில் சிலர் மாட்டுவண்டிகளை வைத்திருந்தாலும் மக்களது போக்குவரத்துக்கு முக்கியமாக உறுதுணையாக விளங்கியவை தண்டேல் பெரியதம்பி, சடையர் அம்மான், வெள்ளையர் சீனியார் ஆகியோரின் வண்டிகளேயாகும். இவைதிண்ணிஊருக்கும்துறைமுகத்துக்குமிடையிலான சேவையை முன்னெடுத்து வந்தன. படகில் வந்த மக்கள் தீவின் எந்தப் பகுதிக்குச் செல்வதாக இருந்தாலும், குறிப்பிட்ட வண்டியில் செல்லமுடியும். இதற்கென கூலி இவ்வளவுதான் என்று கேட்டு வாங்குவதும் இல்லை. பயணிக்கும் மக்களும் இவ்வளவுதான் தருவோம் என்று அடம் பிடிப்பதும் கிடையாது. மனம் போல இயன்றதைக் கொடுப்பார்கள். மகிழ்ச்சியுடன் வாங்கிக் கொள்வார்கள். ஒரு வண்டியின் மூலம் நாளாந்தம் கூடிய பட்சம் எவ்வளவு பணம் கிடைக்கும் என்பதையும், மாடுகளைப் பராமரிப்பது உட்பட எவ்வளவு செலவாகும் என்பதையும் தெரிந்து வைத்திருப்பவர்கள் எமது முன்னோர்கள். வர்த்தக நிலையங்களுக்கான விற்பனைப் பொருள்களும் துறை முகத்தில் இருந்து வண்டிகள் மூலமே உரிய இடத்துக்குக் கொண்டு செல்லப்பட்டன. அதற்கும் நியாயமான கட்ட ணம் வழங்கப்படுவதுண்டு.

> “நெடுந்தீவில் இ.போ.ச தனது சேவையைத் தொடங்க முன்னரே போக்குவரத்தில் மக்களுக்குக் கைகொடுத்தவை மாட்டு வண்டிகளே என்பது மறக்க முடியாதது.”

ஆலய உற்சவ காலங்களின்போதும், விசேட நிகழ்வுகளின்போதும், பனம்பழ காலங்களிலும், வண்டிகளுக்கு மவுசு அதிகம். திருக்கல் வண்டிகள் ஒற்றைக் கரத்தை இரட்டை மாட்டு வண்டிகள் என கூடாரம் பொருத்திய, கூடாரமற்ற வண்டிகள் ஒருபுறம் மக்கள் போக்கு வரத்துக்கும் பொருள்கள் ஏற்றி இறக்கவும் பயன்படுத்தப்பட்டன. குடிதண்ணீர் விநியோகச் சேவையிலும் வண்டிகள் பயன்படுத்தப்பட்டன. நோயாளர்களை வைத்தியசாலையிலிருந்து படகுக்கு எடுத்துச் செல்லவும் இவை மக்களுக்கு உதவியாக இருந்தன. கடந்த காலங்களில் மக்களுக்கு இன்றியமையாத முக்கிய சேவையாக இருந்து கைகொடுத்த மாட்டுவண்டிகளையும் மாடுகளையும் இன்று காண்பது அரிது. இயந்திரமாகி, மக்களைச் சுமந்து வண்டிகளை இழுத்துச் சென்ற மாடுகள் அவர்களை உரிய இடத்தில் சேர்ப்பித்து விட்டு வண்டில்களின் அருகிலேயே அயர்ந்து தூங்கும். எஜமானுக்கு எந்தவித சிரமத்தையும் உண்டுபண்ணாது வீதியில் வரும் வாகனங்களுக்கு வழிவிட்டு விலகிச் சென்று தமது இருப்பிடத்தில் தரித்து நிற்கும் மாடுகளும் இன்றில்லை. மாட்டு வண்டிகளின் மகத்துவம் இன்றைய தலைமுறைக்குக் கிடைக்காத அனு பவம். வந்த வெள்ளம் இருந்த வெள்ளத்தையும் அடித்துச் சென்றதுபோல வந்த பஸ் வண்டிகளும் மாட்டு வண்டிகளை எங்கோ மறைத்துக் கொண்டன.

# நடிகர் திலகத்தின் மீது பற்றுக்கொண்ட உள்ளங்களுக்கும் உதவி புரிந்தவர்

வ.இ.செல்வக்குமார்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசனை வைத்து முரடன்முத்து, வீரபாண்டிய கட்டபொம்மன், கப்பல் ஓட்டிய தமிழன், கர்ணன் ஆகிய படங்களைத் தயாரித்த இயக்குநர் (பத்மினி பிக்சர்ஸ்) பி.ஆர்.பந்துலு. படத்துறையில் கஷ்டம் ஏற்பட்ட நிலையில் எம்.ஜி.ஆரை நாடினார். அவர் தாம் சிவாஜியின் படத்தயாரிப்பாளர் என்று மனம் தயங்காமல் எடுத்துச் சொன்னார். அவருக்கு எம்.ஜி.ஆர் நடித்துக் கொடுத்த படம்தான் ஆயிரத்தில் ஒருவன். இந்தப் படம் பெருவெற்றி பெற்றது. தமது கடன் சுமையிலிருந்து பி.ஆர்.பந்துலுவை மீட்டுக் கொடுத்தார் எம்.ஜி.ஆர்.

1977 இல் சிவாஜி கணேசன் பகுதியைச் சேர்ந்த அருட்செல்வர் ஏ.பி.நாகராஜன் திருவிளையாடல், சரஸ்வதி சபதம், நவராத்திரி, திருவருட் செல்வர், தில்லானா மோகனாம்பாள் போன்ற படங்களைத் தயாரித்தவர். தனக்கு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டுவர எம்.ஜி.ஆரின் உதவியை நாடினார். ஏ.பி.நாகராஜனுக்காக எம்.ஜி.ஆர். நடித்துக் கொடுத்த படம்தான் நவரத்தினம். நவரத்தினம் படப்பிடிப்பு தொடங்கத் திட்ட மிட்டு தொடக்க விழா நடப்பதற்குள் ஒரே வாரத்தில் எல்லாப் பகுதிகளிலும் விற்று விட்டன. வியாபார ரீதியில் பெரும் வெற்றியைத் தந்த படம் இது. நான் இதுவரை படம் எடுத்தேன். இப்போது தான் பணம் எடுத்தேன். இதற் குக் காரணம் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்தான். அவர் இந்தப் படத்துக்கு அளித்திருக்கும் ஒத்துழைப்பை என்னால் மறக்க முடியாது. பாட்டு கதைவசனம், இசை, உடை, ஒலிப்பதிவு போன்ற ஒவ்வொன்றிலும் தனிக்கவனம் செலுத்தி அவர் எனக்கு ஆலோசனை கூறினார் என்பது ஏ.பி.நாகராஜனின் கருத்து.

சிவாஜியை வைத்துப் பல படங்களை இயக்கிய ஸ்ரீதர் மட்டுமல்ல இன்னும் பல முன்னணி இயக்குநர்கள் எம்.ஜி.ஆரின் உதவியை நாடியதால் மீண்டும் தலை நிமிர முடிந்தது. இயக்குநர் ஸ்ரீதரால் எம்.ஜிஆரை வைத்து அன்று சிந்திய இரத்தம் எனும் தலைப்பில் படம் எடுக்கப்பட்டது. காட்சி மாற்றி அமைப்பது காரணமாக இடைநடுவில் விடப்பட்டு பின்னர், நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் பெயர் மாற்றப்பட்ட நிலையில் சிவந்தமண் படமாக வெளிவந்தது. ஸ்ரீதர், எம்.ஜி.ஆரைச் சந்தித்தபோது சிவாஜியை வைத்து நான் ஒரு படம் எடுத்துக் கொண்டிருப்பதும், அதுபாதியில் நிற்பதும் உங்களுக்குத் தெரியும். நான் எவ்வளவோ முயன்றும் தவிர்க்க முடியாத காரணங்களால் தாமதமாகின்றது. அதை என்றாவது ஒருநாள் வெளியிடத்தான் போகிறேன்.

அது வெளியிடப்படும் வரை சித்திராலயாவின் நிதி நிலைமை மோசமாக உள்ளது. உங்களுடைய ஒத்துழைப்பு கிடைத்தால்தான் என் நிலைமையை சீர்படுத்திக் கொள்ளமுடியும் எனக் கூறினார். அவருக்காக எம்.ஜி.ஆர் நடித்துக் கொடுத்த படம்தான் உரிமைக்குரல். பொருளாதார நிதி நெருக்கடியிலிருந்து ஸ்ரீதரை மீட்டுக்கொடுத்தார் எம்.ஜி.ஆர்.

1961 ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர் ஆற்காடுசாலையில் சென்று கொண்டிருந்தபோது வீதியால் பயணம் செய்த [illegible] நனை [illegible] இந்தச் சம்பவம் எம்.ஜி.ஆரை வெகுவாகப் பாதித்தது. தமிழ் நாட்டிலும், சென்னையிலும் 5000க்கும் மேற்பட்ட மழைக் கோட்டுக்களை தனது சொந்த நிதியில் வாங்கிக் கொடுத்தார். இலங்கைத் திருநாட்டில் போரால் பாதிக்கப்பட்ட மக்கள் தமிழகம் சென்றபோது, அவர்கள் அநாதையாக ஆதரவின்றித் தவித்துக் கொண்டிருக்கையிலே உதவிக்கரம் நீட்டி உறுதுணையாய் நின்றவர் எம்.ஜி.ஆர். தமிழ் மக்களின் வாழ்வுரிமைப் போராட்டத்துக்கு போராட்ட இயக்கத் தலைவர்கள் எம்.ஜி.ஆரிடம் சிறு உதவி கேட்டுச் சென்றிருந்தபோது, பெருந்தொகை நிதியை அளித்தவர் என்பதும் வரலாற்று உண்மை. ஊருக்காக உழைத்த உண்மைத் திலகம் இன்று உயிருடன் இல்லை. ஆனால் அவர் ஒவ்வொரு தமிழனுடைய உள்ளத்திலும் உதிரமாய் வாழ்கிறார்.



(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறிவரும் உலகில் விறகின் பாவனை தொடர்ந்தும் நிலைத்து நிற்குமா?

ராஜராஜன்

மக்களின் அன்றாட சமையல் வேலைகளில் நவீன சாதனங்களின் பயன்பாடு அதிகரித்துள்ளதால் விறகின் தேவை ஓரளவு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எரிவாயு அடுப்புக்கள், மண்ணெண்ணெயில் இயங்கும் அடுப்புக்கள், மின்சார அடுப்புக்கள் என்பனவற்றை மக்கள் அதிகளவில் பயன்படுத்துவதைக் காணமுடிகின்றது.

வசதி படைத்தவர்கள் மட்டுமல்லாது நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் தமது சமையல் வேலைகளுக்கு விறகுகளுக்கு மாற்றீடாக நவீன சாதனங்களைப் பயன்படுத்துவதையே விரும்புகின்றனர்.

எமது முன்னோர்கள் சமையலுக்கு மண் சட்டி, பானைகளைப் பயன்படுத்தினர். உணவுகளைக் கொதிக்க வைப்பதற்கு தேர்ந்தெடுத்த மரங்களின் விறகுகளையே பயன்படுத்தினர். இதனால் உடல் ஆரோக்கியத்தை அவர்களால் பேண முடிந்தமை உண்மைதான்.

காலமாற்றத்தால் மட்பாண்டங்கள் அடிபட்டுப் போக, அவற்றின் இடத்தை அலுமினியப் பாத்திரங்கள் நிரப்பிக் கொண்டன. அலுமினியப் பாத்திரங்கள் உடல் நலத்துக்குத் தீங்கானவை என எச்சரிக்கை விடுக்கப்பட்டபோதிலும், இதனை எவரும் கருத்தில் கொண்டதாகத் தெரியவில்லை.

போரின் பின்னரான காலப்பகுதியில் உணவுத் தட்டுப்பாடு நிலவியபோது அதன் விலையும் தாறுமாறாக உயர்ந்தது. யாழ்.குடாநாட்டைப் பொறுத்த அளவில் பெரும் காடுகள் இல்லை. குறிப்பிட்ட ஒரு சில இடங்களில் பற்றைக் காடுகள் மட்டுமே காணப்படுகின்றன. இதனால் வன்னிப் பெருநிலப்பரப்பிலுள்ள காடுகளில் இருந்து விறகை தருவிக்க வேண்டிய நிலையே காணப்பட்டது. ஆனால் போர் காரணமாக அங்குள்ள காடுகள் அழிக்கப்பட்டன. போர் நிறைவுக்கு வந்ததன் பின்னரும், காடழிப்பு நடவடிக்கைகள் தொடரவே செய்தன. இதனால் மரங்களையும் விறகையும் ஓரிடத்தில் இருந்து வேறொரு இடத்துக்குக் கொண்டு செல்வதற்கு கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இதுவும் விறகின் விலையேற்றத்துக்கும் தட்டுப்பாட்டுக்கும் காரணமாகி விட்டது.

விறகின் விலை அதிகரித்ததால் மாற்று வழியைத் தேடுகின்ற நிர்ப்பந்தம் மக்களுக்கு ஏற்பட்டது. ஆனால் ஏழை எளியவர்களால் எதுவுமே செய்யமுடியவில்லை. வசதி படைத்தவர்களும், நடுத்தர வர்க்கத்தினரும் மாற்று வழிகளை நாட ஆரம்பித்து விட்டனர்.

நீண்ட போர் காரணமாக மக்கள் இடம் பெயர்ந்ததால் அவர்களின் வாழ்விடங்கள் காடுகளாக மாறிக் காணப்படுகின்றன. குறிப்பாக வலிகாமம் வடக்கில் இதனைக் காணமுடிகின்றது. இடம் பெயர்ந்து அகதி முகாம்களில் வாழ்கின்றவர்களின் முக்கிய வாழ்வாதாரத்துக்கான தொழிலாக விறகு வியாபாரம் இடம்பெற்று வந்தது. இவர்கள் பல்வேறு தடைகளையும் தாண்டி அபாயம் மிகுந்த பகுதிகளில் விறகுகளை சேகரிப்பதும் அவற்றை விற்றுக் காசாக்கி தமது குடும்பத்தைப் பராமரித்தும் வந்தமையும் அனைவரும் அறிந்த ஒன்றுதான். ஆனால் இன்று அதிலும் ஒரு தொய்வு நிலையைக் காணமுடிகின்றது.

விறகை எரிப்பதால் எழுகின்ற புகை காரணமாக வீடு பாதிக்கப்படுகின்றது. பாத்திரங்கள் கரி பிடிக்கின்றன. புகையினால் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படுகின்றது என்றெல்லாம் சில குடும்பத் தலைவிகள் கூறுவதையும் கேட்க முடிகின்றது. இதில் ஓரளவு நியாயம் உள்ளதையும் மறுக்க முடியாது. ஆனால் இதை மறுதலிப்பவர்களும் இல்லாமல் இல்லை. எரிவாயு ஆபத்தானது. அதன் காரணமாக எந்த வேளையிலும் ஆபத்து நிகழலாம். மேலும் மண்ணெண்ணெய் அடுப்பும் பாதுகாப்பானகதல்ல. மின்சார சாதனங்கள்கூட எதிர்பாராமல் ஆபத்தை விளைவிக்கக் கூடியவை. இதைவிட இவற்றைப் பயன்படுத்துவதால் அதிக பணத்தைச் செலவிட வேண்டியுள்ளது. இவைதான் அவர்கள் கூறுகின்ற காரணங்கள்.

எவர் என்னதான் கூறினாலும் இனிவரும் ஆண்டுகளில் விறகின் பாவனை குறைந்து விடத்தான் போகிறது. இதன் மூலமாக மரங்களின் அழிவைத் தடுக்க முடியும். ஆனால் எரிவாயுவைப் பயன்படுத்துவ தால் உலக சூழலுக்கு ஏற்படக்கூடிய ஆபத் தையும் நாம் மனதில் கொள்ளத்தான் வேண்டும்.



சிலரது வீட்டு வளவுகளில் விறகு தானாகவே கிடைக்கின்றது. அதிலும் தென்னை மரங்கள் நின்றால் விறகுகளைச் சேகரித்துக் கொள்ள முடியும். விறகுக்கு மாற்றீடான சாதனங்களைப் பயன்படுத்தும்போது தாமாகக் கிடைக்கின்ற விறகுகள் வீணாகப் போவதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். கிராமப் புறங்களைப் பொறுத்தளவில்தான் இந்த நிலை காணப்படும். நகரப் புறங்களில் காண முடியாது.

விறகுத் தேவையின் பொருட்டு அதிகளவு மரங்கள் அழிக்கப்படுவதால் இயற்கைக்குப் பாதிப்பு ஏற்படுவதாக சமூக ஆர்வலர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். மரங்களைப் புதிதாக நடவேண்டுமே ஒழிய அவற்றை அழிக்கக் கூடாது எனவும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

மழைக் காலங்களில் விறகுகளை நனையாமல் பாதுகாப்பதற்கு மேலதிக இடவசதியும் வீடுகளில் வேண்டும். நகரப் புறங்களில் இது சாத்தியமாக இருக்குமெனக் கூறமுடியாது. ஆகவே நகரப் புறங்களில் வாழ்பவர்கள் விறகுக்கு மாற்றீடான பல்வகை நவீன சாதனங்களைப் பயன்படுத்துவதே உகந்த தெனக் கூறமுடியும்.

ஆனால் என்னதான் நவீன சாதனங்கள் வந்தாலும் இன்றும் பெருமளவு குடும்பங்கள் விறகைப் பயன் படுத்துவதைக் காண முடிகின்றது. வசதி படைத்தவர்கள்கூட விறகைக் கைவிடுவதற்குத் தயாராக இல்லாமல் இருப்பதையும் காணமுடிகின்றது. பாரம்பரியமான பழக்க வழக்கங்களை இவர்கள் கைவிட விரும்பாததே இதற்கான காரணமாகும். பழையன கழிதலும் புதியன புகுதலும் காலத்தின் கட்டாயமாகும். அதிலும் தற்போதைய விஞ்ஞான உலகில் எல்லாமே அவசரமாகத்தான் இடம் பெற்று வருகின்றன. இந்த நிலையில் சமையல் வேலைகளும் அவசரமாக முடித்து வைக்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாக ஆகியுள்ளது. அடுப்பு ஊதும் பெண்களுக்கு கல்வி எதற்கு? என்று கேட்ட காலமும் ஒன்று இருந்தது. இன்று எல்லாப் பெண் களும் அடுப்பை ஊதுவது இல்லை. கையால் ஒரு விசை யைத் தட்டினாலே போதும் தானாகவே அடுப்பு எரியும் நிலை தான் காணப்படுகிறது. இதனால் அடுப்பை ஊதவும், புகையைச் சுவாசிக் கவும் பெண்கள் விரும்பமாட்டார்கள். ஆனால் உலகச் சந்தையில் எரிபொருள் களின் விலைகள் அதிகரிக்கப்படும்போதும் மின்சாரக் கட்டணங்கள் உயர்த்தப்படும் போதும் விறகின் அருமையை மக்கள் உணர்வார்கள். செலவினங்கள் கையைக் கடிக்கும்போதும் விலை குறைந்தவற்றை நாடுவது மக்களின் இயல்புதான். ஆனாலும் கால ஓட்டத்தில் எல்லாமே மறக்கப்பட்டுவிடும்.

எவர் என்னதான் கூறினாலும் இனிவரும் ஆண்டுகளில் விறகின் பாவனை குறைந்து விடத்தான் போகிறது. இதன் மூலமாக மரங்களின் அழிவைத் தடுக்க முடியும். ஆனால் எரிவாயுவைப் பயன்படுத்துவதால் உலக சூழலுக்கு ஏற்படக்கூடிய ஆபத்தையும் நாம் மனதில் கொள்ளத்தான் வேண்டும்.

பூமிவெப்பமடைவதற்குஎரிபொருள்களின் பாவனையே பிரதான காரணமாகக் கூறப்படுகிறது. இவற்றின் பாவனையின் போது வெளியேற்றப்படும் புகை ஓசோன் படலத்தை சேதமாக்குவதுடன், பூமி வெப்பமடைவதற்கு காரணமாக அமைந்து விடுகின்றது. இதன் காரணமாக அண்மையில் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் இடம்பெற்ற சர்வதேச மாநாடு ஒன்றில் இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. இதனால் எரிவாயுவின் பாவனையும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில் மக்கள் முன்னர் போன்று விறகுகளைப் பயன்படுத்துவார்களா? அல்லது தொடர்ந்தும் விடாப்பிடியாக நவீன சாதனங்களை தமது சமையல் வேலைகளுக்குப் பயன்படுத்துவார்களா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# சோதிடனின் நயவஞ்சகம்



*(சோதிடன் நவீன் நயவஞ்சகமாக சங்ககிரி மன்னனை ஏமாற்றி மன்னனது மகளை தான் மணக்க முயன்றான். விடகபுரி நாட்டின் இளவரசன் இடையில் குறுக்கிட நேர்ந்ததால் நவீனது திட்டம் தவிடு பொடியானது. நேற்றுமுன்தினம் வெளியான குறித்த பகுதியின் தொடர்ச்சி இது)*

விகடபுரியில் இருந்து தனது தாய் மாமனின் நாடான ராஜகிரி செல்லும் வழியில் சங்ககிரி நாடு இருந்ததால் விகட புரி நாட்டின் இளவரசன் இளங்குமரன் அதன் வழியே செல்ல நேர்ந்தது.

சங்ககிரி நாட்டின் பிரதான ஆற்றின் கரை வழியே அவன் குதிரையில் சென்று கொண்டிருந்தபோது அந்த இயற்கை எழில் கொஞ்சும் பிரதேசம் அவன் மனதைக் கவர்ந்தது. அந்த இடத்தில் சற்று ஓய்வெடுத்து விட்டுச் செல்ல நினைத்த இளங்குமரன், குதிரையைப் புல்வெளியில்விட்டுவிட்டு ஆற்றின்கரையில் அமர்ந்து மீன் பிடிக்கத் தொடங்கினான்.

அப்பொழுது ஆற்றில் மிகவும் வேலைப்பாடமைந்த அழகிய பெட்டி ஒன்று மிதந்து வருவதைக் கண்டான். உடனே தூண்டிலைக் கீழே போட்டுவிட்டு ஆற்றுக்குள் குதித்தான். நீந்திச் சென்று பெட்டியை ஒரு கையால் இழுத்துக் கொண்டு கரையை வந்தடைந்தான்.

பெட்டியின் மூடியை அவன் திறந்து பார்த்தபோது அவன் திகைத்துப் போய் விட்டான். அந்தப் பெட்டிக்குள் சர்வ அழகு பொருந்திய ஓர் இளம்பெண் கிடப்பதைக் கண்டு அவளைத் தூக்கி தரையில் கிடத்தி அவள் முகத்தில்நீரைத்தெளித்து, அவளின் மயக்கத்தைப் போக்கினான்.

மயக்கம் தெளிந்து எழுந்த றூபா, நான் எங்கு இருக்கிறேன்? என்று சுற்றுமுற்றும் பார்த்தாள்.

பெண்ணே! நலமா? என்று கேட்டான் இளங்குமரன்.

யார்? நீங்கள்? நான் இந்த ஆற்றின் கரைக்கு எப்படி வந்தேன்? இது என்ன பெட்டி? என்று படபடவென்று கேள்விகளை அடுக்கினாள் றூபா.

பெண்ணே! நான் விகடபுரி நாட்டு இளவரசன் இளங்குமரன். நான் என் தாய் மாமாவின் நாட்டுக்குச் சென்று கொண்டிருந்தேன். இங்கு சற்று ஓய்வெடுத்துச் செல்லலாம் என்றெண்ணி இந்த ஆற்றில் மீன் பிடித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது இந்தப் பெட்டி ஆற்றில் மிதந்து வருவதைக் கண்டு அதைக் கரைக்குக் கொண்டுவந்தேன். இதற்குள் மயக்கநிலையில் நீ இருந்தாய். உடனே உன் மயக்க நிலையை நீக்கினேன் ஆமாம்... நீ யார்? இந்தப் பெட்டிக்குள் உன்னை வைத்து ஆற்றில் விட்டவர் யார்? என்று கேட்டான் இளங்குமரன்.

இந்த விவரங்களைக் கேட்டதும், நேற்றைய இரவு தனக்கு உணவு கொண்டு வந்து கொடுத்த தந்தையும் அவருக்குத் துணையாக வந்த அரண்மைனைச் சோதிடனும் அவள் ஞாபகத்துக்கு வந்தனர்.

பெற்ற தந்தையே தன்னை இத்தனை கொடுமைக்குள்ளாக்கியதை நினைத்து விக்கி விக்கி அழுதாள். பிறகு தான் யார் என்பதையும், தனது தந்தையின் மனதைக் கெடுக்கும் சோதிடன் பற்றியும் தெளிவாக எடுத்துச் சொன்னான்.

இதைக் கேட்ட இளங்குமரன், இளவரசி! உன்னைப் பெட்டிக்குள் வைத்து ஆற்றில் விட்டுவிடச் சொன்னவன் அந்தச் சோதிடனாகத்தான் இருக்க வேண்டும். இந்த யோசனையின் பின்னால் அவன் ஏதோ ஒருபயனை அடைய நினைத்திருக்கிறான் என்பது மட்டும் தெரிகிறது. அந்தச் சோதிடனைக் கையும்களவுமாகப் பிடித்தால் உண்மைவெளிப்பட்டு விடும். எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. என்று சொல்லி அவள் காதில் ஒரு விடயத்தைச் சொன்னான்.

றூபா அதற்குத் தலையசைத்தாள்.

பெட்டி மிதந்து வருவதைக் கண்ட நவீன், ஆகா!... என்ஆசை நிறைவேறப் போகிறது.... ஓ... றூபா... என் கண்ணே என்று துள்ளிக் குதித்தான்.

உடனே ஆற்றில் குதித்து பெட்டியைக் கரைக்குக் கொண்டு வந்தான்.

அப்பாடா! இன்னும் சிறிது நேரத்தில் இந்த றூபா என் மனைவியாகப் போகிறாள். அதன் பிறகு நான் சோதிடன் அல்ல. இந்த நாட்டை ஆளப்போகும் மன்னன். என்று சொல்லிப் பேய்ச்சிரிப்பு சிரித்தான்.

பிறகு பெட்டியின் மூடியைத் திறந்தான். உள்ளே பார்த்தவன் திடுக்கிட்டான்.

பெட்டிக்குள் ரூபாவோடு அழகிய வாலிபன் ஒருவனும் இருப்பான் என்பதை அவன் நினைத்தே பார்க்கவில்லை.

சட்டென்று பெட்டிக்குள்ளிருந்து நீண்ட, வாளுடன் இளங்குமரன் துள்ளிக்குதித்து வெளியே வந்தான். வாள்நுனியை நவீனின் நெஞ்சில் வைத்து, சோதிடனே! உன் அயோக்கியத்தனத்தை உன் வாயாலேயே கேட்டுத் தெரிந்து கொண்டேன். இனி நீ தப்பிக்க முடியாது என்றவன், இன்னொரு கையால் சோதிடனின் முகத்தில் ஓங்கி ஒரு குத்து விட்டான்.

பிறகு அவன் கைகளைக் கட்டி, றூபாவை அழைத்துக் கொண்டு போய் மன்னன் சிவானந்த் முன் நின்றான். மன்னன் திகைத்துப்போய் எல்லோரையும் பார்த்தார்.

இளங்குமரன், சோதிடனின் சதித்திட்டத்தை எடுத்துச் சொல்ல, தன் அருமை மகளை அபகரிக்கவேதான் ஆட்சியை இழப்பேன் என்று பொய் சொல்லி தன் திட்டத்தை செயற்படுத்தியிருக்கிறான் அந்தச் சோதிடன் என்பதை அறிந்து, அவனை ஒரே அடியில் உண்மையைக் கக்க வைத்து விட்டார். பின்னர் அவனைச் சிறையில் அடைத்தார்.

இளவரசே! ஒரு சோதிடனின் பேச்சை நம்பி, என் ஒரே மகளை நாடு கடத்தத் துணிந்து விட்டேன். எனக்கு மன்னனாய் இருப்பதற்கும் ஒரு தந்தையாய் இருப்பதற்கும் தகுதி இல்லை என் மகளை நீ மணந்து கொண்டு இந்த நாட்டின் மன்னனாகி விடு. நான் துறவறம் மேற்கொண்டு இமயமலை சென்று வருகிறேன் - என்றார் அரசன்.

## வரலாற்றில் இன்றைய தினம்

1600 - பிரித்தானியா கிழக்கிந்திய நிறுவன ஒப்பந்தம் நடைமுறை.

1670 - பிரான்ஸும் - இங்கிலாந்தும் 'போய்ன்' ஒப்பந்தத்தில் கைச்சாத்து.

1695 - இங்கிலாந்தில் சாளரவரி விதிப்பு பல கடைக்காரர்கள் வரியிலிருந்து தப்புவதற்காக சாளரங்களை மூடினர்.

1946 - இரண்டாம் உலக மகா யுத்தத்தில் சண்டையை நிறுத்துவதாக அமெரிக்க ஜனாதிபதி ரூமன் உத்தியோக பூர்வமாக அறிவிப்பு.

1993 - வடக்குக்குரிய பலகோடி ரூபா பெறுமதியான பொருள்கள் கையாடல். விசாரிக்கும் பொறுப்பு கொழும்பு இரகசியப் பொலிஸாரிடம்.

1994 - குமுழமுனையில் புக்காரா குண்டு வீச்சு பெண் ஒருவர் சாவு.

1994 - சாவகச்சேரி - நேற்றைய விமானக் குண்டு வீச்சில் மேலும் ஒருவர் மரணம். இறந்தோர் தொகை 9 ஆக அதிகரிப்பு.

1994 - தென் மாகாண சபை கலைப்பு.

1997 - யாழ். பல்கலைக்கழக வன்னி வளாகம் செயற்படத் தொடங்கியது. வவுனியா இணைப்புப் பல்கலைக்கழகக் கல்லூரி மூடப்படும்.

1997 - புலிகள் அரசு இருதரப்பினரிடையேயும் எதிரியைப் பலவீப்படுத்தலாம் எனும் எண்ணம் இருப்பதால், பேச்சுக்கு இன்னமும் காலம் கனியவில்லையென குமார் ரூபசிங்க தெரிவிப்பு.

1999 - ரஷ்ய ஜனாதிபதி பொறிஸ் ஜெல்ற்சின், தமது பதவியை இராஜினாமா செய்தார். விளாடிமிர் புடின் பதில் ஜனாதிபதியானார்.

1999 - செப்ரெம்பர் 24 -1880 இல் பிறந்த உலகின் அதி மூத்தவராக வாழ்ந்த சாரா நவூஸ் தமது 119 ஆவது வயதில் காலமானார்.

1999 - டிசெம்பர் 24 இல் நேபாளத்திலிருந்து புதுடில்லிக்குச் சென்ற விமானத்தைக் கடத்தி 150 பயணிகளைக் பணயக் கைதிகளாக வைத்திருந்த ஐந்து விமானக் கடத்தல் காரர்கள் விமான நிலையத்தை விட்டுச் சென்றனர். இந்தியச் சிறைகளிலிருந்த இரண்டு இஸ்லாமியர்களையும் தமது கோரிக்கைக்கு அமைய விடுத்துக் கொண்டு சென்றனர்.

2000 - களுத்துறைச் சிறையில் வாடும் தமிழ்க் கைதிகள் 168 பேர் குறித்து ஜனவரி இறுதிக்குள் முடிவு தெரிவிக்க பொலிஸ்மா அதிபருக்கு பாதுகாப்பு அமைச்சு பணிப்புரை.

## நல்ல நூல்களைப் படி!

நல்ல நல்ல நூல்களை
நாடி நீயும் படித்திடு!
வெல்லலாம் உலக மதை
வெற்றி நோக்கிச் சென்றிடு

நல்ல நட்பை நாடிடு!
நன்மை உண்டு புரிந்திடு!
செல்ல வேண்டும் நல்வழி!
சிறுமை இல்லா அறவழி!

காந்தி சொன்ன அகிம்சையை
கடைப்பிடித்து வாழ்ந்திடு!
சாந்தம் கொண்டு சினத்தினை
விடைகொடுத்து அனுப்பிடு!

நாட்டு நலனைக் காக்கவே
நீயும் உறுதி கொண்டிடு!!
வீட்டு நலன்களை தள்ளியே
வாழும் வரைக்கும் உழைத்திடு!








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்துச் சமூகங்களினதும் கலாசாரம் காக்கப்படவேண்டும்

தமிழ்நாட்டிலுள்ள இந்துக் கோயில்களில் உடைகளுக்கான கட்டுப்பாடு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் கடுமையாக நடைமுறைக்கு வருகிறது. கோயில்களில் சம்பிரதாய உடை அணிந்து வரவேண்டும் என்ற உத்தரவு ஏற்கனவே நடைமுறையில் இருந்துவருகிறது. இதன்படி கோயில்களுக்கு வரும் பக்தர்கள் சம்பிரதாய உடை அணிந்துவரவேண்டும். ஆண்கள் வேட்டி, சட்டை, பிஜாமா, குர்தா போன்ற ஆடைகளையும், பெண்கள் சேலை, சுடிதார், தாவணி போன்ற உடலை மறைக்கும் ஆடைகளையும் அணியவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. கட்டைக் காற்சட்டை, குட்டைப் பாவாடை, ஜீன்ஸ், லெகிங்ஸ் போன்ற ஆடைகளை அணியமுடியாது. இந்த விதிமுறைகளை மீறினால் அவமதிப்பு வழக்குத் தொடரப்படும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் பண்பாடுகள், கலாசாரங்கள் பாதுகாக்கப்படுவதற்கு இப்படியான கட்டுப்பாடுகள் அவசியமானவை. இதில் கருத்து வேறுபாடு கிடையாது. ஆனால், எமது நாட்டில் சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் இடம்பெற்ற சம்பவம் ஒன்று அதிர்ச்சி அளிக்கிறது. எமது நாடு எதனை நோக்கிச் செல்கிறது என்ற கேள்வியை எழுப்புகிறது. இசையுடன் கூடிய களியாட்ட நிகழ்ச்சி ஒன்றின்போது யுவதிகள் சிலர் மது அருந்திவிட்டு அனைவரையும் வெட்கித் தலைகுனிய வைக்கும் விதத்தில் நடந்து கொண்டுள்ளனர். தலைக்கேறிய போதையில் ஒருவர் தனது மார்புக் கச்சையைக் கழற்றி மேடையை நோக்கி வீசினார். சிலர் உள்ளாடையைக் கழற்றிக் கூட்டத்தை நோக்கிவீசினர். ஒருவர் மேடையில் ஏறி அங்கு இசை நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருந்த பிரபல வெளிநாட்டுப் பாடகரை முத்தமிட்டார். மிகவும் அசிங்கமான செயல்கள் இவை.




இதற்காக நாம் அனைவரும் வெட்கித் தலைகுனிய வேண்டும். இதில் இரண்டு விடயங்களை நாம் குறிப்பிட்டாக வேண்டும். ஒன்று ரசிகர்கள் மதுபோதையில் கேவலமாக நடந்து கொண்டமை. மற்றைய 5 ஆயிரம் ரூபா முதல் 35 ஆயிரம் ரூபா வரை நுழைவுச்சீட்டு விற்கப்பட்டமை. இரண்டுமே ஜீரணிக்க முடியாதவை.

குருநாகலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் ஜனாதிபதி உரையாற்றுகையில், இந்த இரண்டு விடயங்களையும் சுட்டிக்காட்டியுள்ளார்; கண்டித்துள்ளார். இவற்றின் ஒன்று, இலங்கையின் கலாசாரத்துக்குப் பங்கம் விளைவிக்கும் அளவுக்கு ரசிகர்கள் நடந்துகொண்டதை ஜனாதிபதி வன்மையாகக்கண்டித்துள்ளதுடன், இனிமேல் இப்படியான நிகழ்ச்சிகளுக்கு அனுமதி வழங்கப்போவதில்லை என்று தெரிவித்துள்ளார்.

மற்றையது நாடு இன்றுள்ள நிலைமையில் ஒரு களியாட்ட நிகழ்ச்சிக்கான நுழைவுச்சீட்டுக்கு ரூபா 35 ஆயிரம் வரை ஒருவர் செலவிடுவது. நாம் செலவு செய்யும் ஒரு ரூபாவாக இருந்தாலும், அதனை நன்மையான காரியங்களுக்காகவே செலவு செய்யவேண்டும். அதன்மூலம் எமக்கு நன்மைகள் கிட்ட வேண்டும். ஆனால், தற்கால சூழ்நிலையில் களியாட்ட நிகழ்ச்சிகளுக்காக மக்கள் பல்லாயிரம் ரூபாக்களை ஒருசில மணிநேரத்துக்குள் செலவிடுவது கவலை அளிக்கிறது என்று தெரிவித்துள்ளார் ஜனாதிபதி.

இந்த இசை நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளர்களான இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர்களான குமார் சங்கக்கார மற்றும் மகேல ஜயவர்த்தன ஆகியோர் இலங்கையின் கலாசாரத்துக்குப் பங்கம் விளைவிக்கும் அளவுக்கு இந்த இசை நிகழ்ச்சியில் சம்பவங்கள் இடம்பெற்றதற்கு தமது முகப்புத்தகம் ஊடாக நேற்று முன் தினம் மன்னிப்புக் கோரியிருப்பினும் இதனால் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள களங்கத்தையும், அபகீர்த்தியையும் இவர்களால் நீக்கமுடியாது. உலகம் வியந்து பார்க்கும் அளவுக்கு சிறந்ததொரு நாடாக இலங்கையை மாற்றுவதற்கு அனைத்துச் சமூகங்களினதும் கலாசாரம் பாதுகாக்கப்படவேண்டும்.



# கொழுந்து விட்டு எரியும் ஆசையும் கொதிக்கும் மனோநிலையும்

கார்த்தி

*(கடந்த 29 ஆம் திகதி வெளியான கட்டுரையின் தொடர்ச்சி)*

மனிதனுக்கு வேண்டிய விடயங்கள் மூன்றே மூன்றுதான் முதலாவது முதுகெலும்பு, இரண்டாவது முதுகெலும்பு, மூன்றாவது முதுகெலும்பு என்று கூறுகின்றார் ஓர் அறிஞர்.

மூன்று நான்கு ஆண்டுகளாகிய போதிலும் உள்நாட்டுப்போர் வெற்றிஈடப்படவில்லையாயின் நீங்கள் என்ன செய்வீர்கள்? என்று லிங்கனிடம் ஒருவர் கேட்டபோது தொடர்ந்து போர் செய்வோம் என்று பதில் கூறினார். அவர் தெரிவிக்கும் மனோநிலையுடையவன் ஆரம்பத்தில் சிறுசிறு தோல்வியடைந்தாலும் இறுதியில் தோல்வியிலிருந்து பெரு வெற்றியைப் பிரித்தெடுத்து விடுவான். ஓர் அமெரிக்கருக்கும் ஓர் ஆங்கிலேயருக்கும் ஒரு விவாதம் நடந்தது. அப்போது அமெரிக்கர் கேட்டார், நீங்கள் எந்தப் போரிலும் ஆரம்பத்தில் தோல்வியுறுகின்றீர்கள் ஆனால் இறுதியில் நீங்கள் வெற்றியடைந்து விடுகின்றீர்கள். இறுதியில் உங்களுக்குத் தோல்வி ஏற்பட்டால் என்ன செய்வீர்கள்? என்று, உடனே அந்த ஆங்கிலேயர் கூறினார். அவ்விதம் ஆனால் அது இறுதிச் சண்டையாக இருக்காது என்று வேலை தேடிச்செல்வதாயின் உங்கள் உடையைச் சற்று மாற்றி அணியுங்கள். உங்கள் விண்ணப்பத்தை மாறுபடுத்தி எழுதுங்கள். நேர்முகத் தேர்வுகளில் உள்ள பதிலை கவர்ச்சிகரமான முறையில் மாற்றிச் சொல்லுங்கள். உங்கள் வெறுப்புக்களை, உங்கள் திறமையை, உங்கள் தொழில் நுட்பத்தை, உங்கள் கலை ஆர்வத்தை, உங்கள் விளையாட்டு ஆர்வத்தை, உங்கள் விஞ்ஞான ஈடுபாட்டை, உங்கள் ரசனையைக் கொஞ்சம் மாற்றி அமையுங்கள். உங்கள் முத்திரை என்று அதில் எதைப் பொறிக்கலாம் என்று கொஞ்சம் யோசித்துச் செயற்படுங்கள்.

> மனோநிலையை திடம் என்னும் நெருப்பு மூட்டிக் கொதிக்கவிடாது, தளர்வு என்னும் தண்ணீரை ஊற்றிக் குளிரச் செய்துவிட்டால் வெற்றியானது தோல்வியாக மாறி விடும்.

எத்தனை முறை எமது கிராமத்தில் பெரியவர்கள் எம்மைச் சிந்திக்க வைத்திருக்கிறார்கள். சலவைச் சட்டைக்கும், மெருகு ஏறிய பூச்சுக்கும், மதிப்பில்லாத ஊரில் பெரியவர் தமது சாந்தத்தினால், கனிவால், இனிமையினால், அனுபவத்தால், உறுதியால் எத்தனைமுறை எம்மை வியக்கச் செய்திருக்கிறார். அவர்கள் தங்களது குண நலன்களில்எமதுதலைவர்களுக்கும்மேதைகளுக்கும் எந்தவிதத்திலும் குறைந்தவர்கள் அல்ல; எண்ணங்களுக்கு ஏற்ப வாழ்க்கை மலர்கின்றது. கொன்புசியஸ் கூறினார், எம்முடைய மகத்துவமானது விழாமல் இருப்பதில்லை. விழுந்த ஒவ்வொரு தடவையும், மறுபடியும் எழுந்திருப்பதில்தான் இருக்கிறது என்று. உலகில் நாம் ஒரு பட்டம் எம்மைக் கீழே இழுக்காவிட்டால் நாம் மேலே போகமுடியாது. ஒரு பட்சிச்காற்று அடிக்காவிட்டால் நாம் நுனியற்றுப் பறக்க முடியாது. ஒரு பந்து பலமாக ஓங்கிக் கீழே அடிக்கப்படவில்லையாயின் நாம் மேலே உயர முடியாது. எனவேதான்பெர்னாட்ஷாகூறினார்.என்னை எதிர்ப்புச் சக்திகள் படுபாதாளத்தில் தள்ள முயன்றன. அதன் காரணமாகவே நான் வானளாவ உயர்ந்திருக்கின்றேன் என்று.

இவ்வாறு வெற்றியடைகின்றவர்களுக்கும் தோல்வியடைகின்றவர்களுக்கும் உள்ள ஒரே வித்தியாசம் மணநிலைதான். மனோநிலையை திடம் என்னும் நெருப்பு மூட்டிக் கொதிக்கவிடாது, தளர்வு என்னும் தண்ணீரை ஊற்றிக் குளிரச் செய்துவிட்டால் வெற்றியானது, தோல்வியாக மாறி விடும். எனவேதான், கொன்புசியஸ் கூறினார், ஒரு பெரிய படையில் தளபதியைத் தோற்கடித்து விடலாம்; ஆனால் ஒரு குடியானவனின்உறுதி நிறைந்த மனதைத் தோற்கடிக்க முடியாது என்று.

சிறிய மனிதனுக்கும் பெரிய மனிதனுக்கும் உள்ள வித்தியாசம் இது தான். இருவரும் வாழ்க்கைப்பாதையில் செல்கின்றனர். நடுவில் ஒரு ஆறு குறுக்கிடு கின்றது. அதோ வெள்ளம் அலை வீசி வருவது அவர்களின் கண்களுக்குத் தெரிகிறது. இன்னமும் சில நொடிகளில் அவர்கள் நிற்கும் இடத்துக்கு வெள்ளம் வந்திடலாம். சிறிய மனிதன் இதைக் கண்டு பயப்படுகின்றான். ஆனால் பெரிய மனிதனோ முன்னேற வேண்டுமென்ற கொதிக்கும் மனோநிலை காரணமாக ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அக்கரையை அடைந்து விடுகின்றான். துன்ப வெள்ளத்தைக் கண்டு என்ன செய்வதென அறி யாது திகைத்து நின்ற சிறிய மனிதனோ அந்தக் கடின வெள்ளத்துக்கு இரையாகி, கடலில் மூழ்கடிக்கப்படுகிறான்.

ஹாரியட் பிச்சர் ஸ்டவ் கூறுகின்றார், நீ உன்னுடைய வேலையில் நெருக்கடியான இடத்தை அடையும் பொழுது, இனிமேல் ஒரு நிமிடம் கூட அங்கே நின்று சமாளிக்க முடியாது என்ற நிலைமை ஏற்படும். அப்பொழுதுதான் நீ உன்னுடைய மனோ உறுதியைக் காட்ட வேண்டும். ஏனெனில், அந்தக் கணத்தில், அந்த இடத்தில், வைத்துத்தான் அலைகள் வேறுபக்கம் அடிக்க ஆரம்பிக்கும். போரில் இனிமேல் தாக்குப்பிடிக்க முடியாது என்ற நிலை ஏற்படும்போதுதான், ஓடாது உறுதியாக இருக்க வேண்டும் என்றும், அந்த ஒருசில நிமிடங்களே போரின் விதியைத் தீர்மானிக்கும் என்றும் போர்த் தளபதிகள் ஒருமித்துக் கூறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு எண் விளையாட்டு


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | | | 2 | 8 | | 4 |
| 2 | | | | 7 | | | | |
| | 8 | | | 9 | | | | 2 |
| | 6 | | 9 | 3 | | | | 8 |
| | | 9 | | | | 3 | | |
| 3 | | | | 8 | 4 | | 2 | |
| 9 | | | | 4 | | | 1 | |
| | | | | 2 | | | | 5 |
| 4 | | 8 | 6 | | | 7 | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 8 | 5 | 9 | 2 | 3 | 4 | 7 | 6 |
| 2 | 7 | 9 | 6 | 8 | 4 | 3 | 5 | 1 |
| 4 | 6 | 3 | 5 | 7 | 1 | 2 | 8 | 9 |
| 6 | 2 | 4 | 1 | 3 | 8 | 7 | 9 | 5 |
| 5 | 3 | 1 | 7 | 9 | 2 | 8 | 6 | 4 |
| 8 | 9 | 7 | 4 | 5 | 6 | 1 | 3 | 2 |
| 7 | 1 | 6 | 3 | 4 | 5 | 9 | 2 | 8 |
| 3 | 4 | 8 | 2 | 6 | 9 | 5 | 1 | 7 |
| 9 | 5 | 2 | 8 | 1 | 7 | 6 | 4 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியானஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும்கொண்டது. 3X3ஆக உள்ளேயும்3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றைநிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனைஅறிமுகப்படுத்திவெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# அக்ஷன் கதைகளில் நடிக்கும் உதயநிதி



ரெட் ஜெயன்ட் மூவிஸ் தயாரிக்கும் படம், 'கெத்து'. உதயநிதி ஸ்டாலின், சத்தியராஜ், எமி ஜாக்சன், விக்ராந்த் உட்படப் பலர் இந்தப் படத்தில் நடிக்கின்றனர். எம்.சுகுமார் ஒளிப்பதிவு செய்துள்ளார். ஹாரிஸ் ஜெயராஜ் இசை அமைத்துள்ளார். கே.திருக்குமரன் இயக்கியுள்ளார். இது அக்ஷன் த்ரில்லர் படம். மூன்று படங்கள் நகைச்சுவை மற்றும் குடும்பக் கதையில் நடித்து விட்டேன். அக்ஷன் படம் செய்து பார்ப்போமே என்று தான் இந்தக் கதையில் நடிக்க முடிவு செய்தேன். பிறகுதான் தெரிந்தது, அக்ஷன் எவ்வளவு கஷ்டம் என்கிறார் உதயநிதி. எதிர்வரும் பொங்கல் அன்று இந்தப் படம் வெளிவருகிறது.

WhatsApp

## படித்ததில் பிடித்தது







# தத்துவம்...

யானை மேல நாம உக்காந்தா சவாரி..
நம்ம மேல யானை உக்காந்தா ஒப்பாரி..

நாம அடித்தால் அது மொட்டை...
அதுவா விழுந்தால் அது சொட்டை..

நாம் கோயில் மணியை அடித்தால்
சத்தம் வரும்...
கோயில் மணியால் நம்மை
அடித்தால் இரத்தம் வரும்..

மெழுகில் இருந்து மெழுகுவர்த்தி
தயாரிக்கலாம்..
ஆனால்..
கொசுவில் இருந்து கொசு வத்தி
தயாரிக்க முடியாது..

கொசு அடித்தால் கொசு சாகும்..
ஆனால்.
போன் அடித்தால் போன் சாகாது...

காந்தித் தாத்தா எனன்தான்
அகிம்சாவாதியா இருந்தாலும்
அவர் சப்பாத்தியைச்
சுட்டுத்தான் சாப்பிட்டிருப்பார்..

நல்ல நட்பு வெங்காயம் மாதிரி..
அதை கட் பண்ணினால்
கட் பண்ணினவன் கண்ணில் தான்
கண்ணீர் வரும்.

ஜடேன்றிக் கார்ட்டை காட்டி சிம்
கார்ட்டு வாங்கலாம்.. ஆனால்..
சிம் கார்டை காட்டி ஜடேன்றிக் கார்டை
வாங்க முடியாது..

என்னதான் வள்ளுவர் 1,330 குறள்
எழுதியிருந்தாலும்
அவர் ஒரே குரலில் தான் பேசியிருப்பார்..

மிஸ்டு கால் போட்டா தப்பு இல்லை..
மிஸ் மேல கால் போட்டா தான் தப்பு..

நாம அண்ணாமலையை சுத்தி வந்தா
கிரி வலம்..
கண்ட பொண்ணுங்களை சுத்தி வந்தா
கேவலம்..

சூரியனைச் சுத்தி வந்தால்
வெந்து போவாய்..
சுடிதாரைச் சுத்தி வந்தால் நொந்து
போவாய்..





# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** முக்கிய செயல் நிறைவேற தாமதம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். உறவினர் வருகையால் செலவு அதிகரிக்கும். பிறருக்காக எதையும் பொறுப்பேற்க வேண்டாம்.

**இடபம்:** எவருடனும் விவாதம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பெண்கள், பிள்ளைகளின் நலனுக்காகப் பாடுபடுவர். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்கள்.

**மிதுனம்:** எதிலும் நேர்மையைப் பின்பற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் செய்வீர்கள். இலாபம் கூடும். பெண்கள், தாய் வீட்டாரின் அன்பை பெறுவர்கள். வீட்டு உபயோகப் பொருள்

**கடகம்:** சிலரது பேச்சுஇ உங்கள் மனதை கஷ்டப்படுத்தும். சொந்த பணியில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது. தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். மனைவியின் ஆலோசனை நல்ல பயன்

**சிங்கம்:** குடும்பத்தினர் அன்பு பாராட்டுவர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும். விருந்து, விழாவில் பங்கேற்று மகிழ்வீர்கள். அரசு தொடர்பான நன்மைகள் கிடைக்கும்.

**கன்னி:** உழைப்பின் பயனைப் பெற்று மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய வாய்ப்பின் மூலம் ஆதாயம் அதிகரிக்கும். அதிக பணம் செலவு செய்வதை தவிர்க்கவும். வாகனப் பயணத்தில் கவனம் தேவை.

**துலாம்:** அன்றாடப் பணிகளில் சுறுசுறுப்புடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். புத்திரர் விரும்பிய பொருள்களை வாங்கித் தருவீர்கள். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**விருச்சிகம்:** குழப்பம் நீங்கி மனத்தெளிவு பெறுவீர்கள். உறவினர்களுக்கு உதவி செய்து மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். சேமிக்கவும் வாய்ப்புண்டு.

**தனுசு:** நண்பரின் செயலை விமர்சிக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி உண்டாகும். ஆதாயம் உயரும். கண்களின் பாதுகாப்பில் கவனம் தேவை. மாணவர்கள் ஆர்வமுடன் படிப்பர்கள்.

**மகரம்:** நண்பருடன் கருத்து வேறுபாடு உருவாகலாம். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். ஆரோக்கியத்தில் அக்கறை கொள்வது நல்லது. புத்திரரின் செயல் மனதை மகிழ்விக்கும்.

**கும்பம்:** திட்டமிட்டபடி செயல்களை செய்து முடிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான முன்னேற்றம் பெறுவீர்கள். பெண்கள் விரும்பிய பொருள்களை வாங்குவர். திடீர் வெளியூர் பிரயாணம் செல்ல நேரிடலாம்.

**மீனம்:** செயல்களில் உற்சாகம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். கடனில் பெரும்பகுதி அடைபடும். பிள்ளைகளின் செயல்பாடு கண்டு பெருமை கொள்வீர்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## இது புதுசு

### கற்கள் பதித்த ஆபரணங்கள்

கற்கள் பதித்த பகட்டான ஆபரணங்கள் கடைகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. பல வர்ணங்களில், ஆடம்பர வேலைப்பாடுகளுடன் இவை வடிவமைக்கப்பட்டுள்ளன. இவை மங்கல வைபவங்களுக்கு உகந்ததுடன், பகட்டில்லாத ஆடைகளுக்கு இவற்றை அணியும் போது மிகவும் பொருத்தமானதாக இருக்கும். இவை 800 ரூபா முதல் 1,800 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.

### மீனை வறுக்கும் வகைகள்

மீன் வறுவல் என்றதும் மீனை மசாலாவுடன் சேர்த்து வறுப்பது என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் மீன் வறுவலில் எத்தனையோ வகைகள் உள்ளன.

முதலில் மீனைக் குழம்பில் போட்டுவேகவிட்டுபிறகுகுழம்பு மீனைப் போட்டு, அதன் மீது சிறிது குழம்பை ஊற்றி வறுத்து எடுப்பார்கள். மீன் வெந்தும், அதனுள் மசாலா நன்கு ஊறியும் இருக்கும்.

மீனைக் கழுவி அதனை மஞ்சள் தூள், உப்பு, மிளகாய் தூள்மசாலாவில்ஊறவைத்து, எண்ணெய் ஊற்றி மீனை வறுத்து எடுப்பது இன்னொரு முறை. இதிலேயே மசாலாக் கலவையுடன் இஞ்சி, பூண்டு, வெங்காயம் அரைத்த விழுதைச் சேர்த்து அதில் மீனைப் போட்டு வறுப்பது புதுவித சுவையைக் கொடுக்கும்.

அடுத்தது, மீன் மசாலா



வாங்கி, அதில் மீன் துண்டுகளைப் போட்டு ஊற வைக்க வேண்டும். சிறிது எலுமிச்சைச் சாறும் சேர்த்துக் கொள்ளலாம். மசாலாவில் ஊறிய மீனை சட்டியில் எண்ணெய் ஊற்றிப் பொரித்தும் எடுக்கலாம். இது கூடுதல் சுவை அளிக்கும்.

### நாளை

மார்கழி -16
வெள்ளிக்கிழமை 01.01.2016
திதி: ஸப்தமி மு.இ.10.33வரை
நட்சத்திரம்: உத்தரம் மு.இ.09.36 வரை
ராகுகாலம்: 10.59-12.29 வரை
சுபநேரம்: 06.29 - 07.59 வரை
புதுவருடப் பிறப்பு

## சமைப்போம் வாங்க



### அவல் கிச்சடி

தேவையானவை
கெட்டி அவல் -அரை கப்
தேங்காய்ப்பால் - ஒரு கப்
பெரிய வெங்காயம் - 1
தக்காளி - 1
நிலக்கடலை - ஒரு கரண்டி
எண்ணெய் - 2 கரண்டி
சீரகம் - அரைக்கரண்டி
உப்பு - சுவைக்கேற்ப
மல்லித்தழை, கறிவேப்பிலை - சிறிதளவு.
வறுத்துப்பொடிக்க:
காய்ந்த மிளகாய் - 4

செய்முறை:
அவலைத் தேங்காய்ப் பாலில் ஊற விடவும். வெங்காயம், தக்காளியைப் பொடியாக நறுக்கவும். நிலக்கடலையை வறுத்துப் பொடிக்கவும்.
ஒரு தாச்சியில் 2 கரண்டி எண்ணெய் விட்டு சீரகம் தாளித்து, பிறகு, வெங்காயம், தக்காளி சேர்த்து வதக்கவும். அவலையும் போட்டு தேவையான உப்புச் சேர்த்து நன்றாகக் கிளறி, இறக்கும்போது வறுத்துப் பொடித்த நிலக்கடலைத் தூள் மிளகாய்த் தூள் தூவிக் கிளறவும்.

### கடலுணவுகளின் நேற்றைய விலை நிலைவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 650 | 600 | 750 | 700 | 600 | 600 |
| நண்டு | 300 | 400 | 300 | 400 | 250 | - |
| கணவாய் | 500 | 600 | 500 | 600 | 650 | - |
| பாரை | 400 | 500 | 500 | 600 | 500 | 400 |
| சுறா | 450 | 600 | - | 600 | - | - |
| சீலா | 250 | 400 | 250 | 500 | 400 | 350 |
| விளை | 400 | 500 | 300 | 450 | 500 | 400 |
| முரல் | 300 | 350 | 300 | 400 | 300 | - |
| கும்பிளா | 350 | 300 | 400 | 400 | 500 | - |
| கிழாக்கன் | 450 | 800 | - | 400 | 400 | - |
| ஒரா | 300 | 450 | 300 | 450 | - | 350 |
| திரளி | 200 | 300 | 200 | 350 | - | 300 |
| நகரை | 150 | 250 | - | 300 | 100 | 350 |
| சூடை | 150 | 150 | 120 | 120 | 150 | - |
| ஒட்டி | 200 | 150 | 150 | 300 | 200 | 300 |
| திருக்கை | 150 | 350 | 250 | 300 | - | - |
| மதனம் | 150 | 200 | 200 | 270 | - | - |
| கொய் | 100 | 150 | 70 | 100 | 100 | [illegible] |
| பாலை | 350 | 150 | 250 | 400 | 200 | [illegible] |
| வாளை | 100 | 200 | - | 300 | - | 250 |

### மரக்கறிகளின் நேற்றைய விலை நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 100 | 120 | 100 | 120 | 140 | 120 | 200 |
| கத்தரி | 250 | 250 | 250 | 200 | 220 | 160 | 160 |
| கரட் | 180 | 250 | 300 | 175 | 300 | 300 | 370 |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 40 | 40 | 30 | 30 |
| பயிற்றை | 150 | 200 | 250 | 200 | 260 | 300 | 150 |
| பாகல் | 280 | 260 | 300 | 300 | 300 | 380 | 300 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 80 | 80 | 80 | 120 | 70 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 80 | 100 | 90 | 100 | 80 |
| சி.வெங்காயம் | 120 | 150 | 120 | 140 | 140 | 180 | 120 |
| பூசணி | 50 | 60 | 60 | 50 | 60 | 80 | 40 |
| தக்காளி | 150 | 140 | 140 | 140 | 140 | 140 | 130 |
| வாழைக்காய் | 60 | 60 | 80 | 60 | 60 | 60 | 40 |
| கீரை | 20 | 20 | 50 | 20 | 40 | 50 | 60 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 30 | 50 | 30 | 40 | 15 |
| பச்சை மிளகாய் | 800 | 800 | 800 | 700 | 700 | 1000 | 800 |
| புடோல் | 100 | 100 | 100 | 120 | 120 | 160 | 100 |
| கோவா | 120 | 160 | 160 | 200 | 160 | 160 | 150 |
| வெண்டி | 120 | 140 | 160 | 140 | 140 | 120 | 150 |
| போஞ்சி | 300 | 280 | 300 | 280 | 280 | 320 | 180 |
| லீக்ஸ் | 180 | 180 | 160 | 180 | 160 | 200 | 160 |
| தேங்காய் | 50 | 38 | 50 | 60 | 60 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 80 | 80 | 90 | 100 | 120 |
| தேசிக்காய் | 250 | 160 | 150 | 120 | 180 | 120 | 60 |
| வல்லாரை | 30 | 20 | 10 | 20 | 20 | 20 | 20 |
| கறிமிளகாய் | 500 | 300 | 300 | 340 | 400 | – | 300 |
| இராசவள்ளி | 250 | 150 | 150 | 180 | 180 | 160 | 130 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 100 சிறந்த நிறுவனங்களில் டோக்கியோ சிமெந்து

2015 ஆம் ஆண்டின் எல்.எம்.டி 100 சிறந்த நிறுவனங்கள் தரவரிசையில் இலங்கையின் சீமெந்து உற்பத்தியாளரான டோக்கியோ சீமெந்து மீண்டும் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டிருந்தது. இந்தத் தரவரிசையில் அது 25ஆம் இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

உற்பத்தியாளர் பிரிவில், டோக்கியோ சீமெந்து, முதலாமிடத்தில் தரப்படுத்தப்பட்டிருந்ததுடன், புத்தாக்கம் மற்றும் தரம் ஆகியவற்றுக்காக இந்தக் கௌரவிப்பு வழங்கப்பட்டிருந்தது. அண்மையில் நடைபெற்ற எல்.எம்.டி 100 நிகழ்வின் போது இந்தக் கௌரவிப்பை டோக்கியோ சீமெந்து பெற்றிருந்தது. (நு)

# பாதுகாப்பு செயலமர்வு மூலம் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக்கு வலுச்சேர்க்கும் ஹோல்சிம் லங்கா




லபார்ஜ் ஹொல்சிம் குழுமத்தின் அங்கத்துவ நிறுவனமாகஹொல்சிம் (லங்கா) லிமிட்டெட், சீமெந்து துறையில் முன்னோடியாக திகழ்வதுடன், சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக்கு வலுச்சேர்க்கும் வகையில் ஒப்பந்தக்காரர்களுக்கான பாதுகாப்பு செயலமர்வை ஏற்பாடு செய்திருந்தது.

கடந்த 11ஆம் திகதி சினமன் லேக்சைட்ஹோட்டலில் இந்த நிகழ்வு இடம் பெற்றது. ஒப்பந்தக்காரர் பாதுகாப்புசெயலமர்வு என்பது, ஹொல்சிம் (லங்கா) நிறுவனத்தின் பங்குபற்றலுடனும், சகல ஒப்பந்த நிறுவனங்களின் உயர்முகாமைத்துவ அதிகாரிகளின் பங்குபற்றலுடனும் இடம்பெற்றது.

ஆழமான அறிவுப் பகிர்வு, சிறந்த செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவது மற்றும் தலைப்புகள் பற்றிய உள் அம்சங்களைப் பகிர்ந்து கொள்வது போன்ற விடயங்களை அறிமுகம் செய்யும் வகையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. 80 வெவ்வேறு நிறுவனங்களின் 175க்கும் அதிகமான பங்குபற்றுநர்கள் இந்தநிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

ஹொல்சிம் பிரதம நிறைவேற்று அதிகாரி பிலிப்பே ரிச்சார்ட் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு என்பதன் முக்கியத்துவம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு போன்றவை தொடர்பில் ஹொல்சிம் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு குறித்து அதிகளவு கவனம் செலுத்துகிறோம்.

இது போன்ற அறிவுப் பகிர்வு செயற்பாடுகள் மூலமாக, சகல துறைகளிலும் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றை உறுதி செய்து கொள்ளக் கூடியதாக இருக்கும். எவ்வித சந்தேகங்களுமின்றி மக்கள், உலகம் மற்றும் இலாபம் ஆகிய மூன்று அடிப்படை விடயங்களுக்கு அமைய அமைந்துள்ளன என்றார்.

ஹொல்சிம் சுகாதார மற்றும் பாதுகாப்பு செயற்பாடுகளுக்கான தலைமை அதிகாரி கயான் பெர்ணான்டோ கருத்துத் தெரிவிக்கையில், மாற்றத்தை ஏற்படுத்துவது என்பது ஒரு தனி நபரினால் மேற்கொள்ள முடியாதது. ஆனாலும், இன்றைய நிகழ்வில், இந்தளவு உயர் பங்குபற்றலைக் காணும்போது, மிகவும் ஊக்கமளிப்பதாக அமைந்துள்ளது.

பெருமளவான பங்காளர்கள் தம்மை உண்மையில் அர்ப்பணித்துள்ளதுடன், மாற்றம் ஒன்றை மேற்கொள்வதற்கு தயாராகவுள்ளனர் என்றார். (சு)

## வணிகம்

## நுட்பம்

# விமானத் தயாரிப்பில் இறங்கியது ஹொண்டா

வாகன உற்பத்தியில் உலகளாவிய ரீதியில் சிறந்த சந்தை வாய்ப்பைக் கொண்டுள்ள ஹொண்டா நிறுவனம் தற்போது விமானத் தயாரிப்பில் இறங்கி



யுள்ளது.

அந்த நிறுவனம் வியாபார நோக்கம் கொண்ட தனது முதலாவது பாரம் குறைந்த ஹொண்டாஜெற் விமானத்தின் பறப்புச் சான்றிதழைக் கடந்தவாரம் பெற்றுக் கொண்டுள்ளது.

இந்த விமானம் 420 நொட்ஸ் வேகத்தில் பறக்கக் கூடியது. 42.62 அடி நீளமானதாகவும், இறக்கைகளுக்கு இடையே 39.76 அடி அகலம் கொண்டதாகவும் 14.90 அடி உயரம் கொண்டதாகவும் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனம் தனது விமானங்களின் கட்டுமானப் பணிகளை அமெரிக்காவின் வடக்கு கரோலினாவில் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது. தனது சந்தைப்படுத்தலை அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளை மையமாகக் கொண்டு மேற்கொள்ளவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.



# செவ்வாயில் நிலச்சரிவு

பூமியில் இருந்து சுமார் 22 கோடி கிலோ மீற்றர் தொலைவில் உள்ள செவ்வாய்க்கிரகத்தைப் பற்றிய ஆராய்ச்சியில் அமெரிக்கா, ரஷ்யா, இந்தியா, சீனா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் மும்முரமாக இறங்கி உள்ளன.

இந்தநிலையில் நாசா விண்வெளி ஆராய்ச்சி நிலையம் அண்மையில் வெளியிட்டிருந்த புகைப்படமொன்று அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி அமைப்பான நாசா, செவ்வாய்க்கிரகத்தில் கியூரியாசிட்டி என்ற விண்கலத்தை இறக்கி பல்வேறு தரப்பட்ட ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு வருகின்றது.

இவ் கியூரியாசிட்டி விண்கலமானது அவ்வப்போது புகைப்படங்களையும் எடுத்து அனுப்பி வருகின்றது.

அதன்போது செவ்வாய்க் கிரகத்தில் ஏற்பட்ட நிலச்சரிவு தொடர்பான புகைப்படமொன்றை கியூரியா சிட்டி அனுப்பியுள்ளது.

ஒரு பள்ளத்தாக்கில் ஏற்பட்ட நிலச்சரிவு, பாறாங்கல் மற்றும் மணலால் மூடப்பட்டிருக்கும் காட்சியை அந்தப் புகைப்படம் காட்டுகிறது.

இந்த நிலச்சரிவு சமீபத்தில் ஏற்பட்டு உள்ளது என்றும், பல கற்பாறைகள் சரிந்திருக்கலாம் என்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர முன்னணியிலே விமலுக்கு இடமில்லையாம்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் விமல் வீரவன்சவின் கட்சியான தேசிய சுதந்திர முன்னணி அங்கம் வகிக்கவில்லை என அமைச்சர் எஸ்.பி திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் உடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்துத் தெரிவித்துள்ள அவர், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் நான்கு கட்சிகளே உத்தியோகபூர்வமாக அங்கம் வகிக்கின்றன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி, தேச விமுக்தி ஜனதா கட்சி, பொதுமக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் சிறிலங்கா மஹஜன கட்சி ஆகியனவே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கின்றன.

இந்தக் கட்சிகளின் வரிசையில் தேசிய சுதந்திர முன்னணி கிடையாது. பொதுமக்கள் ஐக்கிய முன்னணி கட்சியுடன் நிலவி வரும் முரண்பாடுகள் விரைவில் களையப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (த)

## வட மாகாண

அதிகாரம் - சட்ட வரையறைகள் - கடந்த கால நீதிமன்றத் தீர்ப்பு நியாயங்கள் எல்லாவற்றையும் புறந்தள்ளி ஒரு பரபரப்புச் செய்தியை வெளியிடுவதாக அந்தச் செய்தி அமைந்துள்ளது.

மக்களால் எங்களுக்கு வழங்கப்பட்ட இறைமை, இந்தச் சபையின் அங்கீகாரம் என்ற வடிவத்தில் இருக்கும் நிலையில், எங்களுடைய இந்தச் சபையின் அங்கீகாரத்தைக் கூட்டுச் சிறப்புரிமையையும், மக்களால் எங்களுக்குக் கையளிக்கப்பட்டுள்ள இறைமையையும் அந்தச் செய்தி மிகவும் மலினப்படுத்துவதாக அமைந்துள்ளது. சிறப்புரிமையின் பாதுகாவலன் என்ற முறையில் அவைத் தலைவர் நிச்சயமாக இந்த விடயம் தொடர்பில் கரிசனையை வெளிப்படுத்த வேண்டும். சபையின் நிலைப்பாட்டை தெரியப் படுத்த வேண்டும்' என்று உறுப்பினர் சயந்தன் கேட்டுக் கொண்டார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த அவைத் தலைவர், ஊடகச் செய்திகள் பல சந்தர்ப்பங்களில் சட்ட நடைமுறைகளை ஆராயாமல் வெளியிடப்படுகின்றன. மாகாணசபை கலைப்புத் தொடர்பில் அரசமைப்பு ஏற்பாட்டில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசமைப்பின் 154 ஆவது உறுப்புரையின் 8 ஆவது உப பிரிவில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆளுநர் ஒரு மாகாண சபையைக் கலைக்க முடியும் என்று குறிப்பிடப்பட்டி ருந்தாலும், ஆளுநரினால் தனித்து மாகாண சபையைக் கலைக்க முடியாது. மாகாண சபையின் முதலமைச்சர் பரிந்துரை செய்து அதன் பேரிலேயே ஆளுநரினால் மாகாண சபையைக் கலைக்க முடியும். மாகாண முதலமைச்சர் தனது அமைச்சரவையின் சம்மதம் மற்றும் மாகாண சபையின் பெரும் பான்மையான ஆத ரவு இருந்தால் மாத் திரமே இவ்வாறு கலைப்பதற்குக் கூட பரிந்துரை செய்ய முடியும்.

மத்திய அரசு தன்னிச்சையாக மாகாணசபையைக் கலைப்பதற்கு சட்டத்தில் இடமில்லை. ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரம் உடையவராக இருந்தாலும், அவர் தன்னிச்சையாகச் சபையைக் கலைக்க முடியாது. ஜனாதிபதி ஆளுநரின் ஊடாகவே சபையைக் கலைக்க முடியும். ஆளுநரின் ஊடாகச் சபையைக் கலைப்பதானால் மேலே சொல்லப்பட்ட விடயங்கள் நடந்தேற வேண்டும்.

இதுவரை மாகாண சபையைக் கலைப்பதற்கான ஆதரவு கோரியோ, அதற்கான முன்னெடுப்புக்களோ எதுவும், இந்தச் சபைக்கு வரவில்லை. குறித்த செய்தி ஊகச்செய்தியாகவும், நியாயமற்றசெய்தியாகவும் பார்க்கக் கூடியதாகவுள்ளது - என்று தெரிவித்தார். (த-5-ரி5)

## வரக்காப்பொல

கொழும்பு நோக்கிச் சென்ற வானும், பிலியந்தலையிலிருந்து சோமாவதிய நோக்கிச் சென்ற பஸ்ஸும் நேருக்கு நேர் மோதுண்டதாலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

வானில் பயணித்த 11 பேரிலேயே 6 பேர் உயிரிழந்துள்ளனர். இவர்களில் நால்வர் பெண்களாவர். படுகாயமடைந்துள்ள 5 பேர் கொழும்பு, வரக்காபொல, வதுபிடிவல ஆகிய வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர். அவர்களில் நால்வரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்துடன், பஸ் சாரதி உட்பட பஸ்ஸில் பயணித்த நிலையில் காயமடைந்த 17 பேர் வரக்காபொல வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

பஸ்ஸில் பயணித்தவர்கள் சோமவதிய புனித பூமிக்கு யாத்திரை செல்லும் வழியிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. வானில் பயணித்தவர்கள் கடவுச் சீட்டைப் பெறுவதற்காக கொழும்பு நோக்கிப் பயணமானவர்கள்.

வான் சாரதியின் கவனமின்மையாலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது எனக் கூறப்படுகிறது. இந்தச் சம்பவம் தொடர்பில் வரக்காப்பொல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

விபத்தில் உயிரிழந்தவர்களின் விவரம் வருமாறு:

மொஹமட் ஹமீட் இபாத் அஹமட் (வயது-29-வான் சாரதி), மொஹமட் இப்ராயிம் ஹபீப் பதூர்னிஸா (வயது-69), உதுமாலெப்பை நுஸ்ரத் ஜகான் (வயது-27), அமீர் அலி பாத்திமா ஜுஸ்லா (வயது 03), சின்னத்தம்பி பாத்திமா பரூசா (வயது 26), சிறாஜ் பாத்திமா சாறா (வயது 3). (த)


## விடுவிக்கப்பட்ட

உயர் பாதுகாப்பு வலய வேலிக்குள் அமைந்துள்ள பலாலிஅம்மன் கோயிலை முட்கம்பி வேலிக்குள் நின்று வணங்கியதுடன்,கற்பூரம் ஏற்றி வழிபட்டமை குறிப்பிடத்தக்கது. (த-107)

# மரண அறிவித்தல்

## திருமதி அன்னம்மா சுப்பிரமணியம்

பிறப்பு
07 . 03 . 1928



இறப்பு
30 . 12 . 2015

புதுத்தோட்டம்,தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், கனகசபை வீதி,மானிப்பாயை தற் காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா சுப்பிரமணியம் நேற்று (30.12.2015) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணை - சின்னன் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சண்முகம் - குழந்தை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் (தபால் ஊழியர் - தெல்லிப்பழை) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னு, செல்லம், கந்தசாமி, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர் களான பாக்கியம், செல்லம்மா ஆகியோரின் மைத்துனியும், பழனிதாசன் (ஓய்வுபெற்ற தபால் தரம் பிரிப்பு உத்தியோகத்தர் - MSO - தெல்லிப்பழை), பத்மாவதி, பத்மநாதன் (ஜேர்மனி), பராசக்தி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சாந்தினி, காலஞ்சென்ற செல்வலிங்கம் (சிறாப்பர் - கல்வித் திணைக்களம் - யாழ்ப்பாணம்), அருட்செல்வி (ஜேர்மனி), தவராஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும், நவநீதன், யாழினி (மக்கள் வங்கி - கன்னாதிட்டி), முருகதாஸ் (மக்கள் வங்கி - பிராந்திய தலை மைக்காரியாலயம் - யாழ்ப்பாணம்), ஆரணி, செந்தூரன் (ஜேர்மனி), கவிநயன் (ஜேர்மனி), யாதவன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பிரதோஷ், தேஜஸ்வினி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2015) வியாழக்கிழமை முற்பகல் 11மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கனகசபை வீதி,
மானிப்பாய்.
(67203)(11,15,18)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## பொன்னுத்துரை முத்துக்குமார்(M.G.R)

(முன்னாள் ஊழியர், புகையிரதத் திணைக்களம்)



அரியாலை பொன்னம்பலம் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட M.G.R என்று அன்பாக அழைக் கப்படும் பொன்னுத்துரை முத்துக்குமார் 28.12.2015 காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பத்மாவதியின் அன்பு கணவரும் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி-கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற காசிலிங்கம் மற்றும் செல்லம்மா ஆகியோரின் அன்பு சகோதரனும் காலஞ்சென்ற ரஜனி மற்றும் ரூபதாஸ், ரூபா, தாரணி, விமலதாஸ்(தபால் திணைக்கள ஊழியர் யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் உதயச்சந்திரன், ராஜேஸ்வரி, பரமேஸ்வரி, யசோதாதேவி, மோகன்றாச், மஞ்சுளா தேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம், குமாரசாமி மற்றும் வீரசிங்கம், கிருஷ்ணபால் சாந்தினி ஆகியோரின் மைத்துனரும் ரபிஷ்னா, கீர்த்தீபன், துஸ்யந்தன், பிரியங்கா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2015) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப.10.00 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.18, பொன்னம் பலம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம் .

தகவல்:
குடும்பத்தினர்.

## வேலாயுதர் சதாசிவம்



மலர்வு
31.03.1911

உதிர்வு
29.12.2015

யாழ். அனலைதீவைப் பிறப்பிடமாகவும் இல 64 " குறிஞ்சி இல்லம் " குருமன்காட்டை வதிவிடமாகவும் கொண்ட வேலாயுதர் சதாசிவம் 29.12.2015 செவ்வாய்க்கிழமை தனது 105 ஆவது வயதில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதர் - சின்னத்தங்கம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரும் யாழ் நல்லூரடியைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற பாலாமணியின் அன்புக் கணவரும் மலர்மதி (வவுனியா), காலஞ்சென்ற Dr. கிருஸ்ணதாஸ், குலமாது (இளைப்பாறிய ஆசிரியை -இராமநாதன் மகளிர் கல்லூரி கொழும்பு), கபிலமாது (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற கணேசலிங்கம்(வவுனியா), விவேகசுந்தரி(ஆஸ்திரேலியா), ஜெக தீசன்(கொழும்பு) காலஞ்சென்ற குணசிங்கம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் முகிலினி, காலஞ்சென்ற முகிலன், நிலாந்தினி, வசந்தினி, கஜன், காயத்திரி, சிற்பரன், நித்திலா, சிவனுஜன், சிவஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் வித்தியா, அபிர்சனா, கிசோபன், அக்ஷன், ஆசிகன், கைரா,சரன், சாய்ரன், தரண்யா, தியானா ஆகியோரின் அருமைப் பூட்டனாரும் காலஞ்சென்றவர்களான சுந்தராம்பாள், விஸ்வநாதி, கணபதிப்பிள்ளை, பொன்னாச்சிப்பிள்ளை, சின்னாச்சி , தெய்வானைப்பிள்ளை, ஐயாத்தப்பிள்ளை ஆகியோரது சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2015) வியாழக்கிழமை மாலை 3 மணியளவில் அவரின் குருமான்காடு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூந்தோட்டம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

T.P: 024 222 0444

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உருவாகவுள்ள

ஸுக்கும் இடையிலான முக்கிய சந்திப்புக் கொழும்பில் நடைபெற்றது.
இதன்போது தமிழ், முஸ்லிம் மக்களின் அபிலாசைகளை நலன்களை உறுதிப்படுத்தும் வகையில் கூட்டமைப்பும் மு.காவும் ஒருமித்த கருத்துகளை முன்வைப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.
இது தொடர்பில் தொடர்ந்தும் சந்தித்து விரிவாகப் பேசுவதற்கும் இந்தச் சந்திப்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
கொழும்பு-7இல் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் நேற்று நண்பகல் நடைபெற்ற மேற்படி சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அதன் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம், கட்சியின் பிரதிச் செயலாளர் நாயகமும் கல்முனை மாநகர சபை மேயருமான நிஸாம் காரியப்பர், கட்சியின் வெளிவிவகாரப் பணிப்பாளர் சட்டத்தரணி ஏ.எம்.பாயிஸ், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முத்தலி பாவா பாருக் ஆகியோரும் கலந்து கொண்டனர்.
இந்தச் சந்திப்பு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கருத்துத் தெரிவிக்கையில்,
2016ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு உட்படப் பல விடயங்களைக் கருத்திற்கொண்டு புதிய அரசமைப்பை அரசு தயாரிக்கவுள்ளது. இந்நிலையில், வடக்கு, கிழக்கு தமிழ் - முஸ்லிம் மக்களின் அபிலாசைகள் நலன்களைக் கருத்திற்கொண்டு தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வில் ஒருமித்த நிலைப்பாட்டைக் கையாள்வது உட்படப் பல விடயங்கள் தொடர்பில் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடினோம். இது தொடர்பில் ஒரு இணக்கப்பாட்டுக்கும் வந்துள்ளோம். தொடர்ந்தும் கருத்துப் பரிமாற்றங்களை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளோம். எனவே, எமது பேச்சுக்கள் தொடரும் என்று கூறினார்.
இதேவேளை, நேற்றைய சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் கலந்துகொள்ள அதன் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான செல்வம் அடைக்கலநாதன் (ரெலோ), த.சித்தார்த்தன் (புளொட்) ஆகியோருக்கு அழைப்பு விடுத்தபோதும் அவர்கள் வரவில்லை என்று கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் மேலும் தெரிவித்தார். (த-10-101)

# மரண அறிவித்தல்கள்

## முத்திதம்பர் பரமசிவம்

கருங்காலி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் இல.285, சிவபுரம், பரந்தனை வசிப்பிடமாகவும் கொண்ட முத்திதம்பர் பரமசிவம் நேற்று (30.12.2015) புதன்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற திலகவதியின் அன்புக் கணவரும், சிவநிமலன், சிவ சுதன், சிவஞானதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2015) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரது இல்லமான 285, சிவபுரம் பரந்தனில் நடைபெற்று பூத வுடல்கோரக்கன் கட்டு மயானத்தில் தகனம் செய்யப்படும் . இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.285, சிவபுரம், பரந்தன் — தகவல்: குடும்பத்தினர்.

## கனகரத்தினம் காசிபதி

(ஓய்வு பெற்ற இலிகிதர் - மகாராஜா நிறுவனம் கொழும்பு)



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் காசிபதி (ஓய்வு பெற்ற இலிகிதர் - மகாராஜா நிறுவனம் கொழும்பு) நேற்று (30.12.2015) புதன்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - கோமளாம்பாள் தம்பதியினரின் அன்பு மருமகனும் புவனராணியின் (ஓய்வு பெற்ற ஆசிரியை) அன்புக்கணவரும் றமணன் (ஆசிரியர் - யா/வட்டு மத்திய கல்லூரி), ஜெயந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் மதிபாலன் ( ஆசிரியர் - யா/சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம்) கலைச்செல்வி (கணக்காளர் - பிரதேச செயலகம் நல்லூர்) ஆகியோரின் மாமனும் தவராஜலிங்கத்தின் அருமைச் சகோதரரும் விஜயலட்சுமி, காலஞ்சென்ற செங்கமலாசினி மற்றும் ஜெகதீஸ்வரி (ஜேர்மனி), கேதீஸ்வரன் (ஜேர்மனி), மோகனா (ஜேர்மனி), தவராஜேஸ்வரன் (பிரான்ஸ்), கிருபாகரன் (உப தபாலகம் - ஆனைக்கோட்டை), நளாயினி (ஆசிரியர் - யா/சுதுமலை அ.மி.த.க பாடசாலை), மாலினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் காருண்யாவின் பாசமிகு பேரனுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2015) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காக்கைதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| கூழாவடி மேற்கு, ஆனைக்கோட்டை | தகவல்: றமணன் (மகன்) மதிபாலன் (மருமகன்) | தொடர்பு: 077 9599 663 |

## திருமதி நகுலேஸ்வரி பிரபாகரன்



தோற்றம் 1964.07.20 — மறைவு 2015.12.30

நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நகுலேஸ்வரி பிரபாகரன் நேற்று (30.12.2015) புதன்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா பத்தர் மகேஸ்வரி தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான இராசதுரை பத்தர் மாணிக்கம் தம்பதியரின் மருமகளும் பிரபாகரனின் பாசமிகு மனைவியும் ஸ்ரீதாரனி (பிரான்ஸ்), நிவேதினி, சிவாஜினி, நிந்துஜா (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயாரும் குணசீலன் (பிரான்ஸ்), சந்திரமோகன், சுகந்தன், கரிதீசன் (லண்டன்) ஆகியோரின் மாமியா ரும் காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம் (அண்ணா), மகேஸ் வரன், ரெத்தினேஸ்வரி, விஸ்வேஸ்வரி மற்றும் சர்வேஸ்வரி ஆகியோ ரின் அன்புச்சகோதரியும் நேசமலர், பாஸ்கரன், தயாகரன் ஆகியோரின் மைத்துனியும் திலானி, திலக்சன், திலக்சி (பிரான்ஸ்), ஜானுயா, பானுஜா, பவித்திரன், வைஸ்ணவி, தர்கிசன், தபிநயா (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2015) வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| 47/1, முருகமூர்த்தி வீதி, [illegible]ண்ணார்பண்ணை [illegible]ணம். (67226) | தகவல். குடும்பத்தினர். | தொடர்பு: 077 8020 990 |

## 45 சதவீத

பட்ட நிதியில் 83 சதவீதமான நிதி கடந்த 28 ஆம் திகதி வரை செலவு செய்யப்பட்டுள்ளதாக, அதாவது 58 நாள்களுக்குள் 45 சதவீத நிதி செலவு செய்யப்பட்டுள்ளதாக முதலமைச்சர் சபையில் தெரிவித்தார்.
வடக்கு மாகாண சபையின் விசேட அமர்வு நேற்று இடம்பெற்றது. இதன்போது முதலமைச்சர் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்படி விடயத்தைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
வடக்கு மாகாணத்துக்கு இந்த ஆண்டு செலவு செய்வதற்காக பிரமாண அடிப்படையிலான நன்கொடையாக 400 மில்லியன் வழங்கப்பட்டது. அதில் 372.23 மில்லியன் ரூபா இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளது. மாகாண குறித்தொதுக்கப்பட்ட நன்கொடையாக ஆயிரத்து 440 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது. அதில் இதுவரை ஆயிரத்து 250.37 மில்லியன் ரூபா அமைச்சுக்களுக்கும் - திணைக்களங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. அதில் ஆயிரத்து 190.92 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. இது மொத்த நிதியில் 83 சதவீதமாகும். எஞ்சிய நிதியும் உரிய காலத்தில் செலவு செய்யப்படும்.
விவசாய அமைச்சு இந்த ஆண்டு 238 வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்கு 193 மில்லியனை ஒதுக்கியிருந்தது. அதில் 191.28 மில்லியன் விடுவிக்கப்பட்டுள்ளது. 189.27 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது. இது மொத்த நிதியில் 98 சதவீதமாகும்.
கல்வி அமைச்சு இந்த ஆண்டு 117 வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்கு 323 மில்லியனை ஒதுக்கியிருந்தது. அதில் 235.1 மில்லியன் ரூபா விடுவிக்கப்பட்டுள்ளது. 233.7 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. இது மொத்த நிதியில் 73 சதவீதமாகும்.
சுகாதார அமைச்சு இந்த ஆண்டு 107 வேலைத் திட்டங்களுக்கு 377.5 மில்லியனை ஒதுக்கியிருந்தது. அதில் 321.94 மில்லியன் விடுவிக்கப்பட்டுள்ளது. 283.16 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது. இது மொத்த நிதியில் 78 சதவீதமாகும். மீன்பிடி அமைச்சுக்கு இந்த ஆண்டு 145 வேலைத் திட்டங்களுக்கு 277.3 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. அதில் 277 மில்லியன் விடுவிக்கப்பட்டுள்ளது. 270.5 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. இது மொத்த நிதியில் 98 சதவீதமாகும்.
முதலமைச்சர் அமைச்சு இந்த ஆண்டு 131 வேலைத் திட்டங்களுக்காக 269.15 மில்லியனை ஒதுக்கியிருந்தது. அதில் 225.05 மில்லியன் ரூபா விடுவிக்கப்பட்டுள்ளது. 214.25 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. இது மொத்த நிதியில் 80 சதவீதமாகும்.
ஒட்டுமொத்தமாக 738 வேலைத் திட்டங்களுக்கு ஆயிரத்து 440 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. அதில் ஆயிரத்து 25.37 மில்லியன் ரூபா விடுவிக்கப்பட்டுள்ளது. ஆயிரத்து 190.92 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. இது மொத்த நிதியின் 83 சதவீதமாகும் என்றார். (த-5)

## ஒதுக்கிய

ருந்த இந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே முதலமைச்சர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் கூறுகையில்,
இங்கு சகலரும் ஒன்றுகூடியுள்ளனர். கடந்த காலங்களில் இருந்து வந்த முரண்பாடுகள் தற்போது மறையத் தொடங்கியுள்ளன. நாங்கள் அரசியலுக்குப் புதிது என்பதால், சில சிக்கல்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. அப்போதிருந்த ஆளுநரும் வித்தியாசமானவர். இராணுவத்தில் இருந்தவர் என்பதால், பல பிரச்சினைகளை எதிர்கொண்டோம். இப்போது இவை அனைத்தும் குறைந்தள்ளன.
இந்த வருடத்தில் பல நன்மைகள் கண்டு கொண்டோம். அது காணாது. எனவே அடுத்த ஆண்டில் எம்முடைய கட்டுப்பாடுகள் கடுமையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இந்த வருடம் எம்முடைய கொடைகளை எல்லாம் செலவு செய்வதில் பல்வேறு தடைகள், தடங்கல், செயற்படாமைகள், தலைகீழ் உணர்வுகள் இருந்ததால் பலதையும் செய்யாமல் இருந்து கடைசி நேரத்தில் செய்துள்ளோம்.
எனினும் மற்றைய மாகாணத்துடன் ஒப்பிடும்போது நாம் நிதியைச் சரியாகத்தான் கையாண்டுள்ளோம். எனினும் தடுமாற்றம் உண்டு என்பதில் உண்மையை மறைக்கக் கூடாது. முதலிலே எதைச் செய்யத் தொடங்கினோமோ - திட்டமிட்டோமோ அதைவிடுத்து வேறு ஒன்றைச் செய்து அந்தப் பணத்தைச் செலவிட்டுள்ளோம். ஆனால் அடுத்த ஆண்டு இது போன்று செயற்படுதல் கூடாது.
எங்களுடைய கட்டுப்பாடுகள் இதனால்தான் அடுத்த வருடம் அதிகமாக இருக்கும் என்பதை இப்போதே கூறி வைக்கின்றேன். இங்குள்ள அதிகாரிகள் திறமையானவர்கள்தான். ஆனால், அதிகம் அக்கறையில்லாத - பொறுப்பற்ற தன்மை அவர்களிடம் இருப்பதை அவதானித்துள்ளேன். அடுத்த ஆண்டு சிறப்பாகச் செயற்பட வேண்டும் என்று தெரிவித்தார். (த-5-ரி5)

## ஆளும் தரப்பின்

திகதி சந்திப்பு நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. அன்றைய தினம் வரவு - செலவுத் திட்ட அமர்வு இடம்பெற்றமையினால், முதலமைச்சருடனான சந்திப்பு இடம்பெறவில்லை. ஆளும் கட்சி உறுப்பினர்கள் மாத்திரம் சந்திப்பு நடத்தியிருந்தனர்.
இந்த நிலையில், மீண்டும் கலந்துரையாடல் நடத்துவதற்கு முதலமைச்சரிடம், ஆளும் கட்சி உறுப்பினர்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இன்றைய தினம் (நேற்று) மாகாண சபையின் விசேட அமர்வு இடம்பெறுவதனால், சகல மாவட்டங்களிலிருந்தும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் கூட்டத்திற்கு வருவார்கள் என்பதனால், இன்றைய தினம் (நேற்று) அல்லது நாளை (இன்று) சந்திப்பு நடத்துவதற்கு முதலமைச்சரிடம் அனுமதி கோரப்பட்டது.
இதற்கு முதலமைச்சர், தனக்கு நேரமில்லை என்று மறுத்துள்ளார். அடுத்த வாரமளவில் பார்க்கலாம் என்று தெரிவித்துள்ளார்.
அமைச்சர்கள் தன்னிச்சையாகச் செயற்படுகின்றார்கள், உறுப்பினர்களுக்குரிய சிறப்புரிமைகள் மீறப்படுகின்றன என்பது தொடர்பாகவே, ஆளும் கட்சி உறுப்பினர்கள் முதலமைச்சருடனான முதல் சந்திப்பில் பேசியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5-ரி5)

## சிற்றம்பலம்

டிருந்ததுடன் எந்தவொரு கருத்துக்களையும் தெரிவிக்கவில்லை.
தமிழரசுக் கட்சியின் யாழ்.கிளைக் கூட்டம் நேற்று யாழ். மாட்டீன் வீதியில் உள்ள கட்சித் தலைமையகத்தில் யாழ். மாவட்டக் கிளைத் தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் இடம்பெற்றது. இதன்போதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
இவ்வாறு நிறைவேற்றப் பட்ட தீர்மானத்தைக் கட்சியின் செயலாளருக்கு அனுப்பி வைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.
இந்தக் கலந்துரையாடலில் பேராசிரியரின் செயற்பாடு தொடர்பில் பல உறுப்பினர்களும் கடும் அதிருப்தியை வெளியிட்டனர்.
இந்தக் கூட்டத்தில் பேராசிரியர் சிற்றம்பலமும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-101)

## உயர்தர


வெளியிடப்படும்.
இவ்வாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ. எம்.என்.ஜே. புஷ்பகுமார அறிவித்துள்ளார்.
பரீட்சைப் பெறுபேறுகளை http://www.doenets.lk என்ற பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் பார்வையிடலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.
ஏற்கனவே, இன்று பரீட்சை முடிவுகள் வெளியிடப்படுமென அறிவிக்கப்பட்டபோதும், பெறுபேறுகளைத் தரவேற்றும் பணிகள் முடிவடையாத நிலையிலேயே எதிர்வரும் 3ஆம் திகதி வெளியிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் கூறியுள்ளார்.
இதேவேளை, கடந்த உயர்தரப் பரீட்சைக்கு சுமார் 3 லட்சத்து 9 ஆயிரத்து 69 பரீட்சார்த்திகள் தோற்றியதுடன் அவர்களில் 2 லட்சத்து 36 ஆயிரத்து 72 பேர் பாடசாலை பரீட்சார்த்திகள் என்பதுடன் 72 ஆயிரத்து 997 பேர் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் ஆகும். (த-வ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சி மாற்றம் வரும் வரை சமாதானம் ஏற்படவில்லை

*அமைச்சர் ஹக்கீம் குற்றச்சாட்டு*

கொழும்பு, டிசெ.31
விடுதலைப் புலிகளுடனான போர் நிறைவடைந்த காலத்திலிருந்து ஆட்சி மாற்றம் ஏற்படும் வரை சமாதானம் ஏற்படவில்லை என்றும், சமாதானம்



தோல்வியடைந்திருந்ததாகவும் நகர அபிவிருத்தி மற்றும் நீர்ப்பாசனம், நீர் விநியோக அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறியுள்ளார்.
இந்த நிலையில் புதிய அரசு, சர்வதேச அங்கீகாரத்துடன் இணக்கத் தீர்வு கொண்டு வருவதற்கும், அதனை நடைமுறைப்படுத்துவதற்கும் முயற்சித்து வருவதாகவும் அவர் கூறினார்.
அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுப் புதன் கிழமை நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுளார்.
இந்தச் செய்தியாளர் சந்திப்பில் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,
2009 ஆம் ஆண்டு போர் நிறை வடைந்தபோதிலும், இலங்கையில் சமா தானம் நிலைநாட்டப்படவில்லை. சமாதானம் தோல்வியடைந்த ஒன்றாகவே காணப்பட்டது.
தினந்தோறும் ஏதோ ஒரு வகையில் மத வாதப் பிரச்சினைகள், தாக்குதல்கள் என்பன இடம் பெற்றன. இவ்வாறான ஒரு நிலையில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து இலங்கைக்குச் சர்வதேச ரீதியில் நற்பெயர் கிடைத்துள்ளது.
இலங்கையில் சமத்துவம், சகோதரத்துவம், இனங்களுக்கு இடையில் புதிய அரசியல் கலாசாரம் ஆகியவற்றை உருவாக்கிய மைக்காக சர்வதேச, வல்லரசு நாடுகள் இலங்கை ஜனாதிபதி மற்றும் பிரதமரை வாழ்த்துகின்றன.
இவ்வாறான ஒரு நிலையில், சர்வதேச அங்கீகாரத்துடன் இணக்கத் தீர்வு கொண்டு வருவதற்கும், அதனை நடைமுறைப்படுத்துவதற்கும் புதிய அரசு முயற்சித்து வருகின்றது-என்றார்.
(தி)

# மீனவர் சமூகத்தில் எவரையுமே சந்திக்கவில்லை மக்கள் பேரவை

யாழ்ப்பாணம், டிசெ. 31
எங்கள் சமூகத்தில் ஒருவரையும் சந்திக்காமல் அனைத்து சமூகத்தினரையும் சந்தித்தோம் என அறிக்கை விடுவதைத் தமிழ் மக்கள் பேரவையினர் நிறுத்தவேண்டும் என யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் சமாசங்களின் சம்மேளனத்தினர் தெரிவித்துள்ளனர்.
நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.
இது தொடர்பில் அவர்கள் மேலும் கூறுகையில்,
தமிழ் மக்கள் பேரவை உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அவர்கள் எங்கள் சமூகத்தவரைச் சந்திக்கவில்லை. எந்தவொரு கலந்துரையாடல்களையும் மேற்கொள்ளவில்லை. தமிழ் மக்கள் பேரவை நடுநிலை வகிக்கும் பட்சத்தில் நாங்கள் அதை ஆதரிப்போம். வரவேற்போம். அவர்கள் இதுவரை பல அமைப்பினரைச் சந்தித்துள்ளனர். ஆனால் எங்கள் சமூகத்தில் யாரையும் சந்திக்கவில்லை. எங்கள் குறை நிறைகளைக் கேட்கவில்லை. தமிழ் அரசியலில் நாங்களும் முக்கியமான சமூகம்தான். உடனடியாகத் தமிழ் மக்கள் பேரவையில் இணையத் தயாராக இல்லை. அவர்கள் பக்க கருத்துக்கள், நோக்கங்களில் நியாயம், நடுநிலைமை இருந்தால் அவர்களுக்கு சாதகமாகப் பதிலளிப்போம்-எனக் குறிப்பிட்டனர்.
(த-10)

# பொலனறுவையில் கொட்டுகிறது மழை

*மகாவலி ஆறு பெருக்கெடுப்பு*

கொழும்பு, டிசெ.31
பொலனறுவையில் கடந்த சில நாள்களாக பெய்துவரும் அடைமழை காரணமாக, மகா வலி ஆறு பெருக்கெடுத்து, கொழும்பு-கல்லேல்ல வீதியில் சுமார் 4 அடி உயரத்துக்கு நீர் நிரம்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.
இதனால் குறித்த வீதியில் கனரக வாகனங்கள் தவிர ஏனைய வாகனங்கள் செல்வதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டது. அத்துடன், பொலனறுவை-சோமாவதி வீதியின் போக்குவரத்து முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
தொடரும் அடை மழை காரணமாக கிரித்தலே வாவி நிரம்பி வழிவதாகவும், பிரதேசத்தை அண்டிய மக்கள் வேறு இடங்களுக்கு சென்றுள்ளனர்.
நாட்டில் கடந்த சில நாள்களாக பரவலாகப் பெய்துவரும் அடை மழை காரணமாக, மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.
(தி)

# கசிப்புக் காய்ச்சிய ஒருவர் கைது

இளவாலை சீந்திப்பந்தல் பகுதியில் கசிப்புக் காய்ச்சிய ஒருவர் நேற்று இளவாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
அந்தப் பகுதியிலுள்ள பற்றைக்காணி ஒன்றில் கசிப்புக் காய்ச்சிக் கொண்டிருந்த வேளை சுற்றிவளைத்த பொலி ஸார் குறித்த நபரைக் கைது செய்தனர்.
இவரிடம் இருந்து 20 லீற்றர் கசிப்பு மற்றும் அதனைக் காய்ச்ச பயன்படுத்திய உபகரணங்கள் என்பன கைப்பற்றப் பட்டுள்ளன என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(த-வ)

# முல்லையில் பாதீனியம் ஒழிப்பு

ஒட்டிசுட்டான் டிசெ.31
முல்லைத்தீவு மாவட்டம் விவசாயத் திணைக்கள அனுசரணையுடன் ஒட்டிசுட்டான் வித்தியாபுரம் பகுதியில் பாதீனியம் ஒழிப்பு நடவடிக்கை நேற்று புதன்கிழமை நடைபெற்றது.
இந்த நிகழ்வில் விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள்,கமநல சேவைத் திணைக்கள உத்தியோகத்தர்கள், பிரதேசசபை உத்தியோகத்தர்கள் ,மாவட்டசபை பயிற்சி உத்தியோகத்தர்கள்,தனியார் கல்வி நிலைய மாணவர்கள்,விவசாயிகள் எனப்பலரும் கலந்து கொண்டு பாதீனியத்தை ஒழித்தனர்.
(வ-500)

# காதலர்களின் சடலங்கள் மீட்பு

அம்பாறை, டிசெ.31
அம்பாறை உகன, ஹிமிதுராவ பகுதியில், ஓட்டோ ஒன்றில் இருந்து ஆண் மற்றும் பெண் ஆகிய இருவரது சடலங்களை நேற்றுப் புதன்கிழமை மீட்டதாக பொலிஸ் ஊடகப்பிரிவினர் தெரிவித்துள்ளனர்.
இகினியா பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய ஆணும் முல்லேரியாப் பகுதியைச் சேர்ந்த பெண்ணுமே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ள னர்.
காதல் விவகாரம் காரணமாக இவ்விருவரும் தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.
சடலங்கள் அம்பாறை வைத்தியசாலையின் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பான மேலதிக விசார ணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.
(தி)

**கண்ணீர் அஞ்சலி**



யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி ரஞ்சினி அருட்செல்வன் அவர்களின் தாயார்

**திருமதி கனகம்மா பேரம்பலம்**

அவர்கள் 2015.12.25 அன்று காலமான செய்தி அறிந்து ஆறாத்துயரில் ஆழ்ந்துள்ள அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர்கள் நலன்புரி கூட்டுறவுச் சங்கம்.**

**ஓராண்டு நினைவஞ்சலி**

தோற்றம்
30
-
05
-
1987



மறைவு
11
-
01
-
2015

**அமரர் நாககுமார் நவரஞ்சன்**

இம்மை வாழ்வை வெறுத்து - உலகில்
எம்மைவிட்டு சென்றனையோ
காலங்கள் பல கடந்தாலும் - உன்
கோலங்கள் எம் மனதைவிட்டு நீங்கா
ஈர விழிகளுடன் கலங்கி நிற்கின்றோம்
தூரதேசம் சென்றனையோ
உங்கள் நினைவுகளுடன்...

214/5 சேர்.பொன்
இராமநாதன் வீதி,
திருநெல்வேலி

(67216)
(11.15,18)

**மனைவி, மக்கள், தாய், சகோதர, சகோதரிகள், குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசிரியர்களுக்கான தேசிய விளையாட்டு விழாவில் 36 தொடக்கம் 40 வயது வரையான பிரிவினருக்கான போட்டிகளில் வடமாகாணம் சார்பாக களமிறங்கிய மணற்காடு றோ.க.த. பாடசாலையைச் சேர்ந்த எஸ். கியோமார் தட்டெறிதல், குண்டு போடுதல், ஈட்டி எறிதல் போன்றவற்றில் தங்கப் பதக்கங்களை பெற்று இவ் வயதுப் பிரிவின் சிறந்த விளையாட்டு வீரராக தெரிவுசெய்யப்பட்டிருந்தார். (ம-422)

## இலங்கை- நியூசிலாந்து; மூன்றாவது ஆட்டம் இன்று

இலங்கை - நியூசிலாந்து அணிகளுக்கு இடையில் நடைபெற்றுவரும் ஒருநாள் தொடரின் மூன்றாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் வெற்றிபெற்றேயாக வேண்டும் என்ற கட்டாயத்தில் களமிறங்குகிறது இலங்கை.

தொடரில் மொத்தமாக ஐந்து ஆட்டங்கள். ஏதேனும் மூன்று ஆட்டங்களில் ஒரு அணி வெற்றிபெற்றால் அந்த அணி கிண்ணத்தைக் கைப்பற்றும். முடிவடைந்த முதல் இரண்டு ஆட்டங்களிலும் நியூசிலாந்து அபார வெற்றிபெற்றுள்ளது. இதனால் இன்றைய ஆட்டத்திலும் வெற்றிபெற்றால் நியூசிலாந்து கிண்ணத்தைக் கைப்பற்றும். எனவே தொடரில் தனது இருப்பை தக்கவைக்க வேண்டுமாயின் இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெற்றேயாகவேண்டும் என்ற கட்டாயத்தில் இலங்கை களமிறங்குகிறது. (ம)

## சொந்த மண்ணில் சுருண்டது தென்னாபிரிக்கா முதல் டெஸ்டில் இங்கிலாந்து இலகு வெற்றி



தென்னாபிரிக்கா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்தில் இங்கிலாந்து 241 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

நாணயச்சுழற்சியில்வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்ய இங்கிலாந்தின் இன்னிங்ஸ் 303 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது. பந்துவீச்சில்ஸ்ரெயின், மோர்கல் இருவரும் தலா 4 இலக்குகளையும்அப்பொட், பியட் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா 214ஓட்டங்களில்சுருண்டது. ஆரம்ப வீரராக களமிறங்கி இறுதிவரை ஆட்டமிழக்காது நின்ற எல்கர் 118 ஓட்டங்களைஎடுத்தார். பந்துவீச்சில் புரோட், மொயின் அலி இருவரும் தலா நான்கு இலக்குகளையும் பின் இரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

89 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து சகல இலக்குகளையும் இழந்து 326 ஓட்டங்க ளைப் பெற்றது. அதிகபட்சமாக பரிஸ்ரெளவ் 79 ஓட்டங்களையும் ரூட் 73 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பாக பியட் 5 இலக்குகளையும் ஸ்ரியான் 3 இலக்குகளையும் மோர்கல், அப்பொட் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

416 ஓட்டங்களை இலக்காகக்கொண்டு பதிலுக்கு களமிறங்கியது தென்னாபிரிக்கா. ஆரம்ப வீரர்கள் இருவரும் ஓரளவு நம்பிக்கை கொடுத்தனர். இலக்குச் சரிவில்லாமல் 50 ஓட்டங்களை எட்டியது தென்னாபிரிக்கா. 33 ஓட்டங்களுடன் வீழ்ந்தார் ஸ்ரியான். அம்லா பதின்மத்தை விட்டுத் தாண்டவில்லை. எல்கரும் வில்லியர்ஸும் சிறிது அச்சுறுத்தினர். ஆனால் அவர்களால் அரைச்சதத்தை நிறைவுசெய்ய முடியவில்லை. மத்திய வரிசையில் களமிறங்கிய பிளாசிஸ், பவுமா, ஸ்ரெயின் மூவராலும் பத்து ஓட்டங்களை எட்டமுடியவில்லை. டுமினி நிலைத்து நின்றாலும் பின்வரிசை வீரர்கள் எவரும் இணைப்பாட்டத்துக்கு ஒத்துழைக்காத நிலையில் 174 ஓட்டங்களில் சுருண்டது தென்னாபிரிக்கா. 241 ஓட்டங் களால் வெற்றிபெற்ற இங்கிலாந்து தொட ரில் 1:0 என்று முன்னிலையில் உள்ளது. (ம)


## ஆஸ்திரேலியாவுக்கு எதிராக அசத்தப்போகும் அக்சர் பட்டேல்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்துவேன் என்று சுழற்பந்து வீச்சாளர் அக்சர் பட்டேல் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் நடந்த இந்திய உள்ளூர் தொடரான விஜய் ஹசாரே கிண்ணத்துக்கான தொடரில் 19 இலக்குகளை வீழ்த்திய அக்சர் பட்டேல் அனைவரின் கவனத்தையும் கவர்ந்தார். இதைத் தொடர்ந்து ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் அவர் சேர்க்கப்பட்டுள்ளார். இதற்கான பயிற்சியில் ஈடுபட்டுள்ள அவர் தெரிவிக்கையில் - இந்திய அணியில் இடம் பிடிக்கக் கடுமையாக போராடவேண்டி உள்ளது. இந்தநிலையில் நானும் ரவீந்திர ஜடேயாவும் இடது கை சுழற்பந்து வீச்சாளர்கள் என்பதால் அணியில் இடம்பிடிக்க எங்களுக்குள் போட்டி நிலவுவதாக கூறப்



படுகிறது. ஆனால் நான் அவரை போட்டியாளராக கருதவில்லை. நண்பராகவே கருதுகிறேன். மேலும் நாங்கள் இருவரும் ஒரே மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். எங்கள் இருவருக்கும் அணியில் இடம்கிடைக்கும் என்று நம்புகிறேன். நான் ஏற்கெனவே ஆஸ்திரேலியாவில் ஆடியிருப்பதால் அந்த அனுபவம் எனக்கு கைகொடுக்கும் என்று நம்புகிறேன். எனக்கு ஆட வாய்ப்பு கிடைத்தால் சிறந்த ஆட்டத்தைவெளிப்படுத்துவேன். (ம)



## ரியோ ஒலிம்பிக்கில் தங்கம் இது சானியாவின் திட்டம்

ஒலிம்பிக் தொடரை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன் என்று தெரிவித்துள்ள சானியா மிர்சா, அதில் தங்கம் வெல்லும் நம்பிக்கை உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

பெண்களுக்கான இரட்டையர் டெனிஸ் தொடர்களில் சானியாவும், கிங்கிஸும் இணைந்து இந்த ஆண்டில்10கிண்ணங்களைவென்று சாதனை படைத்துள்ளனர். இதன் மூலம் இரட்டையர் பிரிவில் உலகின் முதல் நிலை வீராங்கனையாக உள்ளார் சானியா. அடுத்த வருடம் பிரேசிலின் ரியோ நகரில் ஒலிம்பிக் தொடர் நடைபெறவுள்ள நிலையில் ஒலிம்பிக் தொடர் தொடர்பாக கருத்துத் தெரிவித்த சானியா நானும் கிங்கிஸும் இணைந்து இந்த வருடத்தில் ஏராளமான வெற்றிகளைக் குவித்தோம். இந்த வருடம் அற்புதமாக அமைந்தது. ரியோ ஒலிம்பிக் தொடரை ஆவலுடன் எதிர்பார்த்துள்ளோம். இதில் தங்கம் வெல்வதே எமது இலக்கு. அடுத்த வருடமும் எமதுமுதலிட அந்தஸ்தைத்தக்கவைக்க முயற்சி செய்வோம்- என்றார். (ம)

## குவார்டியாலோவின் ஒப்பந்தத்தை நீக்கியது பார்சிலோனா கழகம்

ஸ்பெயினைச் சேர்ந்த மத்திய கள வீரரான சேர்ஜி குவார்டியாலோ, பார்சிலோனா கழகத்தின் 'பி' அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த நிலையில் அவரது ஒப்பந்தத்தை நீக்குவதாக பார்சிலோனா அறிவித்துள்ளது.


24 வயதான சேர்ஜி, பார்சிலோனா கழகத்தின் மீதும் ஸ்பெயினின் உள்ளூர் சமூகமான கட்டலோனியா மீதும் பதிவு செய்திருந்த டுவீட்கள் காரணமாகவே அவரது ஒப்பந்தம் நீக்கப்பட்டுள்ளது. குறித்த சமூகத்தைப் பற்றியகடும் வார்த்தைப் பிரயோகங்களுடன் கூடிய கருத்துக்களைப் பகிர்ந்திருந்த அவர், பார்சிலோனாவின் பரம வைரியான ரியல் மட்ரிட் கழகத்துக்கும் ஆதரவை வெளிப்படுத்தியிருந்தார். இந்த டுவீட்கள் 2013ஆம் ஆண்டில் பதியப்பட்டன என்றபோதிலும், டுவிட்டர் பயனாளி ஒருவரால் இவை வெளிப்படுத்தப்பட்டதை அடுத்தே, அவரது ஒப்பந்தம் நீக்கப்பட்டது. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தேசியமட்ட கராத்தே தொடரில் 6 வயதுப்பிரிவில் வவுனியா மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த நந்தகுமார் பிந்தன் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றியுள்ளார். (ம)



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் புள்ளிகளின் அடிப்படையில் ஆர்சனல் அணி முதலிடத்தைப் பிடித்துள்ளது. குறித்த தொடரில் நேற்று நடைபெற்ற ஆர்சனல், பௌர்ன்மௌத் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் ஆர்சனல் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று பிறீமியர் லீக் புள்ளிகள் தரவரிசையில் முதலிடத்துக்குச் சென்றுள்ளது. (ம)

# இலங்கை ரி-20 அணியின் தலைவராக டினேஸ் சந்திமல் நியமிக்கப்பட்டுள்ளார்

நியூசிலாந்துக்கு எதிரான ரி-20 தொடரில் இலங்கை அணியின் தலைவராக டினேஸ் சந்திமல் நியமிக்கப்பட்டுள்ளார். நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு இலங்கை அணி 2 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரிலும் 5 ஓட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரிலும் 2 ஆட்டங்கள் கொண்ட ரி-20 தொடரிலும் விளையாடி வருகிறது. டெஸ்ட் தொடரை 2:0 என்று பறிகொடுத்தது. நடை பெற்று வரும் ஒருநாள் தொடரில் முடிவடைந்த முதல் இரண்டு ஆட்டங்களிலும் தோல்வியடைந்தது. மூன்றாவது ஆட்டம் இன்று நடைபெறுகிறது. இந்த ஆட்டத்திலும் தோல்வியடைந்தால் ஒருநாள் தொடரை நியூசிலாந்து கைப்பற்றும். ரி-20 தொடரில் இருந்து காயம் காரணமாக மலிங்க விலகியுள்ளமையால் தலைமைப்பதவி சந்திமலுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. (ம)




## யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம் மல்லாகத்தில் மைதான ஒப்பந்தம்

வலி வடக்கு, டிசெ. 31

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினர் யாழ். மாவட்டத்தில் கிரிக்கெட்டை வளர்த் தெடுக்கும் முகமாக மல்லாகத்தில் கிரிக்கெட் விளையாட்டு மைதானம் அமைப்பதற்கான காணி ஒன்றை குத்தகை அடிப்படையில் பெற்றுள்ளார்கள்.

மல்லாகம் சிறிபாஸ்கரன் விளையாட்டு மைதானமே அவ்வாறு குத்தகைக்கு பெறப்பட்டுள்ளது. மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரும் மற்றும் யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினரும் இது சம்பந்தமான ஒப்பந்தத்தில் கடந்த திங்கட்கிழமை கைச்சாத்திட்டுள்ளார்கள். கடந்த பல வருடங்களாக யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம் இயங்கி வருகின்ற போதிலும் தனக்கென ஒரு மைதானம் இன்மையால் பல்வேறு சிரமங்களுக்கும் முகம் கொடுத்து வந்த நிலையில் தற்போது சங்கத்துக்கென மைதானம் ஒன்று கிடைக்கப் பெற்றுள்ளமையால் எதிர்காலத்தில் அனைத்துத் தொடர்களையும் உரிய முறையில் நடத்த முடியும் என கிரிக்கெட் சங்கத்தினர் தெரிவித்துள்ளார்கள். (ம-86)



## ஆஸியின் தொடர் அவ்வளவுதான்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடருக்கு தயாராகாமல் புத்தாண்டு கொண்டாட காதலி அனுஷ்காவுடன் சுற்றுலாவுக்கு கிளம்பி விட்டார் விராட் கோக்லி.

இந்திய அணி அடுத்த வருடம் ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 ஒருநாள், 3 ரி-20 ஆட்டங்கள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. முதல் ஒருநாள் ஆட்டம் ஜனவரி 11ஆம் திகதி பேர்த்தில் நடக்கிறது. இந்த நிலையில் டோனி தலைமையிலான இந்திய அணி மீதான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. குறிப்பாக தற்போது டெஸ்ட் அணித் தலைவராக உள்ள கோக்லி, ஒருநாள் ஆட்டங்களுக்கும் விரைவில் தலைவராகும் நிலையில் அவர் ஓட்ட மழை பொழிய ரசிகர்கள் எதிர்பார்க்கின்றனர்.

இந்த ஆண்டு கோக்லி துடுப்பாட்டத்தில் பெரிதாக சோபிக்கவில்லை. 50ஆக இருந்த அவரது சராசரி இந்தவருடம் 36.64 ஆக குறைவடைந்துள்ளது. இந்த நிலையில் விராட் கோக்லி இந்திய அணியுடன் சேர்ந்து பயிற்சியில் கவனம் செலுத்தாமல் புத்தாண்டு கொண்டாட காதலி அனுஷ்காவுடன் சுற்றுலாவுக்கு கிளம்பி விட்டார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடுவரைத் தாக்கிய வழக்கு, வீரருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், டிசெ. 31

நடுவரைத் தாக்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட றேஞ்சர்ஸ்வீரரை எதிர் வரும் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் ஏவ்.ஏ. கிண்ணத்துக்காக நடத்திவரும் தொடரில் பருத்தித்துறை லீக்கில் பதிவுசெய்துள்ள கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்களில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற ஆட்டத்தில் றேஞ்சர்ஸ் அணியும் கலைமதி அணியும் மோதின. இதில் பிரதான நடுவர் றேஞ்சர்ஸ் வீரர் ஒருவரை மஞ்சள் அட்டை காண்பித்து எச்சரிக்கை விடுத்தார். ஆனால் எச்சரிக்கையை ஏற்க மறுத்த வீரர் தகாத வார்த்தைப் பிரயோகங்களை நடுவரை நோக்கி பிரயோகித்தமையால் நடுவர் அவரை சிவப்பு அட்டை காட்டி வெளியேற்றினார். ஆட்டத்தில் கலைமதி 2:0 என்று வெற்றிபெற்றது. ஆட்டத்தின் முடிவில் நடுவர்கள் ஓய்வறைக்குத் திரும்பிக் கொண்டிருந்த வேளையில் சிவப்பு அட்டை காட்டி வெளியேற்றப் பட்ட வீரரும் ஏனைய வீரர்களும் அவர்களின் ஆதரவாளர்களும் இணைந்து நடுவரைத் தாக்கினர். ரசிகர்களும் ஏனைய சிலரும் நடுவரை மீட்டு வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய சாலையில் அனுமதித்தனர். றேஞ்சர்ஸின் வீரர் மீது வழக்குத் தொடரப்பட்ட நிலையில் அவர் கடந்த திங்கட் கிழமை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதிமன்று எதிர்வரும் ஆறாம் திகதி வரை வீரரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது. (ம-23-109)

# யுனைற்ரெட்டின் தோல்வி எதிரொலியாக பதவி விலகுகிறார் முகாமையாளர் வான்



இங்கிலாந்து பிரீமியர் லீக் தொடரில் மான்செஸ்டர் யுனைற்ரெட் அணிக்கும் ஸ்டோக் சிற்றி அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் மான்செஸ்டர் யுனைற்ரெட் அணி தோல்வியடைந்திருந்த நிலையில் யுனைற்ரெட் அணியின் முகாமையாளரான வான் கால் பதவியிலிருந்து விலக முடிவுசெய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.
மான்செஸ்டர் யுனைற்ரெட் அணியின் தொடர் தோல்வி தொடர்பாக கருத்துத் தெரிவித்த வான் கால் நானாகவே பதவி விலக வேண்டிய காலம் நெருங்கிவிட்டது. இது தொடர்பாக நிர்வாகத்துடன் கலந்துரையாடவுள்ளேன். இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாட வேண்டிய கட்டாயம் நிச்சயம் உள்ளது. அணியின் தோல்விக்கு என்னை குறை கூறுவது முற்றிலும் தவறானது. என்னைப் பொறுத்தமட்டில் எனது பணிகளைச் சரிவரச் செய்துள்ளேன். ஆனால் எனது செயற்பாடு விவாதத்துக்கு உள்ளாகியுள்ளதால் அணியில் தொடருவது அர்த்தமற்றது. என்றார். (ம)

# இன்றுவரை முடிவுக்கு வராத நாக்பூர் ஆடுகள விவகாரம்



நாக்பூர் ஆடுகளம் குறித்து விமர்சனம் செய்த சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் நடுவரும் நியூசிலாந்தின் முன்னாள் வீரருமானஜெப் குரோவுக்கு முன்னாள் இந்திய வீரரான கிர்மானி கண்டனம் தெரிவித்துள்ளார்.
தென்னாபிரிக்கா – இந்தியா அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் நாக்பூரில் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் இந்தியா இலகுவான வெற்றி பெற்றது. இதனால் ஆடுகளத்தில் தவறு என்று விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. விமர்சகர்களில் முக்கியமானவர் சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் நடுவரும் நியூசிலாந்தின் முன்னாள் வீரருமான ஜெப் குரோ. இவரின் விமர்சனங்களை முன்னாள் இந்திய வீரரான கிர்மானி கண்டித்துள்ளார். அவர் தனது செய்திக் குறிப்பில் – நாக்பூர் ஆடுகளத்தை மட்டும் குறைகூற இயலாது. தென்னாபிரிக்க அணி நாக்பூரிலும் இந்திய அணி வான்கடே (மும்பை) ஆடுகளங்களிலுமா துடுப்பெடுத்தாடின. தென்னாபிரிக்காவுக்கு என்ன எழுதப்பட்டிருந்ததோ அதுவே இந்தியாவுக்கும். இந்திய வீரர்களால் முடிகிறது என்றால் ஏன் தென்னாபிரிக்க வீரர்களால் இயலவில்லை. ஜெப் குரோ ஆடுகளத்தை மட்டும் வைத்தே தனது விமர்சனங்களை முன்வைத்துள்ளார். இது கிரிக்கெட்டுக்கான ஆரோக்கிய அடையாளம் அல்ல. விமர்சனம் தேவைதான். ஆனால் கண்மூடித்தனமாக அவை அமையக்கூடாது. என்றார். (ம)

# வடக்கின் வர்ண இரவு நிகழ்வில் நட்சத்திரமாக டினேஜா தெரிவு



மாங்குளம், டிசெ. 31
பொதுநலவாய நாடுகளுக்கு இடையிலான பளுதூக்கல் தொடரில் வெண்கலப் பதக்கத்தையும் பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட தொடரில் தங்கப் பதக்கத்தையும் வென்ற வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவியான ஜே.ஜே.பி.டினேஜா வடமாகாணத்தின் சிறந்த விளையாட்டு நட்சத்திரமாகத் தெரிவு செய்யப்பட்டு வர்ண இரவுகள் நிகழ்வில் வடமாகாண முதலமைச்சரினால் நேற்றுக் கௌரவிக்கப்பட்டார்.
வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் நடத்திய 6ஆவது வர்ண விருது வழங்கும் நிகழ்வு நேற்று நெல்லியடி மத்திய கல்லூரியின் கலையரங்கில் இடம்பெற்றது. வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுநலவாய நாடுகளுக்கு இடையிலான பளுதூக்கல் தொடரில் 19வயதுப் பிரிவில் பங்குபற்றி வெண்கலப் பதக்கத்தைப் பெற்ற ஜே.ஜே.பி.டினேஜா, அதே வயதுப் பிரிவில் தங்கப்பதக்கத்தைப் பெற்ற யாழ். மத்திய கல்லூரி மாணவன் எஸ்.விஸ்ணுகாந், ஆகியோருடன் தேசிய விளையாட்டு விழாவில் பங்குபற்றி வெற்றிபெற்ற 14 வீரவீராங்கனைகளும், ஆண்களிற்கான கபடியில் வெள்ளிப் பதக்கத்தைப் பெற்ற வவுனியா மாவட்ட அணியும், உதைபந்தாட்டத்தில் வெண்கலப் பதக்கத்தைப் பெற்ற யாழ்., மன்னார் மாவட்ட இணைந்த அணி வீரர்களும் கௌரவிக்கப்பட்டதோடு இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான போட்டிகளில் பங்குபற்றி பதக்கங்களை அள்ளிய 54 வீர வீராங்கனைகளும், பெரு விளையாட்டுக்களில் பதக்கங்களைப் பெற்ற 10 பாடசாலைகளின் அணிகளும், கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட போட்டிகளில் பங்குபற்றி 63 வீர வீராங்கனைகளுடன் அவர்களிற்கான பயிற்றுவிப்பாளர்களும் கௌரவிக்கப்பட்டனர்.
இதேவேளை விளையாட்டுத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட மாகாண மட்டப் போட்டிகளில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த வி.ஜெனிற்றா, எஸ்.விதுசன், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ரி.அன்ரனி டெல்மன், ரி.டென்சிகா ஆகியோருடன், வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கே.கனகேஸ்வரி ஆகியோருக்கும் சிறப்பு பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.
இந்நிகழ்வில் வடமாகண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வடமாகாண சபை அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம், வடமாகாணசபை உறுப்பினரும் விளையாட்டுத்துறை இணை ணப்பாளருமான இ.ஆனல்ட், வடமாகாண சபை உறுப் பினர்களான வே.சிவயோகன், எஸ்.கஜதீபன், கே.தர்மலிங்கம், மற்றும் சி.அகில தாஸ் ஆகியோருடன் வடமாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர், விளையாட்டுதிணைக்கள உத்தியோகத்தர்கள் அனைவரும்கலந்து கொண்டனர்.
(ம-422,108)

# இன்று நியூசிலாந்து விழும் என்கிறார் தலைவர் மத்தியூஸ்



நியூசிலாந்துக்கு எதிராக இன்று நடைபெறும் மூன்றாவது ஒரு நாள் ஆட்டத்தில் வெற்றிபெறுவோம் என்று தெரிவித்துள்ள இலங்கை அணித்தலைவர் மத்தியூஸ் முதலிரு ஆட்டங் களில் இலங்கை சந்தித்த தோல்விக்கு காரணம் வீரர்கள் தேவையற்ற வகையில் ஆட முற்பட்டமையே என்றும் குறிப்பிட்டுள்ளார்.
நேற்றைய பயிற்சிக்குப் பின்னர் கருத் துத் தெரிவிக்கையிலேயே மத்தியூஸ் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் – நியூசிலாந்துக்கு எதிரான 2ஆவது ஒருநாள் ஆட்டத்தில் இலங்கை அணியின் மோசமான செயற்பாடு பார்ப்பதற்கே மிகவும் சங்கடமாக இருந்தது. குறிப்பாக எங்களது துடுப்பாட்டம் மிகவும் மோசமாக, பரிதாபமாக அமைந்தது. இலக்குகள் விழுந்தது எல்லாம் வீரர்களின் மோசமான முயற்சிகளால்தான். இதை எங்களால் கட்டுப்படுத்த முடியாமல் போனது. இதனால் பந்து வீச்சா ளர்களுக்கு போதிய வாய்ப்பளிக்க முடிய வில்லை. வீரர்களிடம் இது தொடர்பாகப் பேசி அவர்களை நல்ல மன நிலைக்கு திரும்ப முயற்சி செய்வோம். நாளைய ஆட்டத்தில் (இன்றைய ஆட்டத்தில்) நியூசிலாந்தை வீழ்த்து வோம் என்றார்.



லா லிகா தொடரில் இன்று நடைபெறவுள்ள ரியல் சொலிடாட் அணிக்கு எதிரான ஆட்டத்துக்காக பயிற்சியில் ஈடுபடும் ரியல் மட்ரிட் வீரர்கள். இந்த வருடத்தில் இந்த இரு அணிகளும் எதிர்கொள்ளும் [illegible] (ம)

NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
A/L 2018
ஆரம்பம்: 01.01.2016 வெள்ளி 9.00 A.M

கலைப் பிரிவு

| பாடம் | ஆனைப்பந்தி | யாழ்நகர் |
| --- | --- | --- |
| தமிழ் | A.K.கீர்த்திராஜன் | S.தங்கரூபன் |
| இந்து நாகரிகம் | T.ஸ்ரீநீஸ் | T.ஸ்ரீநீஸ் |
| அளவையியல் | P.கமல் | P.கமல் |
| அரசியல் | M.அசோக் | M.அசோக் |
| புவியியல் | S.R.பாலா | S.சபரீதன் |
| பொருளியல் | NS.கஜீதரன் | NS.கஜீதரன் |
| நாடக அரங்கியல் | S.சுகந்தன் | S.சுகந்தன் |
| வரலாறு | S.S.தாஸ் | S.S.தாஸ் |
| தொடர்பாடல் | V.நவநீதன் | V.நவநீதன் |
| I.C.T | V.தர்சிநாத் | V.தர்சிநாத் |
| கிறிஸ்தவம் | R.ஜோன்சன் | R.ஜோன்சன் |
| விவசாயம் | R.விக்கி | R.விக்கி |

வர்த்தகப் பிரிவு

| பாடம் | ஆனைப்பந்தி | யாழ்நகர் |
| --- | --- | --- |
| கணக்கீடு | K.பாலகஜன் | K.பாலகஜன் |
| பொருளியல் | NS.கஜீதரன் | NS.கஜீதரன் |
| வணிகக்கல்வி | S.K.பாலசபேஷ் | S.K.பாலசபேஷ் |

தொழில்நுட்ப பிரிவு

| பாடம் | ஆனைப்பந்தி | யாழ்நகர் |
| --- | --- | --- |
| Science for Technology | S.வாசு | S.உதிஸ் |
| Engineering Technology | S.உதிஸ் | S.உதிஸ் |
| Bio Technology | S.சுதா | S.தனேஸ் |

கணித உயிரியல் பிரிவு

| பாடம் | ஆனைப்பந்தி | யாழ்நகர் |
| --- | --- | --- |
| இரசாயனவியல் | S.வாசு | S.வாசு |
| பௌதீகவியல் | S.சசி | T.மோகன்ராஜ் |
| கணிதம் | S.விமலநாதன் | S.விமலநாதன் |
| உயிரியல் | S.சுதா | S.சுதா |

NEC கல்வி நிறுவனத்தின் 10ஆவது வருட நிறைவினை முன்னிட்டு 01.01.2016 வரை அனுமதி பெறும் அனைத்து மாணவர்களுக்கும் அனுமதி கட்டணம் இலவசம்

DCM
யாழ் நகர்
A/L 2018
✔கலை
✔வர்த்தகம்
✔தொழில்நுட்பம்
புதிய பிரிவுகள்
ஆரம்பம்
02.01.2016
சனி 8.00 மணிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.12.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.